بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحْمَدُہٗ وَنُصَلِّیْ عَلٰی رَسُوْلِہِ الْکَرِیْمِ وَعَلٰی عَبْدِہِ الْمَسِیْحِ الْمَوْعُوْد

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

தொகுதி 11

இதழ் 28&29

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

ஹிஜ்ரீ கமரீ 1448 - முஹர்ரம் 23 - 01 ஸஃபர்

ஹிஜ்ரீ ஷம்ஸி 1405 - வஃபா 09 - 16 ★ 09 - 16 ஜீலை 2026

## அல்லாஹ்வின் கட்டளை

يَاۤيُّهَا الَّذِيۡنَ اٰمَنُوۡا لَا تَخُوۡنُوا اللّٰهَ وَالرَّسُوۡلَ وَتَخُوۡنُوۡۤا اَمٰنٰتِكُمۡ وَاَنۡتُمۡ تَعۡلَمُوۡنَ

நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ்வுக்கும் (அவனுடைய) தூதருக்கும் நம்பிக்கைத் துரோகம் செய்யாதீர்கள். மேலும், உங்களை நம்பி ஒப்படைக்கப்பட்ட பொருள்களில் நீங்கள் தெரிந்து கொண்டே நம்பிக்கைத் துரோகம் செய்யாதீர்கள். (5:28)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸுர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸுர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## நபிமொழி — நம்பிக்கைத் துரோகம் செய்வது நயவஞ்சகத்தின் அடையாளங்களில் ஒன்றாகும்

عَنْ عَبْدِاللّٰهِ بْنِ عَمْرٍو، قَالَ: قَالَ رَسُولُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ: "أَرْبَعٌ مَنْ كُنَّ فِيهِ كَانَ مُنَافِقًا خَالِصًا، وَمَنْ كَانَتْ فِيهِ خَلَّةٌ مِنْهُنَّ، كَانَتْ فِيهِ خَلَّةٌ مِنْ نِفَاقٍ حَتَّى يَدَعَهَا. إِذَا حَدَّثَ كَذَبَ، وَإِذَا عَاهَدَ غَدَرَ، وَإِذَا وَعَدَ أَخْلَفَ، وَإِذَا خَاصَمَ فَجَرَ". غَيْرَ أَنَّ فِي حَدِيثِ سُفْيَانَ: وَإِنْ كَانَتْ فِيهِ خَصْلَةٌ مِنْهُنَّ، كَانَتْ فِيهِ خَصْلَةٌ مِنَ النِّفَاقِ.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'நான்கு பண்புகள் யாரிடம் இருக்கின்றனவோ, அவர் முழுமையான நயவஞ்சகர் ஆவார். எவரிடம் இந்தப் பண்புகளில் ஏதேனும் ஒன்று இருக்கிறதோ, அவர் அதை விட்டுவிடும் வரை அவரிடம் நயவஞ்சகத்தின் ஒரு பண்பு இருக்கும். அந்த நான்கு பண்புகள் இவையாகும்; அவர் நம்பிக்கைக்குரியவராக ஆக்கப்பட்டால் நம்பிக்கை துரோகம் செய்வார். அவர் பேசினால் பொய் பேசுவார்; ஒருவருடன் அவர் ஒப்பந்தம் செய்தால் துரோகம் செய்வார். ஒருவருடன் சண்டையிட்டால் ஏச்சுப் பேச்சுகளில் ஈடுபடுவார்.' (முஸ்லிம் கிதாபுல் ஈமான் - நயவஞ்சகத்தின் பண்புகள் குறித்த பாடம்)

* * * * *   * * * * * *

## வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பொன்மொழிகள் — நம்பகத்தன்மையில் மனிதனின் அழகு உள்ளது

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

'ஒவ்வொரு நம்பிக்கையாளரின் நிலையும் இதுவாகவே உள்ளது. அவர் தூய்மையுடனும், நன்றியுடனும் இருந்தால், அவர் இறைவனின் நண்பராக ஆகிவிடுகின்றார். ஆனால், ஈமானிய கட்டிடம் பாழடைந்துள்ளதென்றால், பின்னர் சந்தேகத்திற்கு இடமின்றி ஆபத்து இருக்கின்றது. எவருடைய உள்ளத்தின் நிலையையும் நாம் அறியோம். உள்ளத்தைப் பற்றிய அறிவு இறைவனுக்கு மட்டுமே உள்ளது. ஆனால் மனிதன் தனது துரோகத்தால் பிடிக்கப்பட்டு விடுகின்றான். இறைவனுடனான விவகாரம் சுத்தமாக இல்லாவிட்டால், பின்னர் பைஅத்தும் பயனளிக்காது; வேறு எதுவும் பயனளிக்காது. ஆனால், ஒருவர் முற்றிலும் இறைவனுக்கு உரியவராகவே ஆகிவிடும்போது, பின்னர் இறைவன் அவரைச் சிறப்பாகப் பாதுகாக்கின்றான். அவன் அனைவருக்கும் இறைவனாக இருக்கிறான். ஆனால் எவர் தன்னைத் தானே முற்றிலும் இறைவனுக்குரியவராக மாற்றிக் கொள்கின்றாரோ அவர் மீது இறைவன் தனது தனித்துவமான மகிமையை வெளிப்படுத்துகிறான்.

ஒருவர் தன்னை முற்றிலும் இறைவனுக்குரியவராக ஆக்கிக் கொள்வது என்பது இதுவே ஆகும். அதாவது, தனது நஃப்ஸிலிருந்து முற்றிலும் விடுபட வேண்டும்; மேலும், அதன் எந்தவொரு துகளும் எஞ்சியிருக்கக் கூடாது. இதனால்தான் நான் மீண்டும் மீண்டும் எனது ஜமாஅத்திடம் கூறுகிறேன்; உள்ளம் தூய்மையாக இல்லையென்றால், ஒருபோதும் பைஅத்தின் மீது பெருமை கொள்ளாதீர்கள்; உள்ளம் தூரமாக இருக்கும்போது கை மீது கை வைப்பதால் என்ன பயன்? இதயம் மற்றும் நாக்கு ஒன்றுபடவில்லையென்றால், பின்னர் அவர்கள் என் கை மீது (தனது) கையை வைத்து நயவஞ்சகமான உடன்படிக்கையை செய்கின்றனர்.

ஆக, நினைவிற் கொள்ளுங்கள்! அத்தகைய நபருக்கு இருமடங்கு தண்டனை கிடைக்கும். ஆனால், எவர் உண்மையாக ஒப்புக் கொள்கின்றாரோ, அவருடைய பெரும் பெரும் பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன; அவருக்கு ஒரு புதிய வாழ்க்கை கிடைக்கிறது.'(மல்ஃபூஸாத் தொகுதி 2, பக்கம் 165, அல்-ஹகம் 12 பிப்ரவரி 1903)

மேலும் மற்றோர் இடத்தில் அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

'மனிதனின் படைப்பில் இரண்டு வகையான அழகு உள்ளது. முதலாவது அழகிய விவகாரம் என்பது இதுவாகும். அதாவது மனிதன் இறைவனின் அனைத்து அமானிதங்களையும், உடன்படிக்கைகளையும் நிறைவேற்றுவதில் இந்த விஷயத்தை கருத்தில் கொள்ள வேண்டும். அதாவது, முடிந்த வரை எந்தவொரு கட்டளையும் மீறப்படக் கூடாது. இறைவனின் வேதத்தில் கூறப்பட்டுள்ள' رَاعُوْنَ என்ற சொல் இதனையே சுட்டிக் காட்டுகின்றது. அதே போன்று படைப்பினங்களின் அமானிதங்கள் மற்றும் உடன்படிக்கைகள் தொடர்பாகவும் இதே அளவுகோலை பின்பற்ற வேண்டும். அதாவது அல்லாஹ்விற்குரிய உரிமைகள் மற்றும் அடியார்களுக்குரிய உரிமைகளில் இறையச்சத்துடன் செயல்பட வேண்டும். இதுவே அழகின் விவகாரமாகும்; அல்லது இதை ஆன்மீக அழகு என்றும் சொல்லலாம்.' (ஸமீமா பராஹீனே அஹ்மதிய்யா பாகம் 5, பக்கம் 218)

* * * * *   * * * * * *

## முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் பொன்மொழிகள் — இறைவன் இமாம் ஹுஸைனுக்காக பழிவாங்கினான்

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் ஸூரத்துல் பக்கராவின் 284-வது வசனத்தின் விளக்கவுரையில் கூறுகிறார்கள்:

فَاِنۡ اَمِنَ بَعۡضُكُمۡ بَعۡضًا فَلۡيُؤَدِّ الَّذِى اؤۡتُمِنَ اَمَانَـتَهٗ وَلۡيَتَّقِ اللّٰهَ رَبَّهٗ

உங்களில் ஒருவர் தனது சகோதரர் மீது நம்பிக்கை வைத்து, அடமானம் இல்லாமல் (அமானிதமாக) அவரிடம் பணம் கொடுத்தால் பின்னர் எவரிடம் பணம் கொடுக்கப்பட்டதோ மேலும் எவர் நம்பிக்கைக்குரியவராக ஆக்கப்பட்டாரோ அவரது கடமை என்னவென்றால், நம்பி ஒப்படைத்தவர் கேட்கும்போது எந்த சாக்குப் போக்கும் கூறாமல் அந்த அமானிதத்தை திருப்பி ஒப்படைத்து விட வேண்டும். மேலும் அவர் அல்லாஹ்விற்கு அஞ்சிக் கொள்ளட்டும். இந்த இடத்தில் கடன் என்பது ஒரு அமானிதமாகக் குறிப்பிடப்பட்டுளளது. இதில் உள்ள நுட்பம் என்னவென்றால், உலகில் பொதுவான வழக்கப்படி அமானிதத்தை திருப்பிக் கொடுப்பது அவசியமாகக் கருதப்படுகிறது. ஆனால், கடனைத் திருப்பிச் செலுத்துவதில் ஆகுமற்ற சோம்பலும், கவனக்குறைவும் மேற்கொள்ளப்படுகிறது.

எனவேதான் அல்லாஹ்வின் பார்வையில், கடனும் ஒரு வகையான அமானிதமாக உள்ளது.

இந்த வசனத்திலிருந்து எல்லா வகையான அமானிதங்களை பாதுகாப்பதற்கும், அவற்றை குறித்த நேரத்தில் திருப்பிச் செலுத்துவதற்கும் ஒரு பொதுவான பாடம் கிடைக்கிறது. அதன் பக்கம் திருக்குர்ஆனின்

இதன் தொடர்ச்சி 9-ம் பக்கம்....

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

# அல் ஃபஸ்ல் இன்டர்நேஷனல் பத்திரிகையில் வெளியான ஹஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்வி - பதில்கள்

## அடிப்படை விவகாரங்களுக்கான பதில்கள்

### ஸம்ஸம் நீர் தொடர்பாக

**கேள்வி** : கேரளா, இந்தியாவிலிருந்து ஒரு நண்பர் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் சமூகத்தில் இவ்வாறு கடிதம் எழுதினார்: ஹஸரத் ஸாஹிப் ஸாதா மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் 'ஸீரத் காத்தமுன் நபிய்யீன்' என்ற புத்தகத்தில் ஹஸரத் ஹாஜிரா மற்றும் ஹஸரத் இஸ்மாயீல் (அலை) ஆகியோரின் சம்பவத்தில் இவ்வாறு எழுதியுள்ளார்கள்: அதாவது, வானவர் தனது குதிகாலால் பூமியைத் தட்டியதால் நீரூற்று வெளிப்பட்டது.

ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலை) அவர்கள் காலால் உதைத்ததால் நீரூற்று உருவானது என்றே நான் சிறுவயது முதல் இதுவரை படித்து வந்துள்ளேன். இது குறித்து வழிகாட்டல் வழங்கும்படி வேண்டுகிறேன்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் டிசம்பர் 7, 2023 தேதியிட்ட தமது கடிதத்தில் அந்தக் கேள்வி தொடர்பாக பின்வரும் வழிகாட்டலை வழங்கினார்கள். ஹுஸூர் அன்வர் கூறினார்கள்:

பதில் ; இதில் சிக்கலான எந்த விஷயமுமில்லை. ஹதீஸ், வரலாறு மற்றும் தஃப்ஸீர் நூல்களில் இந்த இரண்டு விதமான விஷயங்களைப் பற்றிய குறிப்பும் கிடைக்கின்றது. வானவர் தனது குதிகால் அல்லது கரங்களால் பூமியைத் தோண்டியபோது அந்த நீரூற்று உருவானது என்று எழுதப்பட்டுள்ளது. (ஸஹீஹ் புகாரி, கிதாபுல் அன்பியா, ஹதீஸ் எண் 3364).

அதேபோல், அந்த நீரூற்று இஸ்மாயீல் (அலை) அவர்கள் கடுமையான தாகத்தால் அழுதுகொண்டு தனது குதிகால்களைத் தட்டிக் கொண்டிருந்த அந்த இடத்திலிருந்து உருவானது என்றும் எழுதப்பட்டுள்ளது. (தஃப்ஸீர் அத்தப்ரீ, தொகுதி 13, பக்கம் 272, வெளியீடு: தாருல் துராத் அல்-அரபி, பெய்ரூத் 2001; ஸூரா இப்ராஹீம் வசனம் 38; அல்-காமில் ஃபீத்-தாரிக், ஆசிரியர்: இப்னு அல் அஸீர், மறைவு: ஹிஜ்ரி 630, தொகுதி 1, பக்கம் 80, வெளியீடு: தாருல் குதுபுல் இல்மியா, பெய்ரூட் 1999).

எனவே, முந்தைய நூல்களில் இரண்டு விதமான அறிவிப்புகளும் இருக்கின்றன. எனவே ஜமாஅத்தின் நூல்களிலும் இந்த இரண்டு விதமான கருத்துக்களும் இடம்பெற்றுள்ளன.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் தஃப்ஸீரே கபீரில் ஓர் இடத்தில் கூறுகின்றார்கள்:

ஹாஜிராவே நீர் செல் ! மேலும் இஸ்மாயீல் (அலை) அவர்களின் பாதங்களுக்குக் கீழே அல்லாஹ் ஒரு நீரூற்றை உருவாக்கியுள்ளதை காண்பீராக! என்று (வானவராகிய) அவர் கூறினார். (தஃப்ஸீரே கபீர், தொகுதி 3, பக்கம் 3, வெளியீடு: 2023).

மேலும், மற்றுமோர் இடத்தில் கூறினார்கள்: இஸ்மாயீல் என்ற சொல் ஸமிஅ என்பதிலிருந்து வந்துள்ளது. இதில் இந்த விஷயம் கூறப்பட்டுள்ளது; அதாவது, இறைவன் அவரது துஆவை செவியேற்பான். ஆக, ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலை) அவர்கள் பாதங்களை அடித்தார்கள்; மேலும் நீரூற்று வெளிப்பட்டது. (தஃப்ஸீர் கபீர், தொகுதி 7, பக்கம் 322, வெளியீடு: 2023).

மேலும், ஸாஹிப்ஸாதா மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் 'ஸீரத் காத்தமுன் நபிய்யீன்' என்ற நூலில் இவ்வாறு எழுதியுள்ளார்கள்:

ஹாஜிரா (அலை) அவர்கள் மிகுந்த வேதனையில் இருந்தபோது, ஏழு முறை வலம் வந்த பிறகு, ஒரு மறைமுகமான குரல் ஹாஜிரா அவர்களுக்கு இவ்வாறு கேட்டது. அதாவது, ஹாஜிராவே, 'இதோ, உனது குரலையும், உமது குழந்தையின் குரலையும் அல்லாஹ் செவியேற்று விட்டான். இந்தக் குரலைக் கேட்டு அன்னார் திரும்பி வந்தார்கள். அப்போது, எந்த இடத்தில் குழந்தை தாகத்தின் தீவிரத்தின் காரணமாக நிம்மதியற்ற நிலையில் துடித்துக் கொண்டிருந்ததோ அங்கு இறைவனின் வானவர் ஒருவர் நின்று கொண்டிருந்தார்; அவர் தமது குதிகால்களால் ஒரு பொருளை தோண்டி எடுத்துக் கொண்டிருப்பதைப் போன்று அடித்துக் கொண்டிருந்தார். ஹஸ்ரத் ஹாஜிரா அவர்கள் முன்னேறிச் சென்றபோது, எந்த இடத்தில் அவர் குதிகால்களை அடித்துக் கொண்டிருந்தாரோ அங்கு அன்னார் ஒரு நீரூற்றைக் கண்டார்கள். அதிலிருந்து தண்ணீர் பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருந்தது.

(ஸீரத் காத்தமுன் நபிய்யீன், பக்கம் 57).

எனவே, இந்தச் சம்பவம் தொடர்பாக இரண்டு வகையான அறிவிப்புகளும் உள்ளன. அவற்றிலிருந்து இஸ்மாயீல் (அலை) அவர்கள் தாகத்தின் காரணமாக தமது குதிகால்களை அடித்துக் கொண்டிருந்தார்கள் என்றும், மேலும் அதே இடத்திலேயே வானவரும் குதிகாலைத் அடித்தார்; மேலும் இருவரும் எங்கு தத்தமது குதிகால்களை அடித்தார்களோ அந்த இடத்திலிருந்தே அந்த நீரூற்று உருவானது என்று புரிந்து கொள்ள முடிகின்றது.

سُبْحَانَ اللّٰهِ وَبِحَمْدِهٖ

கேள்வி: கனடாவிலிருந்து ஒரு நண்பர் ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் சமூகத்தில் 'ஸுப்ஹானல்லாஹி வ பிஹம்திஹி' என்ற துஆ மற்றும் துரூதின் சரியான பொருள் மற்றும் விளக்கம் என்ன? என்று எழுதினார். ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் டிசம்பர் 28, 2023 தேதியிட்ட தமது கடிதத்தில், இது குறித்து கேள்விக்கு பதில் வழங்கினார்கள். ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்:

பதில்: 'ஸுப்ஹானல்லாஹி வ பிஹம்திஹி' என்ற துஆவிலோ அல்லாஹ்வை தூய்மையும், அவனது புகழும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

இதன் மொழியாக்கம் இவ்வாறாகும்: அதாவது, அல்லாஹ் எல்லாவிதமான குறைகள் மற்றும் குறைபாடுகளிலிருந்து தூய்மையானவன் ஆவான்; மேலும் எல்லா வகையான புகழும் அவனுக்கே உரியது. மேலும் அவனுக்கு அது அழகு சேர்க்கின்றது. ஹதீஸில் இந்த துஆவிற்கு மிக உயர்ந்த அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.

ஆக, ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஹுஸூர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'இரண்டு வார்த்தைகள் எத்தகையவை என்றால், அவை அல்லாஹ்விற்கு மிகவும் விருப்பமானவையாகும். இந்த கலிமாக்கள் நாவிற்கு மிகவும் இலகுவானவையாகும். (அதாவது அதனை உச்சரிப்பது மிகவும் எளிதாகும்) ஆனால், கியாமத் நாளன்று அமல்களின் தராசுவில் இது மிகவும் கனமானவையாக இருக்கும். அவை:

سُبْحَانَ اللّٰهِ وَبِحَمْدِهٖ سُبْحَانَ اللّٰهِ الْعَظِيْمِ

ஆகும். (ஸஹீஹ் புகாரி, கிதாபுத் தஃவாத்).

இது மட்டுமின்றி, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்கு இந்த துஆ இல்ஹாம் மூலமாகவும் கற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது, அதனுடன் துரூத் ஷரீஃபின் ஒரு பகுதியும் அடங்கும்.

ஆக, ஹுஸூர் அன்வர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

'அல்லாஹ் துன்பங்களிலிருந்து இரட்சிப்பு பெறுவதற்காக தனது நபிமார்களுக்கு சில துஆக்களைக் கற்றுத் தந்துள்ளான். எனக்கும் இல்ஹாம் மூலமாக ஒரு துஆவைக் கற்றுத் தந்துள்ளான். அது இதுவாகும்: سُبْحَانَ اللّٰهِ وَبِحَمْدِهٖ سُبْحَانَ اللّٰهِ الْعَظِيْمِ

(தர்யாகுல் குலூப், ரூஹானி கஸாயின் தொகுதி 15, பக்கம் 208, அடிக்குறிப்பு).

மற்றபடி, வழக்கமான துரூத் ஷரீஃபை பொருத்தவரை அது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் புனிதமான ஆளுமை மீது கருணையும், அருளும் இறங்குவதற்காக அல்லாஹ்விடத்தில் செய்யப்படும் ஒரு துஆ ஆகும், இதற்கு அல்லாஹ் நமக்கு திருக்குர்ஆனில் கட்டளையிட்டுள்ளான். உதாரணமாக, அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான்:

اِنَّ اللّٰهَ وَمَلٰٓئِكَتَهٗ يُصَلُّوْنَ عَلَى النَّبِيِّ

يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا صَلُّوْا عَلَيْهِ وَسَلِّمُوْا تَسْلِيْمًا

நிச்சயமாக அல்லாஹ்வும் இந்த நபியின் மீது தன் அருளைப் பொழிந்து கொண்டே இருக்கின்றான். மலக்குகளும் (இவருக்காகப் பிரார்த்தனைகள் செய்து கொண்டே இருக்கின்றனர். எனவே) நம்பிக்கை கொண்டவர்களே! இந்த நபி(கள் நாயகம் அவர்களு)க்கு எப்போதும் அருள் புரியுமாறும், சாந்தியும் சமாதானமும் கிடைக்குமாறும் நீங்களும் பிரார்த்தனை செய்யுங்கள்.' (அல்-அஹ்ஸாப்: 57)

இந்த முறையான துரூத் ஷரீஃபின் மொழியாக்கம் இதுவாகும்:

'அல்லாஹ்வே! நீ ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) மற்றும் அவர்களின் குடும்பத்தினர் மீது அருளைப் பொழிந்தது போலவே, முஹம்மது (ஸல்) மற்றும் அவர்களின் குடும்பத்தினர் மீதும் அருளைப் பொழிவாயாக! நிச்சயமாக நீ மிக அதிகமாக புகழுக்குரியவனும், கண்ணியமானவனும் ஆவாய்!

அல்லாஹ்வே! ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்கு நீ அருட்களை வழங்கியது போலவே, முஹம்மது (ஸல்) மற்றும் அவர்களின் குடும்பத்தினர் மீதும் அருட்களை பொழிவாயாக. நிச்சயமாக நீ மிகவும் புகழுக்குரியவனும் கண்ணியமானவனும் ஆவாய்.'

இந்த துரூத் ஷரீஃபில் اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ اَللّٰهُمَّ بَارِكْ عَلٰى مُحَمَّدٍ ஆகியவை தனித்தனியாக வந்துள்ளன.

இது பற்றி நான் எனது பல்வேறு குத்பா பேருரைகளிலும், உரைகளிலும் விளக்கியுள்ளேன். இங்கே சுருக்கமாகச் சொல்கிறேன்: '

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ

என்ற துஆவின் பொருள் என்னவென்றால்: 'அல்லாஹ்வே! நீ இந்த உலகில் முஹம்மது (ஸல்) அவர்களின் நினைவை மிகவும் உயர்ந்த நிலைக்குக் கொண்டு சென்று, அவர்களின் தூதுச் செய்தியை வெற்றிபெறச் செய்து மேலோங்கச் செய்வாயாக. மேலும் அவர்களின் ஷரீஅத்திற்கு நிரந்தர வெற்றியை வழங்கி மகத்துவம் வழங்குவாயாக, மறுமையில் உம்மத்தினருக்கு ஆதரவாக அவர்களின் பரிந்துரையை ஏற்றுக்கொண்டு, அவர்களுக்கு நற்கூலியைப் பன்மடங்கு அதிகரிப்பதன் மூலமாக அன்னாரின் மேன்மையை நிலைநாட்டுவாயாக!.'

اَللّٰهُمَّ بَارِكْ عَلٰى مُحَمَّدٍ

என்பதன் அர்த்தம்: 'அல்லாஹ்வே! முஹம்மது (ஸல்) அவர்களுக்கு நீ வழங்கிய கண்ணியத்தையும், மேன்மையையும் நீடித்திருக்கச் செய்து, அதை நிலைத்திருக்கச் செய்வாயாக!.'

எனவே, சுருக்கம் என்னவென்றால், 'அல்லாஹும்ம ஸல்லி அலா

இதன் தொடர்ச்சி 9-ம் பக்கம்....

# ஜுமுஆ பேருரை

## பணிவு மற்றும் தாழ்மை குணம் என்ற அம்சத்தின் ஒளியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நல்லொழுக்கப் பண்புகள் தொடர்பான மனம்கவர் நற்குறிப்புகள்

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 22 மே 2026** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1405 ஆண்டு **ஹிஜ்ரத்** மாதம் **22 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ○ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○

صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது வாழ்வின் ஒரு பகுதியான பணிவு மற்றும் தன்னடக்கம் குறித்து கூறப்பட்டு வந்தது. இன்றும் அதே குறிப்புதான் எடுத்துரைக்கப்படும். அன்னாருடைய பணிவின் தரம் எத்தகையதாக இருந்தது என்றால், சின்னச் சின்ன விஷயங்களின் உதாரணங்களைக் காட்டி அன்னார் (ஸல்) அதனை வெளிப்படுத்தி வந்தார்கள்.

உதாரணமாக, ஹஸ்ரத் யஹ்யா பின் அபீ கஸீர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்; ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

'ஓர் அடிமை எவ்வாறு உண்பாரோ, அவ்வாறே நானும் உண்கிறேன்; ஓர் அடிமை எவ்வாறு அமர்வாரோ, அவ்வாறே நானும் அமர்கிறேன். ஏனெனில், நானும் ஓர் அடியான் தானே.' அதாவது, தலைவர்கள் மற்றும் செல்வந்தர்களுக்குரிய பெருமையோ, சுயநலமோ, பகட்டோ என்னிடத்தில் இல்லை.

இதேபோல் மற்றோர் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது;

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் ஓர் ஒட்டகம் இருந்தது; அதன் பெயர் அஸ்பாஃ என்பதாகும். அது எத்தகைய வேகத்தைக் கொண்டிருந்தது என்றால், எந்தவோர் ஒட்டகமும் அதனை முந்திச் செல்ல முடியாது. ஒருமுறை ஒரு கிராமவாசி தனது இளம் ஒட்டகத்தின் மீது அமர்ந்து வந்தார்; போட்டியில் அந்த ஒட்டகம் அஸ்பாஃவை விட முந்திச் சென்றுவிட்டது. அஸ்பாஃ பின் தங்கிவிட்டதே; நீர் எப்படி முந்திச் செல்லலாம்? அல்லது அது முந்திச் செல்லும் போதே நீர் அதனைத் தடுத்திருக்கலாமே - ஏனெனில் அது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் ஒட்டகம் அல்லவா ? என்று முஸ்லிம்கள் எண்ணியதால், அவர்களுக்கு இது கடுமையான வருத்தத்தை ஏற்படுத்தியது. எவ்வாறிருப்பினும், மக்களின் இந்த அணுகுமுறையைக் கண்ட ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், இவ்வுலகில் எந்தவொரு பொருளை அல்லாஹ் உயர்த்தி வைக்கிறானோ, அதனை அவன் கீழே இறக்குவதும் அல்லாஹ்வின் அதிகாரமாகும். (ஸஹீஹுல் புஹாரீ, ஹதீஸ் எண்: 6501)

இதில் கோபப்படுவதற்கு ஒன்றும் இல்லை. இவ்வாறுதான் அல்லாஹ் செய்கிறான். பொருட்கள் மேலே செல்கின்றன; பிறகு கீழே வருகின்றன என்று கூறினார்கள்.'

பொதுவாக, இத்தகைய விஷயங்களால் சாதாரண மக்கள் பொறாமை கொண்டுவிடுவார்கள்; ஆனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கண்முன்னே எப்போதும் அல்லாஹ்வே இருந்தான். அவனது மேன்மையை மட்டுமே உலகிற்குக் காட்ட அன்னார் விரும்பினார்கள். இதில் கோபப்பட வேண்டிய அவசியம் என்ன இருக்கிறது? கோபப்பட தேவையில்லை; இதன் மூலமாக அல்லாஹ்வின் மேன்மைதான் வெளிப்படுகிறது என்று அன்னார் (ஸல்) எவ்வளவு பணிவோடு கூறுகின்றார்கள் எனப் பாருங்கள்!

அடுத்து, பணிவிற்கான மற்றுமோர் உதாரணத்தை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் எடுத்துரைக்கின்றார்கள்:

'நான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் உம்ராவிற்காக அனுமதி வேண்டினேன். அன்னார் (ஸல்) எனக்கு அனுமதி வழங்கியதோடு, எனது சகோதரரே! உமது துஆவில் என்னை மறந்துவிடாதீர்! என்று கூறினார்கள்.'

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

அன்னார் (ஸல்) கூறிய இந்த ஒரு வார்த்தைக்குப் பகரமாக எனக்கு முழு உலகமும் கிடைத்திருந்தாலும் கூட, எனக்கு இந்தளவுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டிருக்காது.' (ஸுனன் அபூதாவூத், அறிவிப்பு எண்: 1498)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் ஓதுவதை அல்லாஹ் கடமையாக்கியுள்ளான். மேலும், து ஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கும் அதனை ஒரு நிபந்தனையாக ஆக்கியுள்ளான்; ஆனால், அன்னாரது பணிவின் உச்சம் எத்தகையதாக இருந்தது என்றால், அன்னார் (ஸல்) தம்மை பின்பற்றக்கூடிய ஒருவரிடம், எனக்காக துஆ செய்வீராக! என்று கூறுகிறார்கள்!

எந்தவொரு வேலையைச் செய்வதையும் அன்னார் (ஸல்) கௌரவக் குறைச்சலாகக் கருதியதில்லை; மிகச் சிறிய வேலையாக இருந்தாலும் அதனைத் தாமே செய்து மற்றவர்களுக்குக் காட்டினார்கள்; இன்னும் கூறுவதென்றால், (மற்றவர்களுக்குக்) கற்றுக் கொடுத்து வந்தார்கள்.

உதாரணமாக, ஹஸ்ரத் அபூஸயீத் குத்ரீ (ரலி) அவர்கள் அறிவிக்கும் ஓர் அறிவிப்பு இவ்வாறு உள்ளது:

'ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஒரு சிறுவனைக் கடந்து சென்றார்கள். அவன் ஓர் ஆட்டின் தோலை உரித்துக் கொண்டிருந்தான். அப்போது அன்னார் (ஸல்) அவனைச் சற்றே விலக்கிவிட்டு, சற்றே பின்வாங்கு; நான் உனக்குச் சரியான முறையைக் காட்டுகிறேன். ஏனெனில், தோல் உரிப்பதில் உனக்கு அந்தளவுக்குத் தேர்ச்சி இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை என்று கூறினார்கள். பின்னர் அன்னார் (ஸல்) தமது கரத்தைத் தோலுக்கும், இறைச்சிக்கும் இடையில் நுழைத்து, அது அன்னாரின் அக்குள் பகுதி வரை மறையும் அளவுக்கு உள்ளே கொண்டு சென்றார்கள். பிறகு, சிறுவனே! இவ்வாறு செய்! இந்த முறையில் தோலை உரி! என்று அன்னார்(ஸல்) கூறினார்கள்.' அன்னார் (ஸல்) அவனது முழு வேலையையும் செய்து கொடுத்ததோடு, அவனுக்குக் கற்றும் கொடுத்தார்கள். (ஸுனன் அபூதாவூத், ஹதீஸ் எண்: 185)

இதேபோல், பணிவோடு மற்றவர்களின் வேலைகளைச் செய்து கொடுத்ததற்கான மற்றுமோர் அறிவிப்பு இவ்வாறு உள்ளது; ஹஸ்ரத் கப்பாப் (ரலி) அவர்களின் மகளிடமிருந்து வரும் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது.

அவர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் ஆட்டின் பாலைக் கறப்பதற்காக ஆட்டைக் கொண்டு வந்தார். அன்னார் (ஸல்) அந்த ஆட்டைக் கட்டிப்போட்டு, அதன் பாலைக் கறந்தார்கள். பிறகு, உன்னிடமிருக்கும் பெரிய பாத்திரத்தை என்னிடம் கொண்டு வா! என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். அவர் ஒரு பாத்திரத்தைக் கொண்டு வந்திருந்தார். இதை விடப் பெரிய பாத்திரத்தைக் கொண்டு வா! என்று அன்னார் கூறினார்கள். அவர் கூறுகிறார்: எனவே நான் ஒரு பெரிய பாத்திரத்தைக் கொண்டு வந்தேன்; அன்னார் (ஸல்) அதில் பால் கறந்தார்கள்; அது நிரம்பி விட்டது. பின்னர், நீயும் பருகு! உனது அண்டை வீட்டாருக்கும் பருகக் கொடு! என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். (முஸ்னத் அபீ தாவூத், ஹதீஸ் எண்: 1768)

நிச்சயமாக, அன்னாரது துஆவின் பரக்கத்தினால் அதில் அசாதாரணமான அளவு பால் அதிகரித்திருக்கும் என்பதை அன்னார் உணர்ந்திருப்பார்கள். எனவேதான் அன்னார் (ஸல்) அவரிடம், உனக்குக் கிடைத்த இந்த பரக்கத்தை மற்றவர்களுக்கும் கொடுப்பாயாக என்று கூறினார்கள்.

அந்த நேரத்தில் ஆட்டிலிருந்து வழக்கத்தை விட இரு மடங்கு பால் கறக்கப்பட்டது.

ஸலாம் கூறுவதிலும், சபைகளில் அமர்வதிலும் கூட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பணிவான நிலையும், மிக உயரிய நல்லொழுக்கங்களின் முன்மாதிரியும் நமக்குக் காணக் கிடைக்கிறது.

உதாரணமாக, ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

'யாரேனும் ஒருவர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு முன்னால் வந்தால், அன்னார் (ஸல்), அவருடன் கைகுலுக்குவார்கள். அந்த நபர் தனது கையைத் தானாகவே பின்னுக்கு இழுக்கும் வரை, அன்னார் (ஸல்) தமது கையை அவரது கையிலிருந்து இழுத்துக் கொள்ள மாட்டார்கள். அதேபோன்று, அந்த நபர் தனது முகத்தைத் தானாகவே திருப்பிக் கொள்ளும் வரை, அன்னார் (ஸல்) தமது அருளுக்குரிய முகத்தை அவரது முகத்திலிருந்து திருப்பிக் கொள்ள மாட்டார்கள். மேலும், அன்னாருடன் அமர்ந்திருப்பவருக்கு முன்னால், அன்னார் (ஸல்) தமது கால்களை நீட்டி அமர்ந்திருப்பதை எவரும் ஒருபோதும் கண்டதில்லை. '(ஜாமிஉத் திர்மிதி, பாப் 46. ஹதீஸ் எண்: 2490)

மற்றோர் அறிவிப்பு ஹஸ்ரத் அபூ முஸன்னா அம்லூக்கீ (ரலி) அவர்களிடமிருந்து இவ்வாறு உள்ளது; அவர்கள் கூறுகிறார்கள்:

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களும், அன்னாருக்கு முன்னர் வந்த நபிமார்கள் (அலைஹிமுஸ்ஸலாம்) ஆகியோரும் கைத்தடியின் உதவியோடு நடந்து வந்தார்கள்; அதன் மீது சாய்ந்து கொள்வார்கள். (ஸுபுலுல் ஹுதா வர் ரஷாத், தொகுதி 7, பக்கம் 32, தாருல்

குதுபில் இல்மியா)

இந்தக் கைத்தடியானது எவ்வித அதிகாரத்தையோ அல்லது தமது பெருமையையோ வெளிப்படுத்துவதற்காக இருக்கவில்லை. மாறாக, அது அல்லாஹ்விடத்தில் அன்னாரது பணிவையும், தன்னடக்கத்தையும் வெளிப்படுத்தும் விதமாகவே அமைந்திருந்தது. அதிலும், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் பணிவு மற்ற அனைவரையும் விட மிக மேலானதாக இருந்தது.‘

பிறகு, பணிவு குறித்த அறிவுரையையும் அன்னார் (ஸல்) மிக ஞானமிக்க முறையில் வழங்கி வந்தார்கள். உதாரணமாக அறிவிப்பில் வருகிறது; இப்னு ஹஸ்ம் அவர்கள் அறிவிக்கிறார்கள்: ‘ஒருமுறை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு முன்னால் ஒட்டகக்காரர்களுக்கும் ஆட்டுக்காரர்களுக்கும் இடையே தற்பெருமை பேசும், பெருமை பாராட்டும் போட்டி ஏற்பட்டது. அதிக ஒட்டகங்களை வைத்திருந்தவர்கள், நாங்கள் உங்களை விடப் பெரியவர்கள்; எங்களது செல்வத்தின் அளவும் மிக அதிகமானது என்று கூறினர். ஆடுகளை வைத்திருந்தவர்களோ, எங்களது எண்ணிக்கையே அதிகம் என்று கூறினர். விவாதமும் போட்டியும் நடந்து கொண்டிருந்த அந்த இடத்திற்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சென்று, மூஸா நபியாக அனுப்பப்பட்டார்; அவரும் ஆடுகளை மேய்த்தார். தாவூத் நபியாக அனுப்பப்பட்டார்; அவரும் ஆடுகளை மேய்த்தார். நானும் நபியாக அனுப்பப்பட்டுள்ளேன்; மேலும் நானும் எனது குடும்பத்தாரின் ஆடுகளை அஜ்யாத் என்ற இடத்தில் மேய்த்து வந்தேன் என்று கூறினார்கள்.

(ஸூனனுல் பக்ரா லில் நிஸாயீ. கிதாபுத் தஃப்ஸீர் ஸூரா தாஹா, ஹதீஸ் எண்: 11262, தொகுதி 10, பக்கம் 171 - 172)

இதன் மூலம் பெருமை பேசியவர்களுக்கும் அன்னார் (ஸல்) அறிவுரை வழங்கினார்கள்; அதேசமயம் யாரிடம் பெருமை காட்டப்பட்டதோ - அதாவது ஆடு வளர்ப்பவர்களைச் சிறியவர்களாகக் கருதியவர்களின் செயலால் மனவருத்தம் அடைந்திருந்த அவர்களின் உள்ளத்திற்கும் அன்னார் (ஸல்) ஆறுதல் அளித்தார்கள்.

அன்னார் (ஸல்) கூறும்போது குறிப்பிட்ட அஜ்யாத் என்பது, மக்காவில் ஸஃபா மலைக்கு அருகில் உள்ள ஓர் இடமாகும். இந்த இடம் ஜயாத் என்றும் கூறப்படுகிறது. (முஃஜமுல் பல்தான், தொகுதி 1, பக்கம் 130)

அன்னாரிடம் எந்தவொரு தற்பெருமையும் இருக்கவில்லை. ஏழைகளையும் அன்னார் (ஸல்) மிகுந்த பணிவோடு சந்தித்து, அவர்களின் உள்ளங்களை மகிழ்வித்து வந்தார்கள். உதாரணமாக, ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

கிராமத்துவாசிகளில் ஸாஹிர் என்ற பெயர் கொண்ட ஒரு மனிதர் இருந்தார். அவர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்காக கிராமத்தின் விசேஷமான பொருட்களை கொண்டு வருவார். அதாவது கிராமத்திலிருந்து பல்வேறு பொருட்களை கொண்டு வருவார். அவர் திரும்பிச் செல்லும்போது, அன்னாரும் அவருக்கு ஏராளமான பொருட்களையும், செல்வத்தையும் வழங்கி அனுப்பி வைப்பார்கள். ஸாஹிர், நமது கிராமத்து நண்பர்; நாம், அவரது நகரத்து நண்பர் என்று அன்னார் (ஸல்) கூறுவார்கள். ஒரு நாள், ஸாஹிர் சந்தையில் தமது சில பொருட்களை விற்பனை செய்து கொண்டிருந்தார்.

அப்போது ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்கள் அங்கு வருகை தந்து, அவருக்குப் பின்னாலிருந்து அவரைத் தமது நெஞ்சோடு அணைத்துக் கொண்டார்கள். ஹஸ்ரத் ஸாஹிரால் அன்னாரைப் பார்க்க முடியவில்லை. அவர், யார் இது? என்னை விட்டுவிடுங்கள் என்று கூறினார். ஆனால், அவர் திரும்பிப் பார்த்தபோது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை அடையாளம் கண்டு கொண்டார். உடனே, அவர் தமது முதுகை நபி கரீம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய நெஞ்சோடு இன்னும் அதிகமாகச் சேர்த்துக் கொள்ளத் தொடங்கினார். அப்போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், இந்த அடிமையை விலைக்கு வாங்குபவர் யார்? என்று கேட்கத் தொடங்கினார்கள். அதற்கு , அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அப்படியென்றால் என்னை ஒரு நஷ்டமான வியாபாரப் பொருளாகவே காண்பீர்கள்; என்னை யார் வாங்கப் போகிறார்கள் என்று ஹஸ்ரத் ஸாஹிர் (ரலி) கூறினார். அதற்கு ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்கள், அல்லாஹ்வின் பார்வையில் நீ நஷ்டமான வியாபாரப் பொருள் அல்ல அல்லது அல்லாஹ்வின் முன்னிலையில் நீ மிகவும் மதிப்புமிக்கவன் என்று கூறினார்கள். (ஸஹீஹ் இப்னு ஹபான், கிதாபுல் கழ்ர் வல் அபாஹா, ஹதீஸ் எண்: 5790)

இதே சம்பவத்தை ஒரு குத்பாவில் எடுத்துரைக்கும்போது, ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:

‘அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்கு ஒரு ஸஹாபி இருந்தார். அவர் ஏதோ ஒரு பிறவிக் குறைபாட்டின் காரணமாக மிகவும் அவலட்சணமான தோற்றத்தைக் கொண்டிருந்தார். அதாவது அவரது முகம் அந்த அளவு அழகாக இருக்கவில்லை. அதோடு அவர் மிகவும் ஏழையாக இருந்தார். அவரது உடலும், ஆடைகளும் தூசி படிந்து காணப்பட்டன. அந்த நிலையிலேயே வியர்வையில் நனைந்தவராகச் சந்தையில் யாரோ ஒருவருடைய ஒரு பொருளை அவர் விற்றுக் கொண்டிருந்தார். ஆனால், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உள்ளத்தைக் கவர்ந்த ஒரு விஷயம் அந்த ஸஹாபியிடம் இருந்தது; அன்னார் (ஸல்) அவரை மிகவும் மதித்து வந்தார்கள்.

அந்த ஸஹாபிக்குத் தன் மீதே ஒருவித அருவருப்பு ஏற்பட்டுக் கொண்டிருந்த அந்த வேளையில்தான் - அதாவது, நான் வியர்வையில் நனைந்திருக்கிறேன், என் மீது தூசி படிந்துள்ளது என்று தம்மைக் குறித்து எண்ணி, ஒருவேளை அவர் மனதிற்குள் கலங்கிக் கொண்டிருந்திருக்கலாம்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அவருக்குப் பின்னால் வந்து, சிறுவர்களுடன் விளையாடுவதைப் போல் தமது கரங்களால் அவரது கண்களை மூடினார்கள். அவர் தொட்டுப் பார்த்து, இவை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கரங்கள்தான் என்பதை உணர்ந்துகொண்டார். ஏனெனில், அன்னாரின் உடலில் ரோமங்கள் இருக்கவில்லை அல்லது மிகக் குறைவாக இருந்தன. அத்துடன் அன்னாரின் உடலும் மிக மென்மையாக இருந்தது.

அதனை உணர்ந்ததும், அவரும் மிகுந்த அன்போடு தனது உடலை அன்னாரின் உடலோடு தேய்க்கத் தொடங்கினார். இதனால் அன்னாரின் உடலும் ஆடைகளும் கூட அழுக்காகத் தொடங்கின; ஆனால், அன்னார் (ஸல்) அதனை ஒருபோதும் தவறாகக் கருதவில்லை. அன்னார் (ஸல்) அவர் மீது கைவைத்து, இவர் எனது அடிமை; இவரை விலைக்கு வாங்குபவர் எவரேனும் உண்டா என்று கேட்டார்கள். இதனால் அந்த ஸஹாபியின் உள்ளம் உருகிப்போனது. அவர் அன்னாரிடம், எனது எஜமானரே! நானோ எவ்வித லாபமும் இல்லாத, எவ்வித மதிப்புமற்றவனாவேன்; என்னை யார் வாங்குவார்கள்? என்று கூறினார். அதற்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், அவ்வாறு ஒருபோதும் கிடையாது; அல்லாஹ்வின் பார்வையில் உமக்கு உயர்ந்த மதிப்பு உள்ளது என்று கூறினார்கள்.‘

ஹஸ்ரத் ஹஸன் பின் அலீ (ரலி) அவர்கள், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உயரிய நல்லொழுக்கங்கள், மக்களுடன் அன்னார் (ஸல்) பணிவாகவும், கண்ணியமாகவும் பழகிய விதம் மற்றும் அன்னாருடைய கம்பீரமான தோற்றம் ஆகியவற்றை படம் பிடித்து காட்டியவாறு ஓரிடத்தில் இவ்வாறு கூறுகிறார்கள்:

நான் எனது மாமா ஹிந்த் பின் அபீ ஹாலா அவர்களிடம் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய அங்க அடையாளங்களைக் குறித்துக் கேட்டேன். அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அங்க அடையாளத்தை மிக அழகாக எடுத்துரைப்பவராக இருந்தார்கள்; அவர்கள் என் முன்னிலையில் அதனைக் குறித்துப் பேச வேண்டும் என்று நான் விரும்பினேன்.

அதற்கு அவர்கள், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மிகுந்த கம்பீரமும், அழகும் பொருந்திய தோற்றம் கொண்டவராக இருந்தார்கள். அன்னாருடைய அருளுக்குரிய முகம் பதினான்காம் இரவு நிலவைப் போலப் பிரகாசித்துக் கொண்டிருந்தது என்று கூறி, அந்த முழுமையான ஹதீஸையும் எடுத்துரைத்தார்கள்.‘(குத்பாத்தே மஹ்மூத், தொகுதி 3, பக்கம் 663)

ஹஸ்ரத் ஹஸன் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

‘நான் இந்த அறிவிப்பை நெடுங்காலமாக ஹஸ்ரத் ஹுஸைன் அவர்களிடம் இருந்து மறைத்து வைத்திருந்தேன். பின்னர் ஒருநாள், நான் பெற்ற தகவல்களை அவரிடம் எடுத்துரைத்த போதுதான், அவர் இந்த விஷயத்தில் என்னை விட முந்திக் கொண்டு விட்டார் என்பதும், நான் கேட்பதற்கு முன்பே அவரிடம் இதைப் பற்றிக் கேட்டுவிட்டார் என்பதும் எனக்கு தெரிய வந்தது. அதுமட்டுமன்றி, அவர் தமது தந்தையிடமும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அவர்கள் வீட்டிற்குள் வரும்போதும், வெளியே செல்லும்போதும் எப்படி இருப்பார்கள், அன்னாருடைய தோற்றம் எவ்வாறு இருக்கும் என்பதையெல்லாம் கேட்டுத் தெரிந்து வைத்திருந்தார்; எவ்வித விபரத்தையும் அவர் விட்டுவைக்கவில்லை.‘

ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் அவர்கள் கூறுகிறார்கள்:

‘நான் எனது தந்தையிடம் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வீட்டிற்குள் நுழையும் போது உள்ள விபரங்களைக் குறித்துக் கேட்டேன்.

முதலில் கூறப்பட்ட விஷயங்கள் வெளி உலகத்தைப் பற்றிய விஷயங்களாக இருந்தன. வீட்டு விபரங்களை ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம் கேட்டபோது அவர்கள் கூறினார்கள்:

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தமது வீட்டிற்கு வருகை தந்தால், வீட்டில் இருக்கும் நேரத்தை மூன்று பகுதிகளாகப் பிரித்துக் கொள்வார்கள். ஒரு பகுதியை அல்லாஹ்வுக்காக அர்ப்பணிப்பார்கள்; ஒரு பகுதியைத் தமது குடும்பத்தினருக்காகவும், மறுபகுதியைத் தமக்காகவும் ஒதுக்கிக் கொள்வார்கள். பிறகு, தமக்காக ஒதுக்கிய அந்தப் பகுதியையும் தமக்கும் மக்களுக்குமிடையே பகிர்ந்து கொள்வார்கள். அதில், முக்கிய ஸஹாபிகளின் வாயிலாகப் பொதுமக்களுக்கு மார்க்க விஷயங்களைச் சென்றடையச் செய்வார்கள்; அவர்களிடம் எந்தவொரு விஷயத்தையும் மறைத்து வைக்க மாட்டார்கள்.

மேலும், உம்மத்திற்குரிய நேரத்தைப் பகிர்ந்தளிப்பதில் அன்னாருடைய நடைமுறை எவ்வாறு இருந்தது என்றால், சந்திப்பதற்கு அனுமதி வழங்கும் போது மார்க்கத்தில் சிறந்து விளங்கும் சான்றோர்களுக்கு முன்னுரிமை அளிப்பார்கள். மார்க்கத்தில் அவர்கள் பெற்றிருந்த அந்தஸ்தைப் பொருத்து அவர்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டது. சிலருக்கு ஒரு தேவை இருக்கும்; சிலருக்கு இரு தேவைகள் இருக்கும்; இன்னும் சிலருக்குப் பல தேவைகள் இருக்கும். அன்னார் (ஸல்), அவர்களின் தேவைகளை நிறைவேற்றுவதில் அவர்களுடனேயே மூழ்கியிருப்பார்கள். மேலும்,

திருக்குர்ஆனிலிருந்து...

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

அவர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் விதமாக, அவர்களுக்கும் ஒட்டுமொத்த உம்மத்திற்கும் சீர்திருத்தத்தை ஏற்படுத்தக் கூடிய பணிகளில் அவர்களை ஈடுபடுத்துவார்கள்; அவர்களுக்குப் பயனுள்ள விஷயங்களை கற்றுக்கொடுப்பார்கள். அதோடு, இங்கு வந்திருப்பவர்கள், வராதவர்களுக்கு இந்த விபரங்களைச் சென்றடையச் செய்யுங்கள். மேலும், தங்களது தேவைகளை என்னிடம் நேரடியாகக் கொண்டு சேர்க்க முடியாதவர்களின் தேவைகளை என்னிடம் கொண்டு வந்து சேருங்கள். ஏனெனில், தங்களது தேவைகளை ஆட்சியாளரிடம் நேரில் கொண்டு சேர்க்கும் தகுதியற்ற ஒருவரின் தேவையை எவர் கொண்டு சேர்க்கிறாரோ, அவருக்கு அல்லாஹ் மறுமை நாளில் உறுதியான நிலையை வழங்குவான் என்று கூறுவார்கள்.‘

எனவே, இதில் பல்வேறு இடங்களில் நியமிக்கப்பட்டிருக்கும் பொறுப்பாளர்களுக்கும் ஒரு படிப்பினை உள்ளது; அவர்கள் தங்களுக்குக் கீழ் உள்ள தேவையுடையோரின் விபரங்களை கண்டிப்பாக தலைமையகத்திற்குக் கொண்டு சேர்க்க வேண்டும்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் இத்தகைய நல்ல விஷயங்களைப் பற்றியே எப்போதும் பேசப்படும்; இவற்றைத் தவிர வேறு எதனையும் (வீணான பேச்சுகளை) அன்னார் (ஸல்) எவரிடமிருந்தும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். மக்கள் அன்னாரிடம் வேண்டியவர்களாக வருவார்கள். பின்னர் ஏதேனும் ஒன்றைப் பெற்றுக் கொள்ளாமல் வெறுமனே அவர்கள் திரும்பிச் செல்ல மாட்டார்கள்; அவர்கள் அங்கிருந்து புறப்படும் போது மற்றவர்களுக்கும் நன்மையின் பக்கம் வழிகாட்டுபவர்களாகவே வெளியேறுவார்கள்.

ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

‘பிறகு நான் எனது தந்தையிடம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் வீட்டிற்கு வெளியே செல்லும் போது அவர்களது நடைமுறை எவ்வாறு இருக்கும் என்று கேட்டேன். அதற்கு அவர்கள் கூறினார்கள்:

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பயனுள்ள பேச்சைத் தவிர வேறு எதையும் பேச மாட்டார்கள். அன்னார் (ஸல்) ஸஹாபிகளின் உள்ளங்களை இணக்கமாக்குவார்களே தவிர, அவர்களை வெறுப்படையச் செய்ய மாட்டார்கள்.

ஒவ்வொரு சமுதாயத்தின் கண்ணியமிக்கவர்களையும் மதித்து, அவரையே அச்சமூகத்திற்குப் பொறுப்பாளராக நியமிப்பார்கள். (வரவிருக்கும் ஆபத்துகளைக் குறித்து) மக்களை எச்சரிப்பார்கள்; அதேவேளையில், அவர்களிடம் முன்னெச்சரிக்கையாகவும் இருப்பார்கள். ஆயினும், அத்தகைய எச்சரிக்கை உணர்வு அன்னாருடைய இன்முகத்திலோ அல்லது நற்பண்புகளிலோ எந்தவொரு மாற்றத்தையும் ஏற்படுத்தாது.

அதாவது, ஏதேனும் ஒரு நபரைக் குறித்து சந்தேகம் ஏற்பட்டால், அது குறித்துச் ஸஹாபிகளை எச்சரிப்பார்கள்; ஆனால் அதற்காக அந்த நபரிடம் காட்டும் அணுகுமுறையை மாற்றிக் கொள்ள மாட்டார்கள். மாறாக ஒவ்வொருவரிடமும் நல்லொழுக்கத்துடனேயே நடந்து கொள்வார்கள்.

ஆம்! எச்சரிக்கை தேவைப்படும் இடத்தில் எச்சரிக்கையாகவே இருப்பார்கள். ஏனெனில் சந்திக்கக் கூடியவர்களில் சிலர் சந்தேகத்திற்குரியவர்களாகவும் இருக்கக்கூடும்.

அன்னார் (ஸல்) தமது ஸஹாபிகளைக் கண்காணித்துக் கொண்டே இருப்பார்கள்; மேலும், மக்களின் நிலைமைகளைக் குறித்து மக்களிடமே விசாரித்துத் தெரிந்து கொள்வார்கள். நல்ல விஷயங்களைப் பாராட்டி, அதனை ஊக்குவிப்பார்கள்; தீமையான விஷயங்களின் தீமைகளை எடுத்துக் கூறி, அதன் வேகத்தைக் கட்டுப்படுத்துவார்கள்.

அன்னார் (ஸல்) அனைத்து விஷயங்களிலும் நடுநிலையைக் கடைப்பிடிப்பவர்களாக இருந்தார்கள்; முரண்பாடுகளை விட்டு தூயவர்களாக வாழ்ந்தார்கள். மக்கள் (மார்க்க விஷயத்தில்) கவனமற்றவர்களாக ஆகிவிடுவார்களோ அல்லது சோர்வடைந்து விடுவார்களோ என்று எண்ணும் அளவுக்கு அன்னார் ஒருபோதும் அலட்சியமாக இருந்ததில்லை. அன்னார் (ஸல்) ஒவ்வொரு சூழ்நிலைக்கும் எப்போதும் தயாராகவே இருப்பார்கள். அன்னார் (ஸல்) தமக்குரிய உரிமைகளில் பின்வாங்கவும் மாட்டார்கள்; அதேசமயம் வரம்பு மீறி முன்னேறவும் மாட்டார்கள். எது நீதியோ, அந்த அளவுக்கு மட்டுமே செயல்படுவார்கள்.

மக்களில் மிகச் சிறந்தவர்களே அன்னாருக்கு மிக நெருக்கமானவர்களாக இருந்தார்கள். பிறருக்கு அதிக நலம் நாடக் கூடியவரே அன்னாருடைய பார்வையில் மிகச் சிறந்தவராகக் கருதப்பட்டார்; அதேபோல், பிறரிடம் காட்டும் பரிவிலும், உதவிக் கரங்கள் நீட்டுவதிலும் மற்றவர்களை விட முந்தி இருப்பவரே அன்னாருடைய பார்வையில் மிக உயர்ந்த அந்தஸ்தைப் பெற்றிருந்தார்.‘

ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் அவர்கள் கூறுகிறார்கள்:

பின்னர் நான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் சபையைப் பற்றிக் கேட்டேன். அதற்கு அவர்கள் கூறினார்கள்:

அன்னார் (ஸல்) எழும்போது, அமரும்போது என எப்போதும் இறைவனை நினைவு கூர்ந்த வண்ணமே இருப்பார்கள். அன்னார் (ஸல்) ஏதேனும் ஒரு சமூகத்தாரிடம் சென்றால், அங்கு அந்த சபை எங்கே முடிகிறதோ (அதாவது சபையின் கடைசியில்) அங்கேயே அமர்ந்து கொள்வார்கள்; மற்றவர்களையும் அவ்வாறே செய்யுமாறு அறிவுறுத்துவார்கள்.

தம்மோடு அமர்ந்திருக்கும் ஒவ்வொருவருக்கும் உரிய உரிமையை அன்னார் (ஸல்) வழங்குவார்கள். அங்கே அமர்ந்திருக்கும் எவரும், தன்னை விட மற்றவர் அன்னாருக்கு அதிக நெருக்கமானவர் அல்லது கண்ணியமிக்கவர் என்று எண்ண முடியாத அளவுக்கு அனைவரையும் சமமாக நடத்துவார்கள். யாரேனும் ஒருவர் தனது தேவையைக் குறித்து அன்னாரிடம் பேசத் தொடங்கினால், அவராக எழுந்து செல்லும் வரை அன்னார் (ஸல்) அவருடனேயே அமர்ந்திருப்பார்கள். தம்மிடம் ஏதேனும் உதவி என்று கேட்பவரை, அவருக்குத் தேவையானதைக் கொடுக்காமல் அல்லது மென்மையான வார்த்தைகளால் ஆறுதல் கூறாமல் அன்னார்(ஸல்) திருப்பி அனுப்ப மாட்டார்கள்.

அதாவது, ஒரு தேவையோடு வருபவருக்கு ஏதேனும் கொடுப்பார்கள்; கொடுக்க இயலாத பட்சத்தில் மிகவும் கனிவாகப் பதிலளிப்பார்கள்.

அன்னாரின் இன்முகமும், கொடைத்தன்மையும், அழகிய நல்லொழுக்கங்களும் அனைவருக்கும் பொதுவானதாக இருந்தது. உரிமைகளை வழங்குவதில் அன்னார் (ஸல்) அனைவருக்கும் ஒரு தந்தையைப் போலத் திகழ்ந்தார்கள்; அன்னாரின் பார்வையில் அனைவரும் சமமாகவே இருந்தனர்.

அன்னாரது சபை என்பது கல்வி, நாணம், பொறுமை, மற்றும் நம்பகத்தன்மை நிறைந்த சபையாக விளங்கியது. அச்சபையில் சப்தங்கள் உயராது; மதிக்கத்தக்க விஷயங்கள் அவமதிக்கப்படாது; எவருடைய பலவீனங்களும் அங்கே பேசப்படாது. அனைவரும் சமமாகவே கருதப்பட்டனர்; எனினும், இறை அச்சத்தின் காரணமாகவே ஒருவர் மற்றவரை விட சிறப்பைப் பெற்றிருந்தார்.

இன்றைய காலத்தில் இருப்பதைப் போல, ஒருவருக்கொருவர் பலவீனங்களைப் பேசிக்கொள்ளும் நிலை அன்னாரின் சபையில் ஒருபோதும் இருந்ததில்லை.

ஒருவருக்கொருவர் பணிவோடு நடந்து கொள்வார்கள்; பெரியவர்களை மதிப்பார்கள்; சிறியவர்கள் மீது கருணை காட்டுவார்கள்; தேவையுடையவர்களுக்கு முன்னுரிமை அளிப்பார்கள்; மேலும், அந்நியர்களை (புதியவர்களை) அன்போடு கவனித்துக் கொள்வார்கள். புதியவர் எவரேனும் வந்தால் அவருக்கு ஒன்றும் தரக் கூடாது என்று நினைக்காமல், அவரையும் கருத்தில் கொள்வார்கள்.‘(நூல், ஷமாயிலுன் நபி (ஸல்), அறிவிப்பு எண்: 321, பக்கம் 137 - 140, வெளியீடு- நூர் ஃபவுண்டேஷன்)

ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

‘ அல்லாஹ்வின் திருப்தியில் தங்களை அர்ப்பணித்துக் கொண்ட மக்கள், தங்களுக்கு எந்தவொரு பதவியோ அல்லது தலைமைத்துவமோ வழங்கப்படுவதை விரும்புவதில்லை. அவர்கள் இத்தகைய பதவிகளை விட, தனிமையில் அமர்ந்து இறைவனைத் தனித்து வணங்குவதிலேயே மிகுந்த இன்பம் காண்கிறார்கள். ஆனால், அல்லாஹ் அவர்களை மனிதகுலத்தின் நன்மைகளுக்காகவும், சீர்திருத்தத்திற்காகவும் தானே இழுத்துக் கொண்டு வந்து உலகிற்கு வெளிப்படுத்துகிறான்; நபியாக நியமிக்கிறான். நமது நபி கரீம் (ஸல்) அவர்களும் (ஆரம்பத்தில்) குகையில்தான் வாழ்ந்து வந்தார்கள்; தம்மைப் பற்றி எவருக்கும் தெரியக்கூடாது என்றே அன்னார் (ஸல்) விரும்பினார்கள். ஆனால், இறுதியாக அல்லாஹ் அன்னாரை அங்கிருந்து வெளியே கொண்டு வந்து, உலகிற்கு நேர்வழி காட்டும் சுமையை (அதாவது, பொறுப்பை) அன்னாரிடம் ஒப்படைத்தான். அன்னாரிடம் ஆயிரக்கணக்கான கவிஞர்கள் வந்து, அன்னாருடைய புகழைப் பாடி கவிதைகளைக் கூறுவார்கள். ஆனால், அத்தகைய புகழ்ச்சிகளினால் அன்னார் (ஸல்) பெருமிதம் கொண்டார்கள் அதாவது, மகிழ்ந்தார்கள் என்று எண்ணும் உள்ளம் சாபத்திற்குரியதாகும். அன்னார் (ஸல்) அத்தகைய புகழுரைகளை இறந்த ஒரு புழுவைப் போன்றே கருதினார்கள். உண்மையான புகழ்ச்சி என்பது இறைவன் வானத்திலிருந்து செய்யக்கூடிய புகழாகும். இத்தகைய மகான்கள் இறைவனின் தனிப்பட்ட அன்பில் மூழ்கியிருப்பதால், உலக மக்களின் புகழுரைகளை அவர்கள் சற்றும் பொருட்படுத்துவதில்லை. எனவே, இந்தத் தகுதியானது எத்தகையது என்றால், இறைவன் வானிலிருந்தும் தனது அர்ஷிலிருந்தும் இவர்களைப் புகழ்ந்து பாராட்டுகிறான்.‘ (மல்ஃபூஸாத், தொகுதி 4, பக்கம் 338 - 339,2022-ம் ஆண்டு பதிப்பு)

அடுத்து, ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

ஒரு கிறிஸ்தவர் நமது நபி (ஸல்) அவர்களிடம் வந்தார்; அன்னார் (ஸல்) அவருக்கு மிகுந்த உபசரிப்பையும், கவனிப்பையும் செய்தார்கள். அவர் கடுமையான பசியோடு இருந்தார்; அன்னார் (ஸல்) அவருக்கு வயிறார உணவளித்தார்கள்; அவரது வயிறும் நிரம்பியது. இரவு நேரத்தில் அன்னார் (ஸல்) தமது போர்வையையும் அவருக்கு வழங்கினார்கள். அவர் தூங்கிய போது, அவருக்குக் கடுமையான வயிற்றுப்போக்கு ஏற்பட்டது; அதனை அவரால் கட்டுப்படுத்த முடியாமல் போர்வையிலேயே செய்து விட்டார். காலை விடிந்ததும், தனது இந்த நிலையைப் பார்த்து (மற்றவர்கள்) அருவருப்பு அடைவார்கள் என்று எண்ணிய அவர், வெட்கத்தின் காரணமாக அங்கிருந்து புறப்பட்டுச்

---

நபிமொழியிலிருந்து...

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

சென்றுவிட்டார். மக்கள் இதனைப் பார்த்த போது அன்னாரிடம், அந்த கிறிஸ்தவர் போர்வையை அசுத்தப்படுத்திவிட்டுச் சென்றுவிட்டார்; அதில் மலம் கழிக்கப்பட்டுள்ளது என்று கூறினர்.

அதற்கு, அதை என்னிடம் கொடுங்கள்; நானே சுத்தம் செய்கிறேன் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். அப்போது,, ஹுஸூர்! தாங்கள் ஏன் இந்த சிரமத்தை மேற்கொள்கிறீர்கள்? இதோ நாங்கள் இருக்கிறோம்; நாங்கள் சுத்தம் செய்கிறோம் என்று அன்னார் (ஸல்) வேண்டினர்.

அதற்கு அன்னார் (ஸல்), அவர் எனது விருந்தினர்; எனவே இது எனது வேலைதான் என்று கூறிவிட்டு, எழுந்து சென்று தண்ணீரை வரவழைத்துத் தாமே அதனைச் சுத்தம் செய்யத் தொடங்கினார்கள். மிகுந்த பணிவோடு அந்த விருந்தினரின் அசுத்தத்தைத் தாமே சுத்தம் செய்தார்கள்.

அந்தக் கிறிஸ்தவர் சுமார் இரண்டு மைல் தூரம் சென்ற பிறகுதான், தன்னிடம் இருந்த தங்க சிலுவையை அவர் கட்டிலிலேயே மறந்து வைத்துவிட்டு வந்தது நினைவுக்கு வந்தது. எனவே அவர் அதனை எடுப்பதற்காகத் திரும்பி வந்தபோது, அன்னார் அந்தப் போர்வையில் இருந்த மலத்தை தாமே சுத்தம் செய்வதைக் கண்டார். இதனால் அவர் மிகுந்த வெட்கமடைந்து, என்னிடம் இது இருந்திருந்தால், நான் ஒருபோதும் இதைக் கழுவியிருக்க மாட்டேன் என்று கூறினார். இத்தகைய சுயநலமற்ற, இத்தகைய பணிவுள்ள ஒரு மனிதர் நிச்சயமாக இறைவன் சார்பாக வந்தவராகத்தான் இருக்க முடியும் என்பதை அவர் உணர்ந்து கொண்டார். பின்னர், அன்னாரின் இந்தச் செயலைக் கண்ட பிறகு அவர் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார்.'(மல்ஃபூஸாத், தொகுதி 5, பக்கம் 205 - 206, 2022-ம் ஆண்டு பதிப்பு)

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு முதன்முதலில் வஹி இறங்கிய அந்த நேரத்திலும் கூட, அன்னாரது பணிவும் தன்னடக்கமுமே வெளிப்பட்டது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஹிரா குகையின் சம்பவத்தை எடுத்துரைத்தவாறு கூறுகிறார்கள்:

'முதன்முதலில் ஹிரா குகையில்தான் வஹி இறங்கியது. அப்போது ஜிப்ராயீல் (அலை) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களுக்கு தென்பட்ட போது, اِقْرَاْ அதாவது, ஓதுவீராக என்று கூறினார்கள். அதற்குப் பதிலளித்தவாறு ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள்,

مَا اَنَا بِقَارِئٍ

என்று கூறினார்கள். இதன் பொருள், இந்தச் சுமையை என் மீது சுமத்த வேண்டாம் என்பதாகும். ஏனெனில், அந்த நேரத்தில் அன்னாருக்கு முன்னால் படித்துக் காட்டுவதற்கு எந்தவொரு புத்தகமும் வைக்கப்பட்டிருக்கவில்லை; மாறாக ஜிப்ராயீல் அவர்கள் எதனைச் சொல்கிறார்களோ, அதனை அன்னார் (ஸல்) வாய்மொழியாகச் சொல்ல வேண்டியிருந்தது. இதனை அன்னாரால் சொல்லவும் முடியும். எனினும் அன்னார் (ஸல்) தமது பணிவை வெளிப்படுத்தினார்கள். ஆனால், அல்லாஹ் இந்த வேலைக்காக அன்னாரையே தேர்ந்தெடுத்திருந்ததால், ஓதுவீராக! ஓதுவீராக! என்று மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்பட்டது. இறுதியாக, மூன்றாவது முறை கூறிய பிறகு அன்னார் (ஸல்) ஓதினார்கள்; பின்னர் அந்த வானவர்,

اِقْرَاْ بِاسْمِ رَبِّكَ الَّذِیْ خَلَقَ

என்ற வசனத்தை ஓதினார். (ஃபஸாயிலுல் குர்ஆன், எண்:2, அன்வாருல் உலூம், தொகுதி 11, பக்கம் 109)

இதேபோன்று, இந்தச் சம்பவத்தைக் குறித்து மற்றோர் இடத்தில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் அநேகமாக தமது தஃப்ஸீரே கபீர், ஸூரத்துல் கவ்ஸரின் விளக்கவுரையில் இவ்வாறு எழுதியுள்ளார்கள். அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு வஹி இறங்கியபோது அன்னார் (ஸல்) அசாதாரணமான தன்னடக்கத்திற்கு சான்று பகர்ந்தார்கள். மற்ற மக்களுக்கு ஏதேனும் ஓர் இல்ஹாமோ அல்லது ஒரு கனவோ வந்தால், அவர்கள் உடனடியாக மற்றவர்களிடம் ஓடிச் சென்று, எனக்கு இந்த இல்ஹாம் வந்தது; இந்தக் கனவு வந்தது என்று கூறுவதை நாம் காண்கிறோம். ஆனால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடமோ ஜிப்ராயீல் வருகின்றார்; மேலும், اِقْرَاْ - ஓதுவீராக! என்று கூறுகின்றார்; அப்போது, مَا اَنَا بِقَارِئٍ

என்று அன்னார் (ஸல்) கூறுகின்றார்கள்.

பொருள்: எனக்கோ படிக்கத் தெரியாது. மூன்று முறையும் அன்னார் (ஸல்) இதையேதான் கூறினார்கள். ஆனால், இறைவனின் தரப்பிலிருந்து இதில் வலியுறுத்தல் இருப்பதை அன்னார் கண்டபோது, உடனே அந்த கட்டளைக்குக் கீழ்ப்படிந்தார்கள்.

அவ்வாறு கீழ்ப்படியும் போதும் எத்தகைய துணிவோடு இருந்தார்கள் என்றால், ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களைப் போல, என் இறைவா! எனக்கு வேறொரு தோழரை வழங்குவாயாக என்று அன்னார் (ஸல்) கேட்கவில்லை; மாறாக, அன்னார் (ஸல்) தனி ஒருவராகவே அந்த சுமையைத் சுமந்து கொண்டார்கள்; உதவிக்காக எந்தவொரு தோழரையும் கேட்கவில்லை.'

(தஃப்ஸீரே கபீர், தொகுதி 15, பக்கம் 138 - 139, 2023-ம் ஆண்டு பதிப்பு)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மற்றுமோர் உதாரணத்தை இவ்வாறு எடுத்துரைக்கின்றார்கள்:

'ஒரு நாள் அன்ஸாரி தோழர் ஒருவர் நோயுற்றிருந்தார்; அன்னார் (ஸல்) அவரை நலம் விசாரிப்பதற்காகச் சென்றார்கள். அன்னார் (ஸல்) திரும்பப் புறப்படும் போது, அந்த அன்ஸாரி அன்னார் (ஸல்) ஏறிச் செல்வதற்காகக் குதிரை ஒன்றை கொடுத்தனுப்பினார்; அத்துடன் தனது மகனிடம், நீ ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களுடன் செல்! ஒருவேளை வழியில் பயணத் தோழர் எவரும் கிடைப்பதில் அன்னாருக்கு சிரமம் இருக்கலாம். வரும்போது குதிரையையும் திரும்பக் கூட்டி வா! என்று கூறினார்.

சிறிது நேரத்திலேயே அந்த மகன் வீட்டிற்குத் திரும்பி வந்துவிட்டார். தந்தை மகனிடம், வழியில் பாதுகாப்பு இருக்க வேண்டும்; குதிரையும் மிரளக் கூடாது என்பதற்காகத்தானே உன்னை ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களுடன் அனுப்பினேன்; அதற்குள் ஏன் திரும்பி வந்துவிட்டாய்? என்று கேட்டார்.

அதற்கு அந்த மகன், நான் என்ன செய்வேன்? நான் கட்டாயத்தில் இருந்தேன்! ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் வெளியே வந்ததும் என்னிடம், நீயும் எனக்குப் பின்னால் (குதிரையில்) அமர்ந்து கொள் என்றார்கள். நான், யா ரஸூலுல்லாஹ்! என்னால் அத்தகைய மரியாதைக் குறைவான செயலைச் செய்ய முடியாது என்று கூறினேன். அதற்கு அன்னார் (ஸல்), அப்படியென்றால் நீ நடந்து வர, நான் குதிரையில் ஏறிச் செல்வதை என்னாலும் சகித்துக் கொள்ள முடியாது; ஒன்று, நீயும் என்னுடன் குதிரையில் ஏறிக்கொள்; அல்லது உனது வீட்டிற்குத் திரும்பிச் செல் என்று கூறிவிட்டார்கள். எனவே, நான் திரும்பி வருவதே சிறந்தது என்று கருதி வந்துவிட்டேன் என்று கூறினார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் குதிரையில் தனித்தே சென்று விட்டார்கள்.' (தஃப்ஸீரே கபீர், தொகுதி 15, பக்கம் 157,2023-ம் ஆண்டு பதிப்பு)

ஓர் அறிவிப்பு உள்ளது. ஹஸ்ரத் அப்துல்லாஹ் அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

'ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஒரு பாயின் மீது படுத்துறங்கினார்கள். அன்னார் (ஸல்) எழுந்த போது, அன்னாரது உடலின் பக்கவாட்டில் அந்தப் பாயின் அச்சு பதிந்திருந்தது. யா ரஸூலுல்லாஹ்! நாங்கள் உங்களுக்காக ஒரு மென்மையான மெத்தையைத் தயாரித்துத் தரட்டுமா? என்று வேண்டினோம். அதற்கு அன்னார் (ஸல்), எனக்கும் இந்த உலகத்திற்கும் என்ன தொடர்பு இருக்கிறது? நான், ஒரு மரத்தின் நிழலில் சிறிது நேரம் தங்கிவிட்டு, பின்னர் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டுச் செல்லும் ஒரு வழிப்போக்கனைப் போன்றவன் மட்டுமே ஆவேன் என்று கூறினார்கள்.

(ஜாமிஉத் திர்மிதி, ஹதீஸ் எண்: 2377)

ஸஹீஹ் புகாரியில் ஹஸ்ரத் உமர் அவர்கள் அறிவிக்கும் ஓர் அறிவிப்பு இவ்வாறு உள்ளது. அவர்கள் கூறுகிறார்கள்:




நான் ஒருமுறை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜரானேன். அன்னார் (ஸல்) தமது மேலறையில் அமர்ந்திருந்தார்கள். அந்த நேரத்தில் அன்னார் (ஸல்) ஒரு சாதாரணப் பாயின் மீது இருந்தார்கள்; அன்னாருக்கும் அந்தப் பாய்க்கும் இடையில் வேறு எந்தவொரு விரிப்பும் இருக்கவில்லை. அன்னாரது தலைக்குக் கீழே பேரீச்ச நாரினால் நிரப்பப்பட்ட தோலால் ஆன ஒரு தலையணை இருந்தது. அன்னாரது பாதங்களுக்கு அருகில் கருவேல மரத்து இலைகளின் குவியல் இருந்தது; அன்னாரது தலைக்கு அருகில் பதப்படுத்தப்படாத பச்சையான தோல்கள் தொங்கிக் கொண்டிருந்தன. அன்னாரின் பக்கவாட்டில் அந்தப் பாய் ஏற்படுத்தியிருந்த அச்சுகளை நான் கண்டேன். விரிக்கப்பட்டிருந்த அந்தப் பாய் அல்லது தட்டி ஏற்படுத்தியிருந்த தழும்புகளைக் கண்ட உடனே நான் அழத் தொடங்கினேன். உம்மை அழ வைக்கும் விஷயம் என்ன? என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள். அதற்கு நான், யா ரஸூலல்லாஹ்! கிஸ்ராவும் (பாரசீக மன்னனும்), கைஸரும் (ரோம மன்னனும்) எத்தகைய சொகுசான சுகபோகங்களில் திளைத்துக் கொண்டிருக்கிறார்கள்! நீங்களோ அல்லாஹ்வின் தூதராக இருந்தும் இந்நிலையா? என்று வினவினேன். அதற்கு அன்னார் (ஸல்), அவர்களுக்கு இவ்வுலகமும், நமக்கு மறுமையும் கிடைப்பதைக் கொண்டு நீர் திருப்தியடையவில்லையா? என்று கேட்டார்கள்.' (ஸஹீஹுல் புஹாரீ, ஹதீஸ் எண்: 4913, மொழிபெயர்ப்பு நூல், தொகுதி 12, பக்கம் 264- 267, வெளியீடு நஷ்ர் வ இஷாஅத்)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்தச் சம்பவத்தை எடுத்துரைக்கும் போது இவ்வாறு கூறுகிறார்கள்:

'ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உலகியல் சுகபோகங்களின் நிலை எவ்வாறு இருந்தது என்றால், ஒருமுறை ஹஸ்ரத் உமர் அவர்கள் அன்னாரைச் சந்திக்கச் சென்றார்கள். ஒரு சிறுவனை அனுப்பி அனுமதி வேண்டினார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஒரு பேரீச்ச ஓலைப் பாயில் படுத்திருந்தார்கள்; ஹஸ்ரத் உமர் அவர்கள் உள்ளே நுழைந்ததும் அன்னார் எழுந்து அமர்ந்தார்கள். அந்த வீடு முழுவதும் முற்றிலும் காலியாகக் கிடப்பதையும், எவ்வித அலங்காரப் பொருட்களும் அங்கே இல்லை என்பதையும் ஹஸ்ரத் உமர் (ரலி) கண்டார்கள். ஆணி ஒன்றில் ஒரு வாள் தொங்கிக் கொண்டிருந்தது. அதோடு சேர்த்து அன்னார் படுத்திருந்த அந்தப் பாய் மட்டுமே இருந்தது; அதன் தழும்புகள் அன்னாரின் அருளுக்குரிய முதுகில் அப்படியே பதிந்திருந்தன.

இதனைப் பார்த்ததும் ஹஸ்ரத் உமர் (ரலி) அழுதுவிட்டார். உமரே! உம்மை எது அழ

வைத்தது? என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள். கிஸ்ராவும் கைஸரும் சுகபோகங்களுக்கான அனைத்து வழிவகைகளையும் பெற்று வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்; தாங்களோ இறைவனின் தூதராகவும், இரு உலகங்களின் பேரரசராகவும் இருந்தும் இத்தகைய நிலையில் இருக்கின்றீர்களே என்று உமர் கூறினார். அதற்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், உமரே! எனக்கு இந்த உலகத்தோடு என்ன வேலை? நான் ஓர் ஒட்டகத்தின் மீது ஏறித் தமது இலக்கை நோக்கிச் செல்லும் ஒரு பயணியைப் போலத்தான் இங்கு வாழ்கிறேன். பாலைவன பயணத்தில், கடுமையான வெயிலின் தாக்கத்தினால் ஏதேனும் ஒரு மரத்தைக் கண்டு அதன் நிழலில் சற்று இளைப்பாறி, வியர்வை சற்றே காய்ந்ததும் மீண்டும் தமது பயணத்தைத் தொடரும் ஒரு வழிப்போக்கனைப் போன்றவனே நான் என்று கூறினார்கள்.' தொகுதி 6, பக்கம் 228 - 229, 2022-ம் ஆண்டு பதிப்பு)

ஒழுக்கம் கெட்ட மனிதர்களிடமும் அன்னார் (ஸல்) எப்போதும் மென்மையுடனும், பணிவுடனும் கூடிய மிக உயரிய நற்பண்புகளையே வெளிப்படுத்தி வந்தார்கள்.

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: 'ஒரு மனிதர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வந்து, தனக்குத் தர வேண்டிய கடனைக் கேட்டு மிகவும் கடுமையான தொனியில் பேசினார். இதைக் கண்டு ஸஹாபிகள் அவர் மீது கோபமடைந்தனர்; ஆனால் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், அவரை விட்டுவிடுங்கள்; ஏனெனில், கடனைக் கேட்க உரிமையுள்ளவருக்கு அவ்வாறு பேசுவதற்கும் உரிமை உண்டு. எப்படியும் நான் அவரது கடனைத் திருப்பித் தரத்தான் வேண்டும். அவர் கூறுவதற்கு உரிமை உள்ளவர் ஆவார். எனவே, அவருக்காக ஓர் ஒட்டகத்தை விலைக்கு வாங்கி அவரிடம் கொடுத்துவிடுங்கள் என்று கூறினார்கள்.

அதாவது கடனை வாங்க வந்தவருக்கு ஓர் ஒட்டகத்தை வாங்கி கொடுத்து விடுங்கள் என்றார்கள்.

ஸஹாபிகள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அவர் கொடுத்த கடனுக்கு நிகரான ஒட்டகம் எங்களுக்கு கிடைக்கவில்லை; அதை விட அதிக மதிப்புள்ள, சிறந்த ஒட்டகங்கள் மட்டுமே கிடைக்கின்றன என்று கூறினர். அதற்கு அன்னார் (ஸல்), அதையே வாங்கி அவரிடம் கொடுத்துவிடுங்கள்; ஏனெனில், கடனைத் திருப்பிச் செலுத்துவதில் எவர் மிகச் சிறந்த முறையில் நடந்து கொள்கிறாரோ, அவரே உங்களுள் மிகச் சிறந்தவர் ஆவார் என்று கூறினார்கள்.'
(மிஷ்காத், ஹதீஸ் எண்: 2906)

இன்றைய காலத்தில் நடக்கும் சில சண்டைகளை நாம் பார்க்கும்போது, வாங்கிய அசல் கடனையே கொடுக்காமல் இழுத்தடிப்பதோடு, இதில் இன்னும் தொகையைக் குறைத்துக் கொள் என்று சண்டையிட்டுக் கொள்வதைக் காண்கிறோம். இந்த விஷயங்களை நாம் புரிந்து கொண்டால், எத்தனையோ சண்டைகள் முடிவுக்கு வந்துவிடும்.

அதேபோன்று, அன்னாருடைய பணிவிற்கான மற்றுமொரு சம்பவம் இவ்வாறு காணக் கிடைக்கிறது; மக்கா வெற்றியின் போது ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் மஸ்ஜிதுல் ஹராமிற்குள் நுழைந்தார்கள். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தமது தந்தையை அழைத்துக் கொண்டு ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜரானார்கள். ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் அவர்களைக் கண்டதும், அபூபக்ரே! இந்த முதியவரை ஏன் வீட்டிலேயே இருக்கச் செய்யவில்லை? நானே அவரிடம் நேரில் வந்திருப்பேனே என்று கூறினார்கள்.

அதற்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் அவரிடம் வருவதை விட, அவரே உங்களுடைய சமூகத்திற்குத் தேடி வருவதற்கு மிகத் தகுதியானவர் ஆவார் என்று கூறினார்கள். பின்னர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தமது தந்தையை ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களுக்கு முன்னால் அமர வைத்தார்கள். அன்னார் (ஸல்) அவரது நெஞ்சின் மீது தமது கரத்தால் தடவிக் கொடுத்து, இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளுங்கள்; நீங்கள் பாதுகாப்பை பெற்றுவிடுவீர்கள் என்று கூறினார்கள்; அதன்படியே அபூகஹாஃபா அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். (அல் அஸாபத்துல் ஃபீ தம்மீஸூஸ் ஸஹாபா,தொகுதி 4, பக்கம் 375, மக்தபா தாருல் குதுபில் இல்மியா,1995-ம் ஆண்டு பதிப்பு)

அதேபோன்று, அன்னார் (ஸல்) வீட்டில் மிக எளிய வாழ்க்கை வாழ்ந்தது தொடர்பான ஓர் அறிவிப்பு ஹஸ்ரத் ஹஸன் அவர்களிடமிருந்து இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது; 'ஹஸ்ரத் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கதவுகள் எல்லா மக்களுக்காகவும் திறந்தே இருந்தன. அன்னாருடைய வாசலில் எந்தவொரு வாயிற்காவலனும் நிற்பதில்லை; மேலும், அன்னாருக்கு காலையிலும் மாலையிலும் பெரிய பெரிய பாத்திரங்களில் உயர்தரமான உணவுகள் எதுவும் பரிமாறப்படுவதில்லை. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைச் சந்திக்க விரும்பிய எவரும், எவ்வித சிரமமுமின்றி மிக எளிதாக அன்னாரைச் சந்திக்க முடிந்தது. அன்னார் (ஸல்) தரையிலேயே அமர்வார்கள்; தமது உணவையும் தரையிலேயே வைப்பார்கள். எளிய மற்றும் தடித்த ஆடைகளை அணிவார்கள்; கழுதையின் மீது ஏறிப் பயணம் செய்வார்கள். அத்துடன் தங்களுக்குப் பின்னால் பிறரையும் அமரச் செய்து கொள்வார்கள்; உணவு உண்டு முடித்ததும், தமது விரல்களைச் சூப்பி அதனைச் சுத்தம் செய்துகொள்வார்கள்.' (ஸுனனுல் குப்ரா லில் பைஹக்கீ, தொகுதி 10, பக்கம் 171,ஹதீஸ் எண்: 20838, மக்தபர் ருஷ்த்)

இவ்வாறு விரல்களைச் சூப்பி சுத்தம் செய்வது குறித்து புகாரியிலும் ஒரு ஹதீஸ் பதிவாகியுள்ளது.

' உணவு உண்ட பிறகு, கைகளை சுத்தப்படுத்துவதற்கு முன் அதாவது, கழுவுவதற்கு முன்பாகத் தனது விரல்களைச் சூப்பிக் கொள்ள வேண்டும் என ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஸஹீஹுல் புஹாரீ, ஹதீஸ் எண்: 5456)

புஹாரியின் இந்த ஹதீஸின் விளக்கவுரையில் ஹஸ்ரத் ஸைனுல் ஆபிதீன் வலியுல்லாஹ் ஷா ஸாஹிப் (ரலி) அவர்கள் எழுதியுள்ள குறிப்பில் ஹஸ்ரத் ஸையித் டாக்டர் மீர் முஹம்மது இஸ்மாயில் ஸாஹிப் (ரலி) அவர்கள் கூறியது இடம்பெற்றுள்ளது. அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:

' இது அனைத்து மருத்துவர்களின் அனுபவத்திலும் கண்டறியப்பட்ட உண்மையாகும்; மேலும், அனைத்து மருத்துவர்களும் இதில் ஏகோபித்த கருத்துடையவர்களாக இருக்கிறார்கள். அது என்னவென்றால், மனிதனுடைய கை விரல்களுக்கு ஒரு தனித்துவமான தொடு உணர்வுத் திறன் உள்ளது என்பதாகும். உதாரணமாக, ஒரு துணியின் மென்மையை நாம் சோதிக்க விரும்பினால், கை விரல்களைத் தவிர உடலின் வேறு எந்தப் பகுதியாலும் அதன் துல்லியமான மென்மையை நம்மால் கணிக்க முடியாது. உடலின் அனைத்துப் பாகங்களிலும் தொடு உணர்வு உள்ள போதிலும், கைகளுக்குப் பதிலாகக் கால்களால் அந்த மென்மையை அறிய முற்பட்டால் நம்மால் முழுமையான வெற்றியைப் பெற முடியாது. ஆம்! ஒரு குறிப்பிட்ட மின் காந்த ஆற்றல் நம் கைகளில், குறிப்பாக விரல் நுனிகளில் மட்டுமே உள்ளது.

கையின் விரல்களுக்கும், நம் கவனத்தை ஒருமுகப்படுத்தும் கருவியாக விளங்கும் கண்களுக்கும் இடையே மிக நெருக்கமான தொடர்பு உண்டு. இதனால்தான், மெஸ்மரிசம் அல்லது ஹிப்னாடிசம் (மன வசியக்கலை) மூலம் ஒருவரைத் தன் வசப்படுத்துபவர்கள் தாங்கள் யாருக்கு அந்தச் சிகிச்சையைச் செய்கிறார்களோ அந்த நபரின் விரல் நுனிகளை நோக்கியே தங்களது பார்வையை அதிகமாகச் செலுத்துகிறார்கள். கைகளின் மூலமாகவே தங்களது கண்களின் ஆற்றலை அந்த நபரின் மீது செலுத்தி, தங்களது நோக்கத்தில் முழுமையான வெற்றியையும் பெறுகிறார்கள். இதேபோன்று, கைகளால் தயாரிக்கப்படும் மருந்துகள் அதிகப் பலனைத் தருகின்றன.

இன்றைய காலத்தில் அனைத்தும் இயந்திரத்தால் தயாரிக்கப்படுகின்றன. ஆனால், முந்தைய காலத்து மருத்துவர்கள் இதனையே வலியுறுத்தி வந்தனர். டாக்டர் இஸ்மாயில் ஸாஹிப் அவர்கள் ஒரு சிறந்த அறுவைசிகிச்சை நிபுணராகவும், படித்த மருத்துவராகவும் இருந்தும் இதனைக் குறிப்பிட்டுள்ளார்கள். இயந்திரத்தால் தயாரிக்கப்படும் மருந்தை விட அது அதிக பலனை தருகின்றது என்று கூறுகிறார்கள்.

எனவே, இதே தத்துவத்தின் அடிப்படையில் ஒரு மனிதன் உணவு உண்ணும் போது தனது விரல்களால் உணவை எடுத்தால், ஒவ்வொரு முறையும் அவன் உணவை வாயில் வைக்கும் போது அவனது பார்வை இயல்பாகவே விரல் நுனிகளின் மீது பதிகிறது. உணவு உண்டு முடித்த பிறகு, கைகளைக் கழுவுவதற்கு முன்பாகவோ அல்லது துணியால் துடைப்பதற்கு முன்பாகவோ தனது விரல்களைச் சூப்பும் போது, அந்த விரல்களில் ஒட்டியிருக்கும் நெய்த்தன்மை (கொழுப்புச் சத்து) அவனது உமிழ்நீரோடு கலந்து நேரடியாக இரைப்பைக்குள் சென்று விடுகிறது. இது வயிற்றின் செரிமானத் திறனை மேலும் வலுவூட்டுகிறது; இதனால் உணவு மிக விரைவாகச் செரிமானமடைகிறது.'

இது அந்த காலத்து மருத்துவர்களின் ஒரு கோட்பாடாக இருந்தது. இன்றைய மருத்துவர்கள் ஒருவேளை இதற்கு மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருக்கலாம்; எவ்வாறிருப்பினும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் உணவு உண்ட பின்பு கைகளில் ஒட்டியிருப்பதை நக்கிக் கொள்வதில் நன்மை உண்டு என்றே நமக்குக் கற்றுத் தந்துள்ளார்கள்.

புஹாரியின் அறிவிப்பில்,

فَلَا يَمْسَحْ يَدَهُ حَتَّى يَلْعَقَهَا أَوْ يُلْعِقَهَا

என்று வந்துள்ளது.

அதாவது, (உங்களில் ஒருவர் சாப்பிட்டால்) தம் கைகளை நக்கும் வரை அல்லது பிறரை நக்கச் செய்யும் வரை அவர் தனது கைகளைத் துடைக்க வேண்டாம்.

இங்கு பிறரை நக்கச் செய்தல் என்ற வார்த்தைக்கு விளக்கவுரை எழுதிய சில விரிவுரையாளர்கள், இதன் பொருள், தனது ஊழியரையோ, தனது மகனையோ அல்லது தனது விரல்களைச் சுவைப்பதில் எவ்வித அருவருப்பும் கொள்ளாத ஒருவரைக் கொண்டோ அதை நக்கச் செய்ய வேண்டும் என்று எழுதியுள்ளனர்.

ஆனால், உணவு உண்ட மனிதனுக்குத் தன் விரல்களைத் தானே சப்பிக் கொள்வதில் என்ன சிரமம் இருக்க முடியும்? அவரே அதனைச் செய்யலாமே! விரிவுரையாளர்கள் சில நேரங்களில் வார்த்தைகளின் பொருளை எங்கேயோ கொண்டு சென்று விடுகிறார்கள்.

எவ்வாறிருப்பினும், எனது விரல்களை நீ சப்பிவிடு! என்று மற்றவரிடம் கூறுவது முற்றிலும் பொருத்தமற்றதாகவும், மனித மாண்பிற்கு எதிரானதுமாகவே தோன்றுகிறது.

எனவே, இந்த ஹதீஸின் உண்மையான பொருள், மனிதன் உணவு உண்ட பிறகு தனது விரல்களைத் தானே சூப்பி சுத்தம் செய்து கொள்ள வேண்டும்; அத்துடன், தனது பராமரிப்பிலும் வளர்ப்பிலும் உள்ள மற்ற

நபர்களுக்கும் தத்தமது விரல்களைச் சப்பிச் சுத்தம் செய்யுமாறு கற்றுக் கொடுக்க வேண்டும். இதன் மூலமே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் இந்த வழிகாட்டலில் மறைந்திருக்கும் மருத்துவப் பயன்களையும், பிற நோக்கங்களையும் அவர்கள் பெற்றுக்கொள்ள முடியும் என்பதாகும்.

(ஸஹீஹுல் புஹாரீ, மொழிபெயர்ப்பு நூல் - தொகுதி 13, பக்கம் 398-400, இஸ்லாம் இன்டர்நேஷனல் பப்ளிகேஷன்ஸ்)

பள்ளிவாசலைத் தூய்மைப்படுத்துவதையோ, அங்கு துடைப்பத்தால் பெருக்கி சுத்தம் செய்வதையோ ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஒருபோதும் கௌரவக் குறைச்சலாகக் கருதியதில்லை.

ஹஸ்ரத் யஃகூப் பின் ஸைத் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

'ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் பள்ளிவாசலுக்குள் வரக்கூடிய தூசி மற்றும் குப்பைகளை ஒரு சிறிய குச்சியைக் கொண்டு சுத்தம் செய்பவர்களாக இருந்தார்கள்.'

இதன் பொருள், அன்னார் (ஸல்) அந்த குச்சியின் நுனியில் ஒரு துணியைச் சுற்றி, பள்ளிவாசலின் தூசிகளைத் தட்டித் துடைப்பார்கள் என்பதாகும்.

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: 'ஒருமுறை ஜிப்ராயீல் (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு அருகில் அமர்ந்திருந்தார்கள். அப்போது அன்னார் (ஸல்) வானோக்கிப் பார்த்தபோது, ஒரு வானவர் இறங்கி வருவதைக் கண்டார்கள். ஜிப்ராயீல் (அலை) அவர்கள், இவர், தான் படைக்கப்பட்ட நாள் முதல் இந்த நொடி வரை இதற்கு முன்னால் ஒருபோதும் பூமிக்கு இறங்கியிராத அந்த வானவர் ஆவார் என்று கூறினார்கள். அந்த வானவர் இறங்கி வந்ததும், முஹம்மதே! ((ஸல்) அவர்களே!) உங்களுடைய இறைவன் என்னை உங்களிடம் அனுப்பியிருக்கிறான். உங்களை ஒரு மன்னராக இருக்கும் இறைத்தூதராக ஆக்க வேண்டுமா? அல்லது ஓர் எளிய அடியாராக இருக்கும் இறைத்தூதராக ஆக்க வேண்டுமா? என்று இறைவன் கேட்கிறான் என்று கூறினார்.

அப்போது ஜிப்ராயீல் (அலை) அவர்கள், முஹம்மதே! உங்களுடைய இறைவனுக்காகப் பணிவை தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள். அதற்கு நபியவர்கள், என்னை ஓர் எளிய அடியாராக இருக்கும் இறைத்தூதராகவே இறைவன் நியமிக்கட்டும் என்று கூறினார்கள்.'

உண்மையில் இது அன்னாரது இயல்பாகவே இருந்தது. ஜிப்ராயீல் (அலை) அவர்கள் அவ்வாறு கூறாவிட்டாலும் கூட, அன்னார் (ஸல்) இதையேதான் கூறியிருப்பார்கள். (ஆகவேதான்) அன்னார் (ஸல்) எப்போதும் இதையே போதித்து வந்தார்கள்; தம்மை பின்பற்றுபவர்களிடமும், நானும் உங்களைப் போன்ற ஒரு மனிதனாகிய தூதரே அன்றி வேறில்லை என்பதையே கூறி வந்தார்கள்.

எவ்வாறிருப்பினும், இந்த அறிவிப்பின் பொருள் என்னவென்றால், அத்தகையதொரு வாய்ப்பு வந்தபோதும், அன்னார் (ஸல்) மிகுந்த பணிவோடு, நான் ஒரு மன்னராக இருக்கும் இறைத்தூதராக மாற விரும்பவில்லை; மாறாக அல்லாஹ்வின் ஓர் எளிய அடியானாகவும் அவனது தூதராகவுமே இருக்க விரும்புகிறேன் என்று கூறினார்கள். இதனையே நாம் நமது கலிமாவிலும் சாட்சி பகர்கிறோம்.

ஓர் உண்மையான முஸ்லிம் எத்தகைய பணிவுடையவனாக இருக்க வேண்டும் என்பது குறித்து ஹஸ்ரத் இயாஸ் பின் ஹிமார் அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

'நிச்சயமாக அல்லாஹ் எனக்கு வஹீ அனுப்பியிருக்கிறான்: நீங்கள் அனைவரும் பணிவை மேற்கொள்ளுங்கள்; எந்த அளவுக்கென்றால், ஒருவர் மற்றவருக்கு அநீதி இழைக்கக் கூடாது; எவரும் மற்றவரிடம் பெருமை பாராட்டக் கூடாது என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(ஸுனன் அபூதாவூத், ஹதீஸ் எண்: 4895)

அன்னாரின் உண்மை ஊழியரான ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு அறிவுரை வழங்கும் போது கூறுகிறார்கள்:

'(மனிதன்) பணிவைக் கடைப்பிடிக்க வேண்டும். பணிவைக் கற்றுக் கொள்வது ஒன்றும் கடினமான காரியம் அல்ல; அதில் கற்றுக் கொள்ள என்ன உள்ளது? மனிதன் இயல்பாகவே எளியவனாக உள்ளான். அவன் பணிவிற்காகவே படைக்கப்பட்டிருக்கிறான்.

مَا خَلَقْتُ الْجِنَّ وَالْإِنْسَ إِلَّا لِيَعْبُدُوْنِ

அதாவது, நான் ஜின்களையும் மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே அன்றி படைக்கவில்லை (என்று அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறியுள்ளான்).

ஆணவம் போன்ற அனைத்தும் செயற்கையான விஷயங்கள் மட்டுமே ஆகும். மனிதன் தன்னிடம் இருக்கும் அந்தப் போலித் தனத்தைக் களைந்து எறிந்துவிட்டால், பின்னர் அவனது இயல்பில் பணிவு மட்டுமே தென்படும்.'( மல்ஃபூஸாத், தொகுதி 5, பக்கம் 38,2022-ம் ஆண்டு பதிப்பு)

நமக்கு அறிவுரை வழங்கியவாறும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பணிவின் நிலையை எடுத்துரைத்தவாறும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு மற்றோரிடத்தில் கூறுகிறார்கள்:

அல்லாஹ் மிக அருளாளனும், கருணையாளனுமாக இருக்கிறான். அவன் மனிதனை எல்லா விதங்களிலும் பரிபாலித்து, அவன் மீது கருணை பொழிகிறான். அந்த கருணையின் காரணமாகவே, உலக மக்களைப் பாவங்கள் நிறைந்த வாழ்க்கையிலிருந்து மீட்பதற்காகத் தனது தூதர்களையும், நியமிக்கப்பட்டவர்களையும் அனுப்புகிறான்.

ஆனால், ஆணவம் என்பது மிகவும் ஆபத்தான ஒரு நோயாகும். எந்த மனிதனுக்குள் இந்த நோய் குடியேறுகிறதோ, அவனுக்கு ஆன்மிக மரணம் நிச்சயம் ஏற்பட்டுவிடுகிறது. இந்த நோயானது ஒரு கொலையை விடவும் கொடியது என்பதை நான் உறுதியாக அறிவேன். ஆணவம் கொண்டவன் ஷைத்தானின் சகோதரனாக மாறிவிடுகிறான்; ஏனெனில், இந்த ஆணவம்தான் ஷைத்தானை இழிவிற்கும், கேவலத்திற்கும் உள்ளாக்கியது.

எனவே, ஒரு நம்பிக்கையாளருக்குரிய நிபந்தனை என்னவென்றால், அவனிடம் எவ்வித பெருமையும் இருக்கக் கூடாது; மாறாக அவனிடம் தன்னடக்கம், பணிவு மற்றும் எளிமை காணப்பட வேண்டும். இது இறைத்தூதர்களின் தனித்துவமான நற்பண்பாகும். அவர்களிடம் எல்லையற்ற பணிவும் தன்னடக்கமும் இருக்கும். எல்லாரையும் விட மேலாக, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் இந்த நற்பண்பு அதிகமாக காணப்பட்டது.

அன்னாரின் ஊழியர் ஒருவரிடம், உங்களுடன் அன்னாரின் அணுகுமுறை எவ்வாறு இருந்தது என்று கேட்கப்பட்டது. அதற்கு அவர், உண்மையைச் சொல்வதென்றால், நான் அன்னாருக்குச் செய்த சேவையை விட, அன்னார்தான் எனக்கு அதிகமாகச் சேவை செய்தார்கள் என்று குறிப்பிட்டார்.

இதுவே உயரிய நல்லொழுக்கங்களுக்கும், தன்னடக்கத்திற்கும் மிகச் சிறந்த முன்மாதிரியாகும்!

ஒரு மனிதனுக்கு மிகவும் நெருக்கமானவர்களாகவும், அவனை எப்போதும் சூழ்ந்திருப்பவர்களாகவும் அவனது பணியாளர்களே இருக்கிறார்கள் என்பது முற்றிலும் உண்மையான விஷயமாகும். எனவே, ஒருவருடைய பணிவு, தன்னடக்கம், பொறுமை மற்றும் சகிப்புத்தன்மை ஆகியவற்றின் உண்மையான முன்மாதிரியை கண்டறிய வேண்டுமானால், அது அவனது பணியாளர்களின் மூலமே தெரியவரும். சில ஆண்கள் அல்லது பெண்கள் எவ்வாறு உள்ளார்கள் என்றால், தங்களது வேலைக்காரர்களிடமிருந்து ஏதேனும் ஒரு சிறிய தவறு நடந்துவிட்டால் - உதாரணத்திற்குத் தேநீரில் ஏதேனும் குறை ஏற்பட்டுவிட்டால், உடனே அவர்களை வசைபாடத் தொடங்கி விடுகிறார்கள் அல்லது சாட்டையைக் கொண்டு அடிக்கத் தொடங்கி விடுகிறார்கள். குழம்பில் சற்றே உப்பு அதிகமாகிவிட்டால் போதும், அந்த ஏழைப் பணியாளர்களுக்குப் பேரழிவே வந்துவிடுகிறது!

மறுபுறம், அந்த ஏழைகள் வறுமையில் வாடி, காய்ந்த ரொட்டியைக் கொண்டு காலத்தைக் கழிப்பவர்களாக இருப்பார்கள்; ஆனால் இந்தச் செல்வந்தர்கள் தங்களுக்கு தெரிந்திருந்தும் அவர்களைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. ஏழைகள் அவர்களிடம் ஏதேனும் உதவி கேட்டு வரும்போது, அவர்கள் இவர்களைச் சோதனைக்குள்ளாக்குகிறார்கள். அதாவது, ஏழைகள் உதவி கேட்டு வரும்போது அல்லாஹ் அந்தச் செல்வந்தர்களைச் சோதனையில் ஆழ்த்துகிறான். எனவே, அவர்களின் தேவைகளை நிறைவேற்றி வைப்பதே உண்மையான நன்மையாகும். இறைவனோ அணுவளவும் உள்ள அனைத்துப் பொருட்களையும் படைத்தவனாவான்; அவனுக்கு நிகராக எவரும் இருக்க முடியாது. ஏழைகளிடம் ஒரு மனிதன் நடந்துகொள்ளும் விதத்தைக் கொண்டே, அவன் இறை அச்சம் உள்ளவனா அல்லது இறை அச்சமற்றவனா என்பது கண்டறியப்படுகிறது.

(மல்ஃபூஸாத், தொகுதி 7. பக்கம் 312-313, 2022-ம் ஆண்டு பதிப்பு)

ஒரு மனிதனிடம் இறையச்சம் எந்தளவு உள்ளது என்பதை ஏழைகளிடம் அவன் காட்டும் நடத்தையைக் கொண்டே அறிய முடியுமே தவிர, செல்வந்தர்களிடம் அவன் காட்டும் நல்ல நடத்தையைக் கொண்டு ஒருபோதும் அறிய முடியாது.'

அல்லாஹ், நமக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் போதனைகளையும் அன்னாருடைய நடைமுறைகளையும் பின்பற்றியவாறு, பணிவின் வழிகளைத் தேர்ந்தெடுத்து நடப்பதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக!

தொழுகைக்குப் பிறகு, நான் ஒரு ஜனாஸா காயிப் தொழுகையையும் தொழ வைப்பேன். விகாடியைச் சேர்ந்த தற்போது கராச்சியில் வசிக்கும் மதிப்பிற்குரிய மலிக் தாவூத் மஹ்மூத் ஸாஹிப் அவர்களுடையதாகும். இவர் முஹம்மது இஸ்ஹாக் சாஹிப் அவர்களின் மகன் ஆவார். கடந்த சில நாட்களுக்கு முன்பு அவர்கள் மரணமடைந்தார்கள்.

انالله وانا اليه راجعون

அல்லாஹ்வின் அருளால், அவர்கள் வஸிய்யத் செய்தவராக இருந்தார்கள். அவர்களது பாட்டனார் முஹம்மது தீன் சாஹிப் அவர்கள், ஸியால்கோட் மாவட்டத்தின் பட்ஹ்தான்வாலா கிராமத்தைச் சேர்ந்தவர் ஆவார். அவர் 1914 ஆம் ஆண்டில் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் கரங்களில் பைஅத் செய்தார்.

மர்ஹூம் மலிக் தாவூத் சாஹிப் அவர்களுக்கு உள்ளூர் அளவில் ஜமாஅத் தலைவராகவும், செக்ரட்டரி மால் ஆகவும், அன்ஸாருல்லாஹ் அமைப்பிலும் தொண்டாற்றும் நல்வாய்ப்பு கிடைத்தது.

Proprietor off : 044- 2260 1886
RAZIK XEROX & TELECOM
AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE
AO MULTI COLOUR PLAN XEROX

➤ PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
➤ LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
➤ SCANNING, RECHARGE, COLOUR XEROX,
➤ ALL VEHICLE INSURANCE, COURIER
NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com

மர்ஹூம் அவர்கள், மூன்று மகள்களையும் நான்கு மகன்களையும் பின் விட்டுச் சென்றுள்ளார்கள். அவர்களின் மகன்களுள் ஒருவரான முஹம்மது அக்மல் சாஹிப் அவர்கள் ஜமாஅத்தின் முரப்பியாக கேம்பியாவில் தொண்டாற்றி வருகிறார். அவர் செயல் களத்தில் உள்ளதால், தனது தந்தையின் ஜனாஸா தொழுகையில் கலந்துகொள்ள இயலவில்லை.

முரப்பி அக்மல் ஸாஹிப் அவர்கள் தனது தந்தையைக் குறித்து இவ்வாறு எழுதியுள்ளார்:

' எனது தந்தை மிகவும் இன்முகமும், மகிழ்ச்சியான குணமும், துடிப்பான உள்ளமும் கொண்ட மனிதராக இருந்தார். தப்லீஃக் செய்வதில் அவர்களுக்குப் பேரார்வம் இருந்தது. அவர்கள் சிந்து பகுதியிலுள்ள தமது விவசாய நிலங்களுக்குச் செல்லும் போதெல்லாம், அங்கேயும் தப்லீஃக் செய்வதற்கான ஏதேனும் ஒரு காரணத்தைத் தேடிப்பிடித்து மக்களுக்கு தப்லீக் செய்வார்கள். பாகிஸ்தானில் கடுமையான சட்டம் இயற்றப்படும் வரை, அவர்கள் எப்போதும் தம் கைகளில் பிரசுரங்களை வைத்திருந்தார்கள்; எப்போதும் தப்லீஃக் செய்து கொண்டே இருப்பார்கள். இதன் காரணமாக எத்தனையோ மக்களை தம் பக்கம் ஈர்க்கவும் செய்தார்கள்.

அவர்கள் சிறந்த முறையில் விருந்தோம்பல் செய்யக் கூடியவராக இருந்தார்கள்; தலைமையகத்திலிருந்து வரும் விருந்தினர்களாக இருந்தாலும் சரி! வேறு எந்த விருந்தினராக இருந்தாலும் சரி! அவர்களுக்கு நல்ல முறையில் விருந்தோம்பல் செய்வார்கள். தொழுகை மையம் உருவாகாதவரையிலும் தமது வீட்டிலேயே ஒரு தொழுகை மையத்தை உருவாக்கி, ஜமாஅத்தான தொழுகைகளுக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்கள். ஃபஜ்ர் தொழுகைக்குப் பிறகு, மிகவும் உரத்த குரலில் திருக்குர்ஆனை ஓதுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். அவர்களது அந்த தொழுகை மையத்திற்குப் பக்கத்து ஜமாஅத்களைச் சேர்ந்த மக்களும் ஜுமுஆ தொழுகைக்காக ஒன்றுகூடி வந்தார்கள்.

அவர்கள் தமது விவசாய நிலங்களுக்குச் செல்லும்போது, நான் எனது வயல்களின் ஒவ்வொரு மூலையிலும் நஃபில் தொழுகைகளை நிறைவேற்றுகிறேன்; இதனால்தான் அல்லாஹ் எனது பயிர்களில் பரக்கத் செய்கிறான். மற்றவர்களை விட எனக்கு இருமடங்கு விளைச்சல் கிடைக்கிறது என்று கூறுவார்கள். அதேபோன்று, தமது கிராமத்தில் கட்டிய வீட்டைப் பற்றித் தமது பிள்ளைகளிடம், நான் இந்த வீட்டை முழுமையாக ஜமாஅத்திற்கு வழங்கி, இது ஜமாஅத்தின் (நிலையான) மையமாக மாற வேண்டும் என்று விரும்புகிறேன் என்று கூறினார்கள். அதன்படியே அவர்கள் அதனை ஜமாஅத்திற்கு வழங்கியும் விட்டார்கள்.'

விருந்தோம்பல் அவர்களிடம் தனிச்சிறப்பாகக் காணப்பட்ட ஒரு நற்பண்பாகும். மக்களுக்கு தொண்டு செய்வது, ஜமாஅத்திற்கு முழுமையாகக் கீழ்ப்படிவது, குத்பாக்களை (எப்போதும் தவறாமல்) கேட்பது ஆகியவை அவர்களது தனிச்சிறப்பான பண்புகளாக இருந்தன.

அல்லாஹ் அவர்களுடன் பாவ மன்னிப்புடன் நடந்து கொள்வானாக!

(அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல், ஜூன் 12, 2026, பக்கம் 2 - 8)

தமிழாக்கம்
முரப்பி
A.P.A. தாரிக் அஹ்மது

* * * * * * * * * *

**1- ம் பக்கத் தொடர்ச்சி.........**
**(தஃப்ஸீரே கபீர்.....)**

மற்றொரு வசனமான

وَالَّذِيْنَ هُمْ لِاَمٰنٰتِهِمْ وَعَهْدِهِمْ رٰعُوْنَ

(மேலும் அவர்கள் தங்கள் நம்பிக்கைகளையும் உடன்படிக்கைகளையும் பேணிக் காப்பவர்கள்) (அல்-முஃமினூன்: 9) என்பதிலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. மேலும், ஒரு சமூக விவகாரங்களின் ஒரு முக்கியமான அம்சம் என்பது பிறரிடம் அமானிதத்தை ஒப்படைப்பதும் ஆகும் என்று அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. எனவே, கடன் விவகாரங்களில் மட்டுமல்லாமல், அமானிதம் தொடர்பான அனைத்து விவகாரங்களிலும் நீங்கள் இறையச்சத்துடன் செயல்பட வேண்டும்.

நம்பி ஒப்படைத்தவர் வந்து, அதை நீங்கள் திருப்பி ஒப்படைப்பதில் தயக்கம் காட்டத் தொடங்கி விடக் கூடாது.

(தஃப்ஸீரே கபீர், தொகுதி 2, பக்கம் 628, 629)

* * * * *   * * * * * *

**2-ம் பக்கத் தொடர்ச்சி ....**
**ஹுஸூர் அவர்களின் கேள்வி பதில்**

முஹம்மத்' என்பது அன்னாரின் மார்க்கத்தின் வெற்றி மற்றும் அன்னாரின் உம்மத்தின் மீது அன்னாருடைய பரிந்துரையின் பலனைப் பெறுவதற்கான துஆ ஆகும். மேலும் 'அல்லாஹும்ம பாரிக் அலா முஹம்மத்' என்பது முஹம்மது (ஸல்) அவர்களின் கண்ணியமும், மேன்மையும் என்றென்றும் நிலைத்திருப்பதற்கான துஆ ஆகும்.

ஹதீஸ்களில் துரூத் ஷரீஃபின் மேன்மைகள் அதிகம் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

ஹஸ்ரத் உபை பின் கஅப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

நான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், 'நான் எனது துஆக்களில் எவ்வளவு நேரத்தை தங்கள் மீது துரூது ஓதுவதற்கு ஒதுக்க வேண்டும்?' என்று கேட்டேன். அதற்கு, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், 'நீ எவ்வளவு வேண்டுமானாலும் ஒதுக்கலாம்' என்றார்கள். நான், 'நான்கில் ஒரு பங்கா?' என்றேன். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், 'நீ விரும்பிய அளவு; ஆனால் அதிகரித்தால் அது உமக்கு நல்லது' என்றார்கள்.

நான், 'பாதியா?' என்றேன். நபி (ஸல்) அவர்கள், 'நீ விரும்பிய அளவு; ஆனால் அதிகரித்தால் அது உமக்கு இன்னும் நல்லது' என்றார்கள். நான், 'மூன்றில் இரண்டு பங்கா?' என்றேன். அதற்கு, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், 'நீ விரும்பிய அளவு; ஆனால் அதிகரித்தால் அது உமக்கு இன்னும் நல்லது' என்றார்கள். நான், 'எனது துஆவின் முழு நேரத்தையும் தங்களுக்காகவே ஒதுக்குகிறேன்' என்றேன். அப்போது நபி (ஸல்) அவர்கள், 'அப்படியானால், உமது இம்மை மற்றும் மறுமையின் தேவைகள் அனைத்தும் நிறைவேற்றப்படும்; உமது பாவங்கள் மன்னிக்கப்படும்' என்று கூறினார்கள்.

(சுனன் திர்மிதி, கிதாபு ஸிபத்தில் கியாமத் வர் ரகாயிக் வல் வரா' பாபு மா ஜாஅ ஃபீ ஸிஃபதி அவானி அல்-ஹவ்ழ்).

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் துரூத் ஷரீஃபின் மேன்மையை விவரித்தவாறு கூறுகின்றார்கள்:

'ஒருமுறை, நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது துரூத் ஓதும்போது நான் ஆழ்ந்த நிலையில் இருந்தேன், ஏனெனில் இறைவனை அடைவதற்கான வழிகள் மிகவும் நுணுக்கமானவையாகும். முஹம்மது (ஸல்) அவர்களின் துணையின்றி அவற்றைக் கடக்க முடியாது, وَابْتَغُوْٓا اِلَيْهِ الْوَسِيْلَةَ

என்று அல்லாஹ் கூறுகின்றான். (அல்-மாயிதா: 36).

நீண்ட நேர தியான நிலைக்குப் பிறகு நான் பார்த்தேன், என்னிடம் இரண்டு விருந்தினர்கள் வந்தார்கள், ஒருவர் உள்வாசல் வழியாகவும் மற்றவர் வெளிவாசல் வழியாகவும் என் வீட்டிற்குள் நுழைந்தார். அவர்கள் இருவரின் தோள்களிலும் ஒளிகளின் குடங்கள் இருந்தன.

هٰذَا بِمَا صَلَّيْتَ عَلٰى مُحَمَّدٍ

(இது முஹம்மது (ஸல்) அவர்கள் மீது நீங்கள் ஓதிய துரூதின் பலன்) என்று அவர்கள் கூறினார்கள்.' (ஹக்கீகத்துல் வஹீ, ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 131, அடிக்குறிப்பு)

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِ مُحَمَّدٍ وَّبَارِكْ وَسَلِّمْ

திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸ்களின் அடிப்படையில் துரூத் ஷரீஃபின் மேன்மை மற்றும் முக்கியத்துவத்தைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) மற்றும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) ஆகியோர் தங்கள் ஜுமுஆ பேருரைகள் மற்றும் சொற்பொழிவுகளில் பலமுறை விரிவாகக் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த உரைகளை 'அல்-ஃபஸ்ல்' மற்றும் 'alislam.org' இணையதளத்தில் நீங்கள் படித்துக் கொள்ளலாம். (ஆதாரம்: அல்-ஃபஸ்ல் இன்டர்நேஷனல், 7 பிப்ரவரி 2026).

* * * * * * * * * *

# ஸீரத் காத்தமுன் நபிய்யீன் (ஸல்)

**(நூலாசிரியர்:ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் எம்.ஏ. (ரலி) அவர்கள்)**

**அரேபியர்களின் வணிகம்**

அரேபியர்களின் சமுதாயத் தொழில்கள் மூன்றே இருந்தன. முதலாவது விவசாயம், இது நாட்டின் மிகச் சிறிய பகுதிக்கு மட்டுமே வரையறுக்கப்பட்டிருந்தது. இரண்டாவது கால்நடை வளர்ப்பு, இதை ஆங்கிலத்தில் 'பேஸ்டரிங்' (Pasturing) என்று அழைப்பார்கள். இதுவும் நாட்டின் குறிப்பிட்ட பகுதிகளில் மட்டுமே சாத்தியமாக இருந்தது. மூன்றாவது வணிகம், இதை ஒரு நாட்டின் மிகப் பெரிய தொழிலாகக் கருத வேண்டும். அரேபிய மக்கள் எப்போதும் வணிகத் தொழிலில் ஈடுபடுபவர்களாகவே இருந்துள்ளனர். குறிப்பாக, கடற்கரைக்கு அருகில் அல்லது நாகரிகமடைந்த நாடுகளுக்கு அருகில் வசித்த கோத்திரத்தார் பழங்காலத்திலிருந்தே வணிகத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆரம்ப காலத்தில், கிழக்கு மற்றும் மேற்கு நாடுகளுக்கு இடையே வணிகப் பொருட்களைக் கொண்டு வருவது மற்றும் கொண்டு செல்வதில் அரேபியர்களே பெரும் ஆதாரமாக இருந்தனர். இதனால், ஒருபுறம் சிரியாவிற்கும் மறுபுறம் இந்தியப் பெருங்கடல் கடற்கரைக்கும் இடையே அவர்களின் வணிகக் குழுக்கள் தொடர்ந்து சென்று கொண்டிருந்தன, அவை இந்தியா, சிரியா மற்றும் எகிப்திற்கு இடையே ஒரு வணிக இணைப்பாகச் செயல்பட்டன. ஆனால், கடல் வழிப்பாதை திறக்கப்பட்டதால், இந்த வணிகத்திற்கு கடுமையான பாதிப்பு ஏற்பட்டது. சிரியாவிலிருந்து ஹிஜாஸ் வழியாகவும், பின்னர் ஏமன் மற்றும் ஹத்ரமௌத் வழியாகவும் அரேபியாவின் கிழக்குக் கடற்கரைக்குச் சென்ற அந்தப் பழைய பாதையில் வணிகக் குழுக்களின் போக்குவரத்து நடைமுறையில் முற்றிலும் நின்று போனது. மேலும் நாட்டின் உள்ளே சிறிய அளவிலான வணிகம் மட்டுமே எஞ்சியிருந்தது. இந்த உள்நாட்டு வணிகம் ஹிஜாஸ், ஏமன், பஹ்ரைன் மற்றும் நஜ்த் போன்ற பகுதிகளில் மட்டுமே வரையறுக்கப்பட்டிருந்தது. ஆனால், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பிறப்பிற்கு சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்பு, சிரியாவுடன் ஹிஜாஸ் மற்றும் ஏமனின் வணிகத் தொடர்பு மீண்டும் தொடங்கியது. இருப்பினும், இது முந்தைய அளவில் இல்லாவிட்டாலும், நாட்டில் மீண்டும் ஒரு புத்துணர்ச்சியை அளித்தது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில், மக்கத்து குறைஷிகளின் வணிகக் குழுக்கள் சிரியா மற்றும் ஏமன் நாடுகளுக்கு வழக்கமாகச் சென்று கொண்டிருந்தன, சில சமயங்களில் அரேபியாவின் பிற பகுதிகளுக்கும் சென்றன. ஆனால் அக்காலத்தில், குறைஷிகளின் மிகப்பெரிய வணிகம் சிரியாவுடனேயே இருந்தது.

* * * * * * * * * *

# ஜுமுஆ பேருரை

## பணிவு மற்றும் தாழ்மை குணம் ஆகியவற்றின் அடிப்படையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயரிய நல்லொழுக்கம் தொடர்பாக மனம் கவர் பேருரை

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 15 மே 2026** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1405 ஆண்டு **ஹிஜ்ரத்** மாதம் **15 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

**சென்ற இதழின் தொடர்ச்சி.....**

ஹஸ்ரத் ஆமிர் பின் ரபிஆ (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

ஒருவர் கூறினார்; நான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் பள்ளிவாசலை நோக்கிப் புறப்பட்டேன். அப்போது அன்னாருடைய காலணியின் வார் அறுந்துவிட்டது. நான் அக்காலணியைப் பெற்று அதனைச் சரிசெய்ய முயன்றேன். ஆனால் அன்னார் (ஸல்) எனது கையிலிருந்து அந்தக் காலணியைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, இது எனக்குத் தரப்படும் தனிச்சலுகையாகும்; எனக்கு இத்தகைய தனிச்சலுகை காட்டப்படுவதை நான் விரும்பவில்லை என்று கூறினார்கள்.'

ஹஸ்னா பின் காலித் மற்றும் ஸூவாஃ பின் காலித் (ரலியல்லாஹு அன்ஹுமா) அறிவிக்கிறார்கள்:

அவர்கள் இருவரும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வந்தபோது, அன்னார் (ஸல்) ஒரு சுவரையோ அல்லது தமது வீட்டையோ பழுது பார்க்கும் பணியில் ஈடுபட்டிருந்தார்கள்; தமது கரங்களாலேயே அந்த வேலைகளைச் செய்து கொண்டிருந்தார்கள்.

அதேபோல், ஸஹீஹ் புகாரியில் மஸ்ஜிதுன் நபவி கட்டப்பட்ட நிகழ்வு விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒட்டகம் இரண்டு (அனாதைச்) சிறுவர்களுக்குச் சொந்தமான இடத்தில் போய் நின்றபோது, இந்த இடம் நமக்கு உகந்தது என்று அன்னார் கூறினார்கள். அந்தச் சிறுவர்கள் அவ்விடத்திற்கு பணம் வாங்க மறுத்தபோதிலும் (அன்னார் (ஸல்) இலவசமாகப் பெற விரும்பாமல்) அதற்கான முழு விலையையும் அவர்களுக்கு வழங்கினார்கள். பிறகு பள்ளிவாசல் கட்டும் பணி தொடங்கியபோது, அன்னார் (ஸல்) மக்களுடன் இணைந்து செங்கலைச் சுமக்கத் தொடங்கினார்கள்; பள்ளிவாசல் கட்டுமானத்தின் அனைத்து வேலைகளிலும் தாமும் பங்கெடுத்தார்கள்.

ஹஸ்ரத் பராஃ பின் ஆஸிப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

'அகழ் போரின் போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மண்ணைச் சுமந்து செல்வதைக் கண்டேன்; அந்த மண், அன்னாருடைய மார்பின் முடிகளை மறைக்கும் அளவிற்கு (அன்னாருடைய உடல் முழுவதும்) படிந்திருந்தது.

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

'நான் ஒரு காலை வேளையில் அப்துல்லாஹ் பின் அபி தல்ஹாவை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் அழைத்துச் சென்றேன். அதாவது பிறந்த குழந்தைக்கு முதல் உணவை கொடுப்பதற்காக அழைத்துச் சென்றிருந்தேன். அதாவது, குழந்தை பிறந்திருந்தது. தேனை நாவில் தடவுவதற்காக அழைத்துச் சென்றிருந்தார்கள். -

நான் அன்னாருடைய சமூகத்திற்குச் சென்றபோது அன்னார் (ஸல்) ஒரு வேலையில் ஈடுபட்டிருந்தார்கள்; அன்னாருடைய கையில் விலங்குகளுக்கு அடையாளக் குறியிடும் (நம்பர் இடும்) இரும்பு ஆயுதம் இருந்தது. அன்னார் (ஸல்) ஸதகா ஒட்டகங்களுக்கு அடையாளக் குறியிட்டுக் கொண்டிருந்தார்கள்.'

எந்தவொரு வேலையாக இருந்தாலும், உதவியாளர்களை அழைப்பதற்குப் பதிலாக, சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் அதனைத் தாமே முன்னின்று செய்வார்கள்.

ஹஸ்ரத் அபூ உமாமா பாஹ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஒருமுறை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஒரு கைத்தடியை ஊன்றியபடி எங்களிடம் வந்தார்கள். அன்னாரைக் கண்டவுடன் நாங்கள் எழுந்து நின்றோம். அப்போது, பாரசீகர்கள் தங்கள் பெரியவர்களுக்காக எழுந்து நிற்பதைப் போல நீங்கள் செய்யாதீர்கள் என்று அன்னார் (ஸல்) தடுத்தார்கள்.

பிறகு நாங்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எங்களுக்காக அல்லாஹ்விடம் துஆ செய்யுங்கள் என்று வேண்டினோம். அதற்கு அன்னார்(ஸல்),

اَللّٰهُمَّ اغْفِرْلَنَا وَارْحَمْنَا وَارْضَ عَنَّا وَتَقَبَّلْ مِنَّا
وَاَدْخِلْنَا الْجَنَّةَ وَنَجِّنَا مِنَ النَّارِ
وَاَصْلِحْ لَنَا شَاْنَنَا كُلَّهُ

அல்லாஹ்வே! எங்களை மன்னிப்பாயாக! எங்கள் மீது கருணை காட்டுவாயாக! எங்கள் மீது திருப்தி கொள்வாயாக! எங்களிடமிருந்து ஏற்றுக் கொள்வாயாக! எங்களைச் சொர்க்கத்தில் புகுத்துவாயாக! எங்களை நெருப்பிலிருந்து காப்பாயாக! எங்களது அனைத்து விவகாரங்களையும் சீர்படுத்துவாயாக! என்று துஆ செய்தார்கள்.

அறிவிப்பாளர் கூறுகிறார்:

அன்னார் (ஸல்) எங்களுக்காக இன்னும் அதிகமாக துஆ செய்ய வேண்டும் என்று நாங்கள் விரும்பியபோது, அதற்கு, உங்களுக்குத் தேவையான அனைத்து விஷயங்களையும் நான் இந்தத் துஆவில் சேர்த்துவிடவில்லையா என்று கேட்டார்கள். அதாவது இது மிக முழுமையான துஆ ஆகும், இதனையே எப்போதும் ஓதி வாருங்கள் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பணிவு எத்தகையது என்றால், தாம் வரும்போது மக்கள் எழுந்து நிற்பதை அன்னார் (ஸல்) தடுத்தார்கள். இது பாரசீகர்களின் பழக்கம்; நான் ஒன்றும் மன்னன் அல்ல; மாறாக அல்லாஹ் என்னை ஒரு நபியாக ஆக்கியிருக்கிறான் என்று கூறினார்கள்.

எனவே, அன்னாருடைய பணிவின் தரம் எத்தகையதாக இருந்தது என்றால் அதற்கான உதாரணத்தை நாம் எங்கும் காண முடியாது. இத்தகைய முன்மாதிரியைப் பின்பற்றி நடக்கவே நாம் முயற்சி செய்ய வேண்டும்; அப்போதுதான் நாம் அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெற முடியும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்மாதிரியின் ஒளியில் நமக்கு அறிவுரை வழங்கியவாறு கூறுகின்றார்கள்:

'என்னைப் பொறுத்தவரை தூய்மையடைவதற்கு இதுவே மிகச் சிறந்த வழியாகும்; இதைவிடச் சிறந்த வழி ஒன்று இருக்க முடியாது. அது என்னவென்றால், கல்வி, குடும்பம் அல்லது செல்வம் என எதன் மூலமாகவும் மனிதன் எவ்விதத் தற்பெருமையோ அல்லது ஆணவமோ கொள்ளக் கூடாது. அல்லாஹ் ஒருவனுக்கு கண்ணை வழங்கும்போது, இருள்களிலிருந்து விடுதலை அளிக்கக்கூடிய ஒவ்வோர் ஒளியும் வானத்திலிருந்தே வருகிறது என்பதையும், மனிதன் ஒவ்வொரு கணமும் அந்த வானத்து ஒளிக்குத் தேவையுடையவனாக இருக்கிறான் என்பதையும் அவன் கண்டு கொள்கிறான். வானத்திலிருந்து வரும் சூரிய ஒளி இல்லையென்றால் கண்ணால் பார்க்க முடியாது. அவ்வாறே, அனைத்து வகையான இருள்களையும் நீக்கி, அதற்குப் பதிலாக இறையச்சம் மற்றும் தூய்மையின் ஒளியை உருவாக்கும் அந்த அக ஒளியும் வானத்திலிருந்தே வருகிறது. நான் உண்மையாகக் கூறுகிறேன்! ஒரு மனிதனின் இறையச்சம், ஈமான், இறை வணக்கம், தூய்மை என அனைத்தும் வானத்திலிருந்தே வருகின்றன; அவை அல்லாஹ்வின் அருளைச் சார்ந்துள்ளன. அவன் நாடினால் அதனை நிலைநிறுத்துவான்; அவன் நாடினால் அதனை நீக்கிவிடுவான்.

**எனவே, மனிதன் தன் நஃப்ஸை முற்றிலும் அழித்து தன்னை ஒரு பொருட்டாகக் கருதாமல், இறைவனின் சந்நிதியில் விழுந்து பணிவோடும் தாழ்மையுடனும் அவனது அருளைத் தேடுவதே உண்மையான ஆன்மிக அறிவாகும். நஃப்ஸின் உணர்ச்சிகளைச் சுட்டெரித்து, உள்ளத்தில் ஓர் ஒளியையும் நற்செயல்கள் புரிவதற்கான ஆற்றலையும், வெப்பத்தையும் உருவாக்கும் அந்த அறிவின் ஒளியை இறைவனிடம் வேண்ட வேண்டும்.**

பிறகு, இறைவனது அருளினால் அவனுக்கு பங்கு கிடைத்து, அவனது உள்ளம் விரிவடைந்து தெளிவுபெறும் போது அதன் மீது பெருமையோ கர்வமோ கொள்ளக் கூடாது. மாறாக, அவனது எளிமையும், பணிவும் இன்னும் அதிகரிக்க வேண்டும். ஏனெனில், ஒரு மனிதன் தன்னை எந்த அளவிற்கு ஒரு பொருட்டாக கருதாமல் இருக்கிறானோ, அந்த அளவிற்கு அவனுக்கு ஒளியையும் ஆற்றலையும் வழங்கக் கூடிய இறைவனின் ஆன்மிக ஒளிகளும் தன்மைகளும் அவன் மீது இறங்குகின்றன. மனிதன் இந்த நம்பிக்கையைக் கொண்டிருந்தால், அல்லாஹ்வின் அருளினால் அவனது ஒழுக்க நிலை மிக சிறந்ததாக மாறிவிடும் என நம்பலாம். இவ்வுலகில் தன்னை ஒரு பொருட்டாக நினைத்துக் கொள்வதும் பெருமையாகும்; பிறகு மனிதன் பிறரைச் சபிப்பதற்கும், அவர்களை இழிவாகக் கருதுவதற்கும் இந்நிலையே காரணமாகிவிடுகிறது.'

அன்னார் (அலை)

**நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்**

தொலைபேசி எண் : 1800 103 2131

இந்த *TOLL FREE* எண்ணில் ஃபோன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

கூறுகிறார்கள்:

மனிதன் ஒரு பலவீனமான படைப்பாக இருந்தபோதிலும், தன் தீய செயல்களின் விளைவாகத் தன்னைத் தானே பெரியவனாக எண்ணத் தொடங்கிவிடுகிறான்; அவனுக்குள் பெருமையும், கர்வமும் குடியேறிவிடுகிறது. இறைவழியில் ஒரு மனிதன் தன்னை அனைவரை விடவும் சிறியவனாகக் கருதாதவரை, அவனுக்கு முக்தி (விடுதலை) கிடைக்காது. இந்தியாவின் புகழ்பெற்ற ஸூஃபி கவிஞரான பகத் கபீர் அவர்கள் மிகவும் சரியாகக் கூறியுள்ளார்கள்:

அதாவது, நான் ஓர் எளிய குடும்பத்தில் பிறந்ததற்காக அல்லாஹ்விற்கு நன்றி; ஏனெனில் ஒரு பெரிய குடும்பத்தில் பிறந்திருந்தால் இறைவனை அடைந்திருக்க முடியாது.

மக்கள் தங்கள் உயர் குலத்தை குறித்துப் பெருமைப்பட்ட போது, துணி நெய்பவராக இருந்த கபீர் அவர்கள் தமது எளிய நிலையைக் கண்டு இறைவனுக்கு நன்றி செலுத்தினார். எனவே, மனிதன் ஒவ்வொரு கணமும் தான் எவ்வளவு அற்பமானவன் என்பதை சுயபரிசோதனை செய்ய வேண்டும். ஒருவன் எத்தகைய உயர்ந்த குலத்தைச் சேர்ந்த மனிதனாக இருந்தாலும் சரி, அவனுக்கு அகக் கண் இருக்குமானால், ஏதேனும் ஒரு கோணத்தில் பிரபஞ்சத்தின் மற்ற படைப்புகளை விடத் தன்னைத் தகுதியற்றவனாகவும் அற்பமானவனாகவும் அவன் உணர்வான்.

**ஒரு மனிதன், ஓர் உயர் குலத்தைச் சேர்ந்த செல்வந்தரிடம் எவ்வாறு நடந்து கொள்வானோ அல்லது நடந்துகொள்ள வேண்டுமோ, அவ்வாறே ஒரு முதிய ஆதரவற்ற ஏழை பெண்ணிடமும் நல்லொழுக்கத்தோடு நடந்து கொள்ளாத வரை, எல்லாவித கர்வத்திலிருந்தும். பெருமையிலிருந்தும், ஆணவத்திலிருந்தும் தன்னைத் தற்காத்துக் கொள்ளாத வரை, அவன் ஒருபோதும் அல்லாஹ்வின் அரசாட்சியினுள் நுழையவே முடியாது.** இறைவனை அடைய வேண்டும் என்றால், அதற்குப் பணிவு என்பது மிக முக்கியமான நிபந்தனையாகும்.'

அல்லாஹ் நமக்குப் பணிவின் உண்மையை புரிந்து கொள்ளவும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியை எப்போதும் நம் முன் வைத்துச் செயல்படவும் நல்வாய்ப்பு வழங்குவானாக!

(அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல், ஜூன் 05, 2026, பக்கம் 2 - 8)

தமிழாக்கம்
முரப்பி
A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

❀❀❀

திருக்குர்ஆனிலிருந்து...

அல்லாஹ்வின் நினைவிலேயே
உள்ளங்கள் அமைதி அடைகின்றன
(13:29)

A. Khaleel Ahmad
( Melapalayam)

# ஸீரத்துல் மஹ்தி

**(நூலாசிரியர்: ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் எம்.ஏ. (ரலி) அவர்கள்)**

இந்த எளியவன் கூறுகின்றான்: லாஹூரில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் மரணமடைந்தபோது, அந்தநேரத்தில் எந்த அறையில் அன்னார் (அலை) மரணமடைந்தார்களோ அந்த அறையில் ஹஸ்ரத் மவ்லவி நூருத்தீன் ஸாஹிப் (ரலி) அவர்கள் இல்லை. ஹஸ்ரத் மவ்லவி ஸாஹிபிற்கு தகவல் கிடைத்தபோது அன்னார் வந்தார்கள். மேலும், ஹஸ்ரத் ஸாஹிப் அவர்களின் நெற்றியில் முத்தமிட்டார்கள்; பிறகு அங்கிருந்து உடனடியாக வெளியே வந்து விட்டார்கள். ஹஸ்ரத் மவ்லவி ஸாஹிப் அவர்களின் பாதம் கதவுக்கு வெளியே வந்தபோது, அந்த நேரத்தில் மவ்லவி ஸய்யிது முஹம்மது ஹஸன் ஸாஹிப் அவர்கள் உருக்கம் நிறைந்த குரலில், انت صدّیقی என்று கூறினார்கள். (அப்போது) மவ்லவி ஸாஹிப்! இந்த கேள்வியை விட்டு விடுங்கள்; காதியான் சென்று முடிவு செய்யப்படும்' என்று ஹஸ்ரத் மவ்லவி ஸாஹிப் (ரலி) அவர்கள் கூறினார்கள். இந்த உரையாடலை என்னைத் தவிர வேறு யாரும் கேட்டிருக்க மாட்டார்கள் என்பது இந்த எளியவனின் எண்ணமாகும்.

{16} பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்.

இந்த எளியவன் கூறுகிறேன்:

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களிடம் மூன்று மோதிரங்கள் இருந்தன. அதில் ஒன்று اَلَیۡسَ اللّٰہُ بِکَافٍ عَبۡدَہٗ ,இதனைக் குறித்து அன்னார் (அலை) பல இடங்களில் தமது எழுத்துக்களில் குறிப்பிட்டுள்ளார்கள். இது எல்லாவற்றையும் விட முதன்மையான மோதிரமாகும். இது வாதத்திற்குப் பல காலத்திற்கு முன்பே தயார் செய்யப்பட்டிருந்தது. இரண்டாவது,

غَرَسۡتُ لَکَ بِیَدِیۡ رَحۡمَتِیۡ وَقُدۡرَتِیۡ

**என்ற இல்ஹாம் பொறிக்கப்பட்ட மோதிரமாகும். இதனை அன்னார் (அலை) தமது வாதத்திற்க்குப் பிறகு தயார் செய்திருந்தார்கள். இது நீண்ட காலம் அன்னாரின் கரத்தில் இருந்தது.**

மூன்றாவது, இறுதி ஆண்டுகளில் தயார் செய்யப்பட்டதாகும். அது மரணத் தருவாயில் அன்னாரின் கரத்தில் இருந்தது. இந்த மோதிரத்தை அன்னார் தாமே தயார் செய்திருக்கவில்லை, மாறாக, 'நான் ஹுஸூர் அவர்களுக்காக ஒரு மோதிரத்தைத் தயார் செய்ய விரும்புகிறேன்'; அதில் நான் என்ன எழுதுவது? என்று ஒருவர் அன்னாரிடம் வேண்டினார்.

அதற்கு, ''மவ்லா பஸ்"என்று ஹுஸூர் அவர்கள் பதில் அளித்தார்கள். ஆக, அந்த நபர் இந்த வாசகங்களை எழுதி மோதிரத்தைத் அன்னாரிடம் சமர்ப்பித்து விட்டார்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் இறந்த நேரத்தில், ஒரு நபர் இந்த மோதிரத்தை அன்னாரிடமிருந்து கழற்றியிருந்தார். பின்னர், அவரிடமிருந்து தாயார் அதனை திரும்பப் பெற்றார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் மரணத்திற்கு சிறிது காலத்திற்குப் பிறகு, அந்த மூன்று மோதிரங்களை தாயார் அவர்கள் சகோதரர்களாகிய எங்கள் மூன்று பேரின் பெயரில் சீட்டு குலுக்கிப் போட்டார்கள்.

اَلَیۡسَ اللّٰہُ بِکَافٍ عَبۡدَہٗ

என்ற வாசகம் கொண்ட மோதிரத்திற்கு, மூத்த சகோதரர் அதாவது ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் பெயர் வந்தது.

غَرَسۡتُ لَکَ بِیَدِیۡ رَحۡمَتِیۡ وَقُدۡرَتِیۡ

என்ற வாசகம் கொண்ட மோதிரம் இந்த எளியவனின் பெயரும், "மவ்லா பஸ்" ன்ற வாசகம் கொண்ட மோதிரம் எனது அன்பிற்குரிய மியான் ஷரீஃப் அஹ்மது ஸாஹிப் அவர்களின் பெயரும் வந்தது. சகோதரிகளின் பங்கில் இதே போன்ற மேலும் இரண்டு தபர்ருக்காத் கிடைத்தன.

{17} பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்.

ஹஸ்ரத் தாயார் ஸாஹிபா அவர்கள் என்னிடம் கூறினார்கள்:

அன்னாரிடம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டார்கள்:

ஒருமுறை நான் ஒரு வழக்கை நடத்தச் சென்றேன். நீதிமன்றத்தில் மேலும் வழக்குகள் நடந்து கொண்டிருந்தன. மேலும் நான் ஒரு மரத்திற்கு அடியில் காத்துக் கொண்டிருந்தேன். தொழுகைக்கான நேரம் ஆகிவிட்டதால், நான் அங்கேயே தொழுகையைத் தொடங்கி விட்டேன். ஆனால், தொழுது கொண்டிருக்கும்போதே நீதிமன்றத்தில் இருந்து எனக்கு அழைப்பு வரத் தொடங்கி விட்டது. இருப்பினும் நான் தொழுது கொண்டிருந்தேன். நான் தொழுகையை முடித்தபோது, நீதிமன்றத்தின் ஊழியர் நின்று கொண்டிருந்ததை நான் கண்டேன். நான் ஸலாம் கொடுத்த உடன், மிர்ஸா ஸாஹிப் உங்களுக்கு வாழ்த்துகள்; நீங்கள் வழக்கில் வெற்றி பெற்று விட்டீர்கள் என்று அவர் என்னிடம் கூறினார். ❀❀❀

**16- ம் பக்கத் தொடர்ச்சி.........**
**(குத்பா பேருரை 29.5.26)**

எடுத்துரைத்துள்ளார்கள்.அது குறித்த ஒரு குறிப்பையும் எழுதியுள்ளார்கள்:

விவாதங்களின் பொதுவான முறைகளையும், விவாதம் செய்பவர்களின் நிலையையும் மக்கள் நன்கு அறிவர். அதாவது தங்களுக்கு எதிர் தரப்பினர் அல்லது தங்களுக்கு முன்னால் இருப்பவர் கூறும் உண்மையான விஷயத்தை விவாதத்தில் செய்பவர்கள் ஏற்றுக்கொள்வதும், பொதுமக்களுக்கு முன்னால் அதை ஒப்புக்கொள்வதும் மிகவும் கடினமானதாகும். விவாவதம் செய்யக் கூடியவர்களின் இந்த நிலையை மக்கள் அறிந்துள்ளனர். நான் ஆலிம்களை ஏளனம் செய்யவில்லை. ஆனால், ஆலிம்கள் தம் உயிரை கொடுப்பது எளிதாகும்; ஆனால் தங்களது தவறை ஒப்புக்கொள்வது ஒரு பக்கம் இருக்கட்டும்; தங்களது எதிர் தரப்பினரின் சரியான மற்றும் அறிவார்ந்த வாதத்தை ஏற்றுக்கொள்ளும் பழக்கம் அவர்களுக்கு கிடையாது. இன்றைய நிலையும் இதுவாகவே உள்ளது.

ஆனால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் நிலை முற்றிலும் தூய்மை மற்றும் அல்லாஹ்வின் திருப்தியின் நிலையில் மூழ்கியுள்ளது. முஸ்லிம்களுக்குள் உள்நாட்டுப் போர் போன்ற சண்டைகள் ஏற்படுவதையோ அல்லது பரஸ்பர விவகாரங்களில் கருத்து வேறுபாடுகள் காரணமாக அவர்கள் உண்மையைத் தேடுவதை கைவிட்டு விடுவதையோ விரும்பவில்லை. அதாவது, உண்மையைத் தேடுவதையும், உண்மையான கூற்றுகளை கைவிட்டு விடுவதையும், அன்னார் (அலை) இயல்பாகவே விரும்பவில்லை என்பதும் இதன் மூலம் தெரிய வருகிறது.

அடுத்து இது எவ்வளவு பெரிய துணிச்சல் மற்றும் தைரியமாகும்? அதாவது, யாரிடம் விவாதம் செய்தார்களோ அவரது வீட்டிற்குச் செல்கின்றாகள்; மேலும், அவரது அறிவு மற்றும் செல்வாக்கினால் அன்னாரின் இயல்பில் எந்தவொரு தயக்கமும் பயமும் ஏற்படவில்லை. எனினும், அவரது வாயிலிருந்து ஓர் உண்மையான கூற்றை செவியேற்றபோது, மக்கள் என்ன சொல்வார்கள்? என்பதைப் பற்றி அன்னார் சற்றும் பொருட்படுத்தவில்லை. 'இவர் தோல்வியை ஒப்புக்கொண்டு தப்பி ஓடிவிட்டார்' என்றோ அல்லது 'எதிர்த் தரப்பினரால் ஈர்க்கப்பட்டுவிட்டார்' என்றோ மக்கள் கூறுவார்களே என்பதைப் பற்றி அன்னார் (அலை) கவலைப்படவில்லை. எது உண்மையான விஷயமாக இருந்ததோ, அதனை ஏற்றுக் கொண்டு விட்டார்கள். மக்கள் என்ன கூறுவார்கள்? என்பதைப் பற்றி அன்னார் (அலை) சற்றும் பொருட்படுத்தாமல் 'அவர் கூறியது சரியானதுதான் என்று வாதத்தின் உண்மைத்தன்மைக்கு நான் சான்றளித்து விட்டார்கள். இது எத்தகைய ஒரு செயல் என்றால், இதற்கு நிகரான உதாரணம் நபிமார்கள் மற்றும் அவர்களின் நெருங்கிய சீடர்களின் வாழ்க்கையைத் தவிர வேறு எங்கும் கிடைக்காது. **(இதன் தொடர்ச்சி அடுத்த இதழில்..)**

❀❀❀

# ஜுமுஆ பேருரை

## ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அடிமைத்துவத்தில் ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் பணிவு மற்றும் தாழ்மை குணம் தொடர்பான சம்பவங்கள்

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 29 மே 2026** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1405 ஆண்டு **ஹிஜ்ரத்** மாதம் **29 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۔ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۝ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝

مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۝ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ۝ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۝

صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۝

நமது எஜமானரும், தலைவருமான ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் போதனைகள் மற்றும் சுன்னத்திற்கு ஏற்ப அன்னாரின் உண்மை பேரன்பரின் பணிவு மற்றும் தாழ்மை குணத்தின் சம்பவங்களையும் மேலும் பணிவு மற்றும் தாழ்மை குணத்தை மேற்கொள்ளும்படி தமது ஜமாஅத்திற்கு அன்னார் (அலை) செய்த அறிவுகள் தொடர்பாகவும் சிலவற்றை நான் இன்று கூறுவேன். மார்ச் 18, 1907-ம் ஆண்டு, உமது எளிமையான வழிகள் அவனுக்கு பிடித்து விட்டன என்ற இல்ஹாம் அன்னாருக்கு இறங்கியது.

அன்னாருடைய தாழ்மை குணத்தின் உயர்ந்த தரத்தைக் கண்டவாறு அல்லாஹ்வே அன்னாருக்கு இல்ஹாம் மூலமாக அதற்கு சான்று பகர்ந்துள்ளான்.

ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:

இந்த எளியவனுக்கு (எனக்கு) வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்னவென்றால், இந்த எளியவன் தனது ஏழ்மை, பணிவு, முழுமையான இறைநம்பிக்கை, தியாகம் மற்றும் அடையாளங்கள் மற்றும் ஒளிகளின் அடிப்படையில் மஸீஹின் ஆரம்பகால வாழ்க்கையின் ஒரு முன்மாதிரி ஆவான். மேலும் இந்த எளியவனின் இயல்பும், மஸீஹின் இயல்பும் ஒன்றுக்கொன்று மிகவும் ஒப்புமை கொண்டதாக அமைந்துள்ளது. ஒருவகையில் ஒரே சாரத்தின் இரு துண்டுகள் அல்லது ஒரே மரத்தின் இரு கனிகள் ஆகும். மேலும் அவற்றுக்கிடையே ஒரு முழுமையான ஒற்றுமை உள்ளது; அதாவது ஒரே மாதிரியான ஓர் ஒற்றுமை உள்ளது. ஆன்மீகக் காட்சியில் மிகவும் நுட்பமான தனித்துவத்தைக் கொண்டுள்ளது, மேலும் வெளிப்படையான நிலையிலும் ஓர் ஒற்றுமை உள்ளது. அது என்னவென்றால், மஸீஹ் ஒரு முழுமையான மற்றும் மகத்துவ மிக்க நபியான அதாவது மூஸாவுக்குக் கீழ்ப்படிந்தவராகவும், அவருடைய மார்க்கத்தின் சேவகராகவும் இருந்தார். மேலும் இன்ஜீல் என்பது தவ்ராத்தின் ஒரு கிளையாக இருந்தது. அதேபோல், இந்த எளியவனும், தூதர்களுக்கெல்லாம் தலைவரும், அனைத்து இறைத்தூதர்களின் மகுடமுமாகிய அந்த கம்பீரமிக்க நபியின் மிக எளிய சேவகர்களைச் சார்ந்தவன் ஆவான்.'

(பராஹீனே அஹ்மதிய்யா பாகம் 4, ரூஹானி கஸாயின் தொகுதி 1, பக்கம் 593-594, அடிக்குறிப்பின் மீதி பகுதி 3)

ஒருமுறை, ஒரு நபர் ஹஸ்ரத் ஸாஹிப் அவர்களின் சமூகத்தில் கூறினார்:

'ஹுஸூர்! தாங்கள் ஹக்கீக்கத்துல் வஹீ நூலை எழுதுவதில் மிகுந்த சிரமங்களை மேற்கொண்டிருந்தீர்கள்.

இந்த நூல் அன்னாரின் வாழ்வின் இறுதிப் பகுதியில் எழுதப்பட்டது. இதை எழுதுவதற்கும், இதன் பிரதிகளை மீண்டும் மீண்டும் சரிபார்ப்பதற்கும் மிகுந்த சிரமங்கள் மேற்கொண்டார்கள். மேலும் இதன் காரணமாகவே ஹுஸூர் (அலை) அவர்கள் உடல்நிலை மீண்டும், மீண்டும் நோய்வாய்ப்பட்டு விட்டது.

தாங்கள் தற்போது சில நாட்கள் முழுமையாக ஓய்வெடுங்கள்; மேலும் படிப்பது மற்றும் எழுதுவது போன்ற பணிகளை முற்றிலும் தவிர்த்துவிடுங்கள் என்று வேண்டினார்.

ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்கள் இவ்வாறு பதிலளித்தார்கள்:

நாம் அப்படி என்னதான் உழைத்து விட்டோம்? ஸஹாபிகள் எவ்வளவு மகிழ்ச்சியுடன் இறைவனின் வழியில் தங்களின் தலைகளையே வெட்டிக் கொண்டார்கள்! என்று அவர்களின் தியாகங்களை நாம் சீர்தூக்கிப் பார்க்கும்போது நமக்கு வெட்கம் ஏற்படுகிறது. (மல்ஃபூஸாத், தொகுதி 9, பக்கம் 182, பதிப்பு 2022)

மற்றோர் இடத்தில் அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

நான் எனது படித்தரங்களை வரம்பிற்கு மேல் உயர்த்துகிறேன் என்று குறைமதி கொண்ட நபர்கள் ஆட்சேபனை செய்கின்றனர்.

அதாவது, மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் தமது அந்தஸ்தை மிக அதிகமாக உயர்த்திக் கொள்கிறார்கள் என்று கூறுகின்றனர்.

அன்னார் (அலை) கூறினார்கள்:

'நான் அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்து கூறுகிறேன். என்னை ஒருவர் புகழ வேண்டும் என்று விரும்புவதோ அல்லது எனது பெருமையின் வெளிப்பாட்டால் நான் மகிழ்ச்சியடைவதோ எனது இயல்பிலேயே இல்லை. நான் எப்போதும் பணிவான மற்றும் அறியப்படாத ஒரு வாழ்க்கையையே விரும்பி வந்தேன். ஆனால், அல்லாஹ்வே என்னை வெளியே கொண்டு வந்தான்; மேலும், என் மீது இறக்கப்பட்ட அவனது தூய வார்த்தைகளில் என்னை எந்தளவுக்குப் புகழ்ந்து எனது கண்ணியத்தை வெளிப்படுத்தினானோ அது எனது அதிகாரத்திற்கும், சக்திக்கும் அப்பாற்பட்டதாக இருந்தது.'

மேலும் அவர்கள் கூறினார்கள்:

'இந்த எல்லா புகழும், கண்ணியமும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்)அவர்களுக்கே உரியதாகும்.

'(மல்ஃபூஸாத், தொகுதி 4, பக்கம் 114, பதிப்பு 2022)

புதிதாக இஸ்லாத்தை ஏற்றவர்களுக்கும் அன்னார் (அலை) இஸ்லாத்தின் பணிவு மற்றும் எளிமைக்கான போதனையை அறிவுரையாக வழங்கி வந்தார்கள்.

ஆக, இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. அதாவது, அக்டோபர் 22, 1903 அன்று முஹம்மது அப்துல் ஹக் என்ற பெயருடைய ஆஸ்திரேலிய புதிய முஸ்லிம் ஒருவர் ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்களின் சமூகத்தில் வந்தார். உரையாடலின் போது ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்கள் அவரிடம் .இவ்வாறு கூறினார்கள்:

'நமது போதனைகளில் ஒன்று, நாம் எளிமையான வாழ்க்கையை வாழ்கிறோம் என்பதாகும். ஐரோப்பா இன்றைய நாட்களில் வாழ்வின் அத்தியாவசியத் தேவைகளாக மாற்றியிருக்கும் அந்த அனைத்து வீண் சடங்குகளிலிருந்தும் நமது அவை தூய்மையானதாகும். நாம் சம்பிரதாயங்களுக்கும், பழக்கவழக்கங்களுக்கும் கட்டுப்பட்டவர்கள் அல்ல. ஒரு பழக்கத்தை கைவிடுவதால் ஏதேனும் துன்பம் அல்லது பாவம் ஏற்படும் என்ற அச்சம் இருந்தால் மட்டுமே அந்த அளவுக்கு எல்லாப் பழக்கத்தையும் நாம் பேணுகிறோம்.

அதாவது எதனால் துன்பம் ஏற்படாதோ, பாவம் நிகழாதோ அதனையே பேணுகிறோம். மற்றபடி, உண்பது, குடிப்பது, அமர்வது, உரையாடுவது போன்றவற்றில் நாம் எளிமையான வாழ்க்கையையே விரும்புகிறோம்.'

(மல்ஃபூஸாத், தொகுதி 5, பக்கம் 294, 298-299, பதிப்பு 2022)

இவை பணிவின் உயர்தரமான நிலைகளாகும். இதனை அன்னார் (அலை) தமது ஜமாஅத்தின் உறுப்பினர்களிடமும் உருவாக்க விரும்பினார்கள்.

எனவே ஓரிடத்தில் அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

பணிவை மேற்கொள்ள வேண்டும். பணிவைக் கற்றுக் கொள்வது கடினமல்ல. அதைக் கற்றுக் கொள்வதில் என்ன இருக்கிறது? மனிதன் சுயமே பலவீனமானவன் ஆவான். அவன் பணிவிற்காகவே படைக்கப்பட்டுள்ளான்.

مَا خَلَقْتُ الْجِنَّ وَالْاِنْسَ اِلَّا لِيَعْبُدُوْنِ

மேலும் நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவற்காகவே படைத்துள்ளேன்.

ஆணவம் போன்றவை அனைத்தும் செயற்கையான விஷயங்கள் ஆகும். மனிதன் இந்த செயற்கைத்தனத்தைக் களைந்துவிட்டால், பின்னர் அவனது இயல்பில் பணிவு மட்டுமே தென்படும்.

(மல்ஃபூஸாத், தொகுதி 5, பக்கம் 38, பதிப்பு 2022)

எனவே, இதுவே அல்லாஹ்விடம் நெருக்கத்தையும் பெறுவதற்கான வழிமுறையாகும்.

பணிவை மேற்கொள்ளும்படி அறிவுறுத்தியவாறு மற்றோர் இடத்தில் அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

'எவர்கள் தங்களை அனைவரையும் விட மிக எளியவர்களாகவும், சிறியவர்களாகவும் கருதுகின்றார்களோ மேலும் வெட்கத்துடன் உரையாடுகின்றார்களோ மேலும், ஏழைகளுக்கும், எளியவர்களுக்கும் மதிப்பளிக்கின்றார்களோ பணிவு கொண்டவர்களிடம் கண்ணியமாக நடந்து கொள்கின்றார்களோ மேலும்

எவர்கள் ஒருபோதும் தீமை மற்றும் ஆணவத்தின் காரணமாக எள்ளி நகையாடுவதில்லையோ மேலும், கருணையாளனான தமது இறைவனை எப்போதும் நினைவுகூர்கின்றார்களோ, மேலும் பூமியில் பணிவுடன் நடக்கின்றார்களோ அத்தகைய மக்கள் அருளுக்குரியவர்கள் ஆவர். இத்தகையவர்களுக்காகவே இரட்சிப்பு தயார் செய்யப்பட்டுள்ளது என்று நான் மீண்டும், மீண்டும் கூறுகிறேன்.

எந்த நபர் தீங்கு, ஆணவம், சுயநலம், தற்பெருமை, உலக மோகம், பேராசை மற்றும் ஒழுக்கக்கேடு எனும் நரகத்திலிருந்து வெளியேறுவதில்லையோ அவர் மறுவுலகிலும் ஒருபோதும் வெளியேற மாட்டார்.

அதாவது, இந்த உலகில் செய்யப்படும் நற்செயல்களே மறுவுலகிலும் பயன்படும்.'

அன்னார் (அலை) கூறினார்கள்:

'நான் என்ன செய்வேன்! **மேலும், இந்தக் கூட்டத்தின்** இதயங்களில் தாக்கத்தை ஏற்படுத்தும் அத்தகைய வார்த்தைகளை எங்கிருந்து நான் கொண்டு வருவேன்! அதாவது என்னை ஏற்றுக் கொண்டவர்களின் மீது (தாக்கத்தை ஏற்படுத்தும் வார்த்தைகளை எங்கிருந்து கொண்டு வருவேன்)

இறைவா! மேலும், இந்த இதயங்களில் உனது ஒளியை உருவாக்கி, தனது குணப்படுத்தும் தன்மையால் அவர்களின் நச்சுத்தன்மையை அகற்றுகின்ற அந்த சொற்களை எனக்கு அருளுவாயாக! மேலும், அத்தகைய உரைகளை இல்ஹாமாக இறக்குவாயாக!

மேலும், உண்மையிலேயே பொய்களைக் கைவிட்டு விட்டு, எல்லா தீமையிலிருந்தும் எங்களைக் காத்துக் கொள்வோம்; மேலும், அனைத்து தீங்குகளுக்கும் ஆணிவேராக இருக்கின்ற ஆணவத்திலிருந்து முற்றிலும் விலகி சென்று விடுவோம்; மேலும் எங்கள் இறைவனுக்கு அஞ்சிக் கொண்டிருப்போம் என்று தமது இறைவனிடம் ஒரு தூய உடன்படிக்கையை செய்து கொண்ட அப்படிப்பட்ட மக்களை எனது ஜமாஅத்தில் பெருமளவில் காணும் அந்த நாளும் வர வேண்டும் என்று எனது உயிர் இந்த ஏக்கத்தினால் தவித்துக் கொண்டிருக்கிறது. (ஷஹாதத்துல் குர்ஆன், ரூஹானி கஸாயின், தொகுதி 6, பக்கம் 398)

சில மனிதர்களுக்கு, ஜல்ஸாவின் நாட்களிலோ அல்லது ஏதேனும் நிகழ்ச்சிகள் நடக்கும் போதோ குறிப்பாக மேடையில் நாற்காலிகளில் அமர வேண்டும் என்ற ஆசை இருக்கின்றது. பொதுவாக ஜல்ஸாக்கள் போன்றவற்றில் சிலமுறை கீரீன் ஏரியா அல்லது குறிப்பாக முன்னால் அமர்வதற்கு அருகில் அமர்ந்து காலத்தின் கலீஃபாவின் வார்த்தைகளை கேட்பதற்கு சில குறிப்பிட்ட பகுதிகளில் அமர்வதற்கு ஆசைபடுகின்றனர். அப்படியென்றால் விஷயம் சரிதான். ஆனால் சில நேரங்களில் ஈகோவும் கலந்து விடுகிறது. இது இருக்கக் கூடாது. ஏனெனில், இதனால் ஏற்பாட்டாளர்களுக்கு சிக்கல்கள் உருவாகி விடுகின்றன.

எவ்வாறாயினும், இத்தகைய ஆசைகளைக் கொண்டிருப்பவர்களுக்கு அறிவுரை வழங்கியவாறு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

மனிதன் எங்குச் சென்றாலும், எல்லாவற்றையும் விட தாழ்வான இடத்தை தனக்காக தேர்ந்தெடுக்க வேண்டும். அவன் வேறோர் இடத்திற்கு தகுதியானவனாக இருந்தால், பின்னர் விருந்து உபசரிப்பாளரே அவனை அழைத்து இடம் கொடுத்து விடுவார்; மேலும் அவனுக்குரிய கண்ணியம் அளிப்பார்.

(மல்ஃபூஸாத், தொகுதி 5, பக்கம் 93, பதிப்பு 2022)

உங்களை மேலே அமர வைக்க வேண்டும் என்றால் அமர வைப்பார்கள். ஒரு நிர்வாகம் உள்ளது, அது உங்களிடம் விண்ணப்பம் கொடுங்கள்; நாங்கள் பரிசீலிக்கின்றோம் என்று கூறுகின்றது. ஒருவேளை நிர்வாகம் உங்களின் கோரிக்கையை பரிசீலிக்கவில்லை என்றாலோ அல்லது சில நிர்பந்தத்தின் காரணமாக மறுத்துவிட்டாலோ பின்னர் எவ்வித ஆட்சேபனையும் இன்றி, மனதில் எவ்வித முறையீடும் இன்றி அதனை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

எனவே, இறைநேசத்தைப் பெறுவதற்கும் பணிவு இன்றியமையாததாகும்.

இது குறித்து அன்னார் (அலை) கூறுகிறார்கள்:

ஒரு மனிதனிடம் இரண்டு குணங்கள் உருவாகாத வரை, அவனால் இறைவனின் அன்பையும் அவனது திருப்தியையும் பெற முடியாது. முதலாவதாக, தற்பெருமையைத் தகர்க்க வேண்டும். அதாவது, நிமிர்ந்து நிற்கும் மலையானது தரைமட்டமாகிவிடுவதைப் போன்று, மனிதன் ஆணவமான மற்றும் தற்பெருமை மிக்க அனைத்து எண்ணங்களையும் அகற்ற வேண்டும்; மேலும், பணிவையும் அடக்கத்தையும் மேற்கொள்ள வேண்டும்.

இரண்டாவது என்னவென்றால், முந்தைய தீய தொடர்புகள் அனைத்தும் உடைந்து போக வேண்டும்; திருக்குர்ஆனில் .

مُتَصَدِّعًا

(மண்ணோடு மண்ணாவது) என்ற வார்த்தை வந்துள்ளது. அதாவது துண்டு துண்டாகிவிடுகிறது. செங்கற்கள் ஒன்றிலிருந்து ஒன்று பிரிந்து விடுவது போல. அவ்வாறே, அசுத்தம் மற்றும் இறைவனின் அதிருப்திக்குக் காரணமான அனைத்து பழைய தொடர்புகள் அனைத்தும் துண்டிக்கப்பட வேண்டும்.

இதன் பொருள், உங்களுக்குள் இருக்கும் தவறான தொடர்புகளை நீங்கள் உடைக்க வேண்டும் என்பதாகும். எந்த பழைய தொடர்புகளால் தீமைகள் உருவாகிக் கொண்டிருந்தனவோ அவை துண்டிக்கப்பட வேண்டும். அனைத்து உறவுகளும் முறிந்து போக வேண்டும் என்பது இதன் பொருளல்ல. அப்போதுதான் பின்னர் நன்மையின் பக்கம் ஆர்வம் உருவாகும். மேலும், இனி அவனது சந்திப்புகள், நட்புகள், அன்புகள் மற்றும் பகைமைகள் என அனைத்தும் அல்லாஹ்விற்காக மட்டுமே இருக்கும். (மல்ஃபூஸாத், பாகம் 2, பக்கம் 171, பதிப்பு 2022)

மற்றோர் இடத்தில் அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

பாவத்திலிருந்து தப்பிப்பதற்கான அல்லாஹ்வின் வசனம் இதுவாகும்:

إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِينُ

பொருள்: உன்னையே நாங்கள் வணங்குகிறோம்; உன்னிடமே நாங்கள் உதவியும் தேடுகிறோம்.

(தங்களது) ஏதாவது ஒரு பணிவு ஒப்புக் கொள்ளப்பட்டு விட வேண்டும் என எந்த நபர்கள் தமது இறைவனின் முன்னால் பணிவோடு துஆ செய்து கொண்டிருக்கின்றார்களோ, அத்தகைய மக்களுக்கு அல்லாஹ்வே அவர்களுக்கு உதவியாளனாக ஆகிவிடுகின்றான்.'

இது தொடர்பாக அன்னார் (அலை) ஒரு கதையைக் எடுத்துரைக்கின்றார்கள்:

' ஒரு நபர் அவர் தொழுகையாளியாக இருந்தார்; அவர் அதிகம் துஆ செய்து வந்தார். அவர் மிகவும் துஆ செய்யக் கூடிய நபராக இருந்தார். ஒருமுறை, அல்லாஹ்வே என்னை பாவங்களிலிருந்து விடுவிப்பாயாக!' என்று அவர் துஆ செய்தார்.

'அனைவரையும் விட மிகச் சிறந்த பணிவு எவ்வாறு பிறக்கும்? அதற்கான வழிமுறை என்ன?' என்று மிக அதிகமாக துஆ செய்த பிறகு அவர் சிந்தித்தார். பிறகு சிந்தித்துவிட்டு அவர் கூறினார்: 'ஒரு நாயை விடவும் தாழ்ந்தவன் எவரும் இல்லை' என்பது அவருக்கு தெரிய வந்தது. உடனே அதன் குரலில் சத்தமிட்டு அழத் தொடங்கி விட்டார். பள்ளிவாசலுக்குள் நாய் நுழைந்து விட்டது என்று வேறு ஒரு நபர் கருதினார். அந்த நாய் தனது பாத்திரத்தை அசுத்தப்படுத்தி விடக் கூடாதே! என்ற எண்ணத்தில் சென்று பார்த்தார். ஆனால் அவர் சென்று பார்த்தபோது, அவர் அந்த தொழுகையாளியாக இருந்தார். கடைசியில், இங்கு நாய் ஊளையிட்டுக் கொண்டிருந்தது ; எனக்கு சத்தம் வந்தது. அது யார்? என்று அவர் கேட்டார். அதற்கு நானே நாய் ஆவேன்; என்று அவர் கூறினார். அடுத்து, நீர் ஏன் அப்படி அழுது கொண்டிருந்தீர்? என்று அவர் கேட்டார். அதற்கு, அவர் கூறினார்:

இறைவனுக்குப் பணிவு மிகவும் பிடிக்கும்; எனவே இவ்வாறு எனது பணிவு ஒப்புக் கொள்ளப்படும் என்று 'நான் எண்ணினேன்.' (மல்ஃபூஸாத், பாகம் 5, பக்கம் 210, பதிப்பு 2022-ம் ஆண்டு)

ஆக, இது அந்த நபரின் சிந்தனையாக இருந்தது. அவர் அதன்படி செயல்பட்டார். தான் எப்படியாவது இறைவனின் நெருக்கத்தை பெற்று விட வேண்டும் என்பதற்காக கீழான பொருளாக ஆகிவிட வேண்டும் என்பது நோக்கமாக இருந்தது.

இது குறித்து மற்றோர் இடத்தில் அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

'மனிதன் ஒரு பலவீனமான படைப்பு ஆவான்; அவன் தான் செய்யும் தீய செயல்களின் விளைவாக தன்னை மிகப் பெரியவனாக எண்ணிக் கொள்கின்றான்.

இந்தத் தீய செயல்களாலேயே அகந்தை உருவாகிவிடுகிறது. ஆணவமும், அகந்தையும் அவனிடம் வந்து விடுகிறது. ஒரு மனிதன் அல்லாஹ்வின் பாதையில் தன்னை எல்லோரையும் விட வறியவனாகக் கருதாத வரை, அவனால் தப்பிக்க முடியாது.'

(மல்ஃபூஸாத், பாகம் 5, பக்கம் 138, பதிப்பு 2022)

தமது பைஅத்தின் கீழ் வருகின்றவர்களுக்குப் பணிவின் உயர்தரத்தை பெறுவதற்கு அறிவுரை வழங்கியவாறு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

' இந்த பைஅத் இருக்கின்றதே அதன் பொருள், உண்மையில் தன்னை விற்றுவிடுவதாகும். அதன் அருட்களும், தாக்கங்களும், இந்த நிபந்தனையுடனே தொடர்பு கொண்டுள்ளது. அதாவது, ஒரு விதை நிலத்தில் விதைக்கப்படும் போது ஏற்படும் நிபந்தனைகளைப் பொறுத்ததே ஆகும். நிலத்தில் விதைக்கப்படும்போது அதன் ஆரம்ப நிலை இவ்வாறே இருக்கின்றது. அதாவது, அது விவசாயியின் கையால் விதைக்கப்படுகிறது, பின்னர் அதற்கு என்ன நேரிடும்? என்று யாருக்கும் தெரியாது. அது மண்ணில் விதைக்கப்படுகிறது. மேலும், அது மண்ணுக்குள் ஆழமாகச் சென்று மறைந்துவிடுகிறது. இனி அதன் நிலை என்னவாகும்? என்று எதுவும் தெரிவதில்லை. ஆனால், அது ஒரு நல்ல விதையாக இருந்து, அதில் வளரும் ஆற்றல் இருந்தால், பின்னர் அல்லாஹ்வின் அருளாலும், விவசாயியின் சரியான உழைப்பாலும் அது மேலே வந்து விடுகிறது. முளைத்து விடுகிறது; மேலும் அதன் தளிர்கள் வெளியே வந்து விடுகின்றன. மேலும், ஒரு விதை ஆயிரம் தானியங்களாக மாறுகிறது. இதேபோன்று பைஅத் செய்யும் ஒரு நபருக்கு முதலில் பணிவையும், அடக்கத்தையும் மேற்கொள்ள நேரிடுகின்றது; மேலும் தனது சுயம் மற்றும் மனயிச்சையிலிருந்து விலகி நிற்க நேரிடுகின்றது. அப்போதுதான் அவர் வளர்ச்சியடையவதற்கு தகுதியானவராக திகழ்கின்றார். ஆனால், எவர் பைஅத் செய்த பிறகும் மனயிச்சை கொண்டவராக இருப்பாரோ, அவரால் ஒருபோதும் பயனடைய முடியாது.'

(மல்ஃபூஸாத், பாகம் 5, பக்கம் 306-307, பதிப்பு 2022-ம் ஆண்டு)

**பணிவு இன்றி பைஅத் செய்வதனாலும் எந்தப் பயனும் இல்லை.**

அன்னார் (அலை) கூறினார்கள்:

' நீங்கள் எந்த அளவுக்கு மென்மையை மேற்கொள்வீர்களோ, மேலும் எந்த அளவுக்கு நீங்கள் பணிவையும், தாழ்மைகுணத்தையும் மேற்கொள்வீர்களோ, அந்த அளவுக்கு அல்லாஹ் உங்கள் மீது மகிழ்ச்சி கொள்வான்.' (மல்ஃபூஸாத், பாகம் 9, பக்கம் 66, பதிப்பு 2022-ம் ஆண்டு)

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

எந்த நபர் பணிவோடு அல்லாஹ்வின் திருப்தியைத் வேண்டுகிறாரோ அவரிடம் அல்லாஹ் திருப்தி கொள்கிறான்.' (மல்ஃபூஸாத், பாகம் 9, பக்கம் 211, பதிப்பு 2022)

பிறகு, பணிவு தொடர்பாக அல்லது பணிவை மேற்கொள்வதால் மனிதனுக்கு என்ன கிடைக்கிறது? அல்லது ஆணவம் மனிதனை எங்கு கொண்டு சேர்க்கிறது?

இந்த நுட்பமான கருத்தை எடுத்துரைத்தவாறு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

'முதன்முதலில் ஆதமும் பாவம் செய்தார்; ஷைத்தானும் பாவம் செய்தான். ஆதமிடம் ஆணவம் இருக்கவில்லை. எனவே அவர் இறைவனின் சன்னிதானத்தில் தம் பாவத்தை ஒப்புக் கொண்டார்; அவரது பாவமும் மன்னிக்கப்பட்டது. இதிலிருந்து மனிதனுக்கு தவ்பா செய்வதால் மன்னிக்கப்படுவதற்கான நம்பிக்கை உள்ளது. அல்லாஹ் ஆதமின் பாவத்தை மன்னித்து விட்டான்; எனவே மனிதனும் பணிவை வெளிப்படுத்தினால், தவ்பா செய்தால் பின்னர் அல்லாஹ் மன்னித்து விடுவான் என்ற நம்பிக்கை அவனுக்கு இருக்க வேண்டும்.

ஆனால் ஷைத்தானோ ஆணவம் கொண்டான்; மேலும் அவன் சபிக்கப்பட்டவனாகி விட்டான். அவன் மீது அல்லாஹ்வின் சாபம் விழுந்தது. அந்த விஷயம் மனிதனிடம் இருக்கவில்லை. ஷைத்தானிடம் இருக்கின்ற விஷயங்கள் மனிதனிடம் இல்லை.

மனிதனால் பணிவுள்ளவனாக திகழ முடியும். தற்பெருமை கொண்ட நபர், தான் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், இந்த விஷயத்தின் வாதத்திற்காக அதாவது தாழ்மை குணத்திற்கான வாதம் செய்வதற்கு தயாராகி விடுகின்றான்.

அன்னார் (அலை) கூறினார்கள்:

எந்த விஷயம் மனிதனிடம் இருப்பதில்லையோ அந்த விஷயம் தொடர்பான வாதத்திற்காக ஆணவம் கொண்ட நபர் தான் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் தயாராகி விடுகின்றார்.

இது மனிதனின் இயல்பில் இல்லாத ஒன்றாகும். பிறகு, அவன் எந்தக் காரணமும் இன்றி ஷைத்தானைப் போன்று பெருமை பேசத் தொடங்குகிறான்.

அன்னார் (அலை) மேலும் கூறினார்கள்:

'நபிமார்களிடம் ஏராளமான திறமைகள் இருக்கின்றன. அவற்றில் ஒன்று அகந்தையை களைதல். அதாவது, அகந்தையை அழித்துவிடுவது. அவர்களிடம் அகந்தை இருப்பதில்லை. அவர்கள் தங்களுடைய நஃப்ஸ் மீது ஒருவகையான மரணத்தை ஏற்படுத்திக் கொள்கின்றனர். பெருமை என்பது இறைவனுக்கு மட்டுமே உரியதாகும். பெருமை கொள்ளாமல், பணிவுடன் செயல்படுபவர்கள் ஒருபோதும் வீணாகுவதில்லை. (மல்ஃபூஸாத், தொகுதி 9, பக்கம் 173, 2022-ம் ஆண்டு பதிப்பு)

மீண்டும் பணிவை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தியவாறு ஒரு சந்தர்ப்பத்தில் அன்னார் (அலை) கூறினார்கள்:

'நம்முடைய ஜமாஅத்தில் இன்னும் ஏராளமான நபர்கள் எத்தகைய மக்களாக இருக்கின்றனர் என்றால், தங்களுக்கு எதிராக ஒரு சிறிய விஷயத்தை கேட்டாலும் கூட உடனே அவர்களுக்குக் கோபம் வந்துவிடுகிறது. ஆனால், அத்தகைய அனைத்து கோபங்களையும் அடக்குவது மிகவும் அவசியமாகும். அப்போதுதான் மனிதனின் இயல்பில் சகிப்புத்தன்மையும், மென்மையும் பிறக்கும். ஒரு சிறிய விஷயத்தில் விவாதம் தொடங்கிவிடும் போது, ஒருவர் மற்றவரை வீழ்த்த வேண்டும் என்ற கவலையில் இருப்பது தெரிய வருகிறது. 'நான் எப்படியாவது வெற்றி பெற வேண்டும்' என்று ஒருவர் மற்றவரை வீழ்த்தும் கவலையிலேயே இருக்கின்றனர். அத்தகைய சந்தர்ப்பங்களில் கோபத்திலிருந்து தவிர்ந்திருக்க வேண்டும். மேலும், குழப்பங்களைத் களைவதற்காக அற்ப விஷயங்களில் வேண்டுமென்றே சுயமே இழிவை சகித்துக் கொள்ள வேண்டும். சண்டையில் தனது மற்ற சகோதரரைத் இழிவுபடுத்த வேண்டும் என்று அந்த விவகாரத்தில் ஒருபோதும் முயற்சி செய்யக் கூடாது.' (மல்ஃபூஸாத், தொகுதி 6, பக்கம் 65 அடிக்குறிப்பு, 2022-ம் ஆண்டு பதிப்பு)

நமது அன்றாட வாழ்வில் நாம் ஆராய்ந்து பார்த்தால், பல மனிதர்கள் போலி கௌரவம் கொண்டவர்களாக இருப்பதும், அவர்களிடம் அகந்தை இருப்பதும் தெரிய வருகிறது. அதனால் சண்டைகள் அதிகரிப்பதையும் காணலாம். ஆனால், இறைவனின் நெருக்கத்தைப் பெற வேண்டுமானால், இதிலிருந்து இரட்சிப்பு கிடைத்து விடுகின்றது.

இன்னும் கூறப்போனால், சிலரோ தவறான வடிவில் தீங்கு விளைவிக்க முயற்சிக்கின்றனர். சில நேரங்களில், எங்களுக்கு 'இன்ன இடத்தில் சண்டை நிகழ்ந்திருந்தது; இன்ன இடத்தில் அந்த நபர் என்னை ஏசிபேசினார்; எனவே தற்போது நான் அவரை ஏதாவது ஒரு தவறான வழிமுறையில், ஏதாவது ஒரு வழக்கில் அல்லது ஏதேனும் ஒரு தண்டனையில் சிக்க வைக்க முயற்சிப்பேன்' என்று புகார்கள் செய்து விடுகின்றனர்.

ஒரு சந்தர்ப்பத்தில், பணிவை மேற்கொண்டவர்களின் மரணத்திற்குப் பிறகு அவர்களின் நிலையை விளக்கும் வகையில் ஒரு உதாரணத்தைக் வழங்கியவாறு அன்னார் (அலை) கூறினார்கள்:

'மரணம் என்பது அனைவருக்கும் விதிக்கப்பட்டுள்ளதாகும். ஒருநாள் இந்த உலகை விட்டுச் செல்ல வேண்டும். இறுதியில், ஒருநாள் இல்லாவிட்டால் ஒருநாள் எல்லாரும் இதே நிலையைத்தான் அடையப் போகிறார்கள். ஆனால், எந்த நபர்கள் தாழ்மையுடன் தீங்கற்றவராக திகழ்ந்து, ஏழ்மை மற்றும் பணிவுடன் மரணிக்கின்றார்களோ அவர்களை வரவேற்பதற்காக, ஒருவகையில் சொர்க்கம் அவர்களுக்கு முன்னால் வந்து விடுகிறது. ஹஸ்ரத் ஈஸா (அலை) லாசரஸ் பற்றி எடுத்துரைத்தது உள்ளது. (மல்ஃபூஸாத், தொகுதி 8, பக்கம் 289-290, 2022-ம் ஆண்டு பதிப்பு)

இங்கு கூறப்படுகின்ற 'இந்த லாசரஸ் யார்? இதைக் குறித்து பைபிளில் லூக்கா அதிகாரம் 16-ல் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

'ஒரு செல்வந்தர் இருந்தார், அவர் விலையுயர்ந்த ஆடைகளையும், மென்மையான ஆடைகளையும் அணிந்து வந்தார், ஒவ்வொரு நாளும் மகிழ்ச்சியாகவும், ஆடம்பரமாகவும் வாழ்ந்து வந்தார்.' மேலும், பைபிளில் எழுதப்பட்டுள்ளது: 'லாசரஸ் என்ற பெயருடைய ஓர் ஏழை கட்டிகள் மற்றும் புண்கள் நிறைந்தவராக இருந்தார். அவர் தோல் நோயால் பாதிக்கப்பட்டிருந்தார். அவர் அந்தச் செல்வந்தரின் வீட்டு வாசலில் கிடத்தப்பட்டிருந்தார். செல்வந்தரின் மேஜையிலிருந்து விழும் துண்டுகளால் தன் பசியைப் போக்க அவர் ஆசைப்பட்டார். அதாவது, அங்கு என்ன உணவு மிஞ்சுமோ அவற்றை அவர் வெளியில் எறிந்தால் நானும் அதனை உண்டு கொள்வேன் என்று அவர் நினைத்தார். இன்னும் கூறப்போனால், நாய்களும் கூட வந்து அவருடைய புண்களை நக்கின.' அந்த ஏழை மிகவும் பலவீனமாக இருந்ததால், அவரால் அந்த நாய்களைக் கூட விரட்ட முடியவில்லை. அவையும் வந்து அவருடைய புண்களை நக்கின. 'மேலும் இவ்வாறு நடந்தது.' இறுதியில் பைபிளில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

அந்த ஏழை இறந்துவிட்டார். வானவர்கள் அவரைக் கொண்டு போய் ஆபிரகாமின் மடியில் சேர்த்தார்கள். அந்தச் செல்வந்தரும் இறந்து அடக்கம் செய்யப்பட்டார். அவர் பாதாளத்தில் வேதனைக்குள்ளாகி தன் கண்களை ஏறெடுத்து பார்த்தார்; தூரத்திலே ஆபிரகாமையும் அவருடைய மடியில் லாசரஸையும் கண்டார். அவர் சத்தமிட்டு, தகப்பனாகிய ஆபிரகாமே, எனக்கு இரங்கும்; லாசரஸ் தன் விரலின் நுனியைத் தண்ணீரில் தோய்த்து, என் நாவைக் குளிரப்பண்ணும்படி அவரை அனுப்பும்; இந்த அக்னி ஜுவாலையில் நான் வேதனைப்படுகின்; எனக்கும் இந்த தண்டனையிலிருந்து இரட்சிப்பு வழங்கு; ஏனெனில் நான் இந்த நெருப்பில் துடித்துக் கொண்டிருக்கின்றேன் என்றான். அதற்கு ஆபிரகாம், மகனே! நீ உயிரோடிருந்த காலத்தில் உன் நன்மைகளைப் பெற்று கொண்டு விட்டாய், லாசரஸ் தீமைகளைப் பெற்றார்; அவருக்கோ ஒன்றும் கிடைக்கவில்லை. அதை நினைத்துக் கொள்! இப்பொழுது அவன் இங்கேயோ தேற்றப்படுகிறான், நீயோ வேதனைப்படுகிறாய் என்றார்.'' (லூக்கா அதிகாரம் 16, வசனம் 19 முதல் 25)

மனிதன் ஓர் உயர்ந்த வம்சத்தைச் சேர்ந்த மற்றும் கண்ணியம் மிகுந்த மனிதருடன் நடந்து கொள்வதைப் போன்று அல்லது நடந்து கொள்ள நேரிடுவதைப் போன்று ஓர் ஏழை, எளிய மூதாட்டியுடனும் நல்ல முறையில் நடந்து கொள்ளாதவரை, மேலும் தற்பெருமை, அகந்தை மற்றும் கர்வத்தின் எல்லா வடிவத்திலிருந்தும் தன்னை பாதுகாத்துக் கொள்ளாத வரை, அவன் ஒருபோதும் இறைவனின் ராஜ்யத்தில் நுழைய முடியாது.' (மல்ஃபூஸாத், தொகுதி 5, பக்கம் 138, 2022 பதிப்பு)

பிறகு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

'ஆணவம் கொண்டவன் இறைவனின் சிம்மாசனத்தில் அமர விரும்புகிறான். எனவே, இந்த மோசமான குணத்திலிருந்து எப்போதும் பாதுகாப்புத் தேடுங்கள். இறைவனின் வாக்குறுதிகள் அனைத்தும் உங்களுடன் இருக்கின்றன. எனினும், நீங்கள் எப்போதும் பணிவை மேற்கொள்ளுங்கள். வாக்குறுதிகள் உங்களுடன் இருந்தபோதிலும் நீங்கள் எப்போதும் பணிவை வெளிப்படுத்துங்கள். சில வாக்குறுதிகள் இருக்கின்றன என்றபோதிலும் தாழ்மை குணத்தை வெளிப்படுத்துங்கள். ஏனெனில் பணிவு காட்டுபவரே இறைவனுக்குப் பிரியமானவராக இருக்கின்றார். (மல்ஃபூஸாத், தொகுதி 10, பக்கம் 217, 2022 பதிப்பு)

பணிவு மற்றும் அடக்கம் தொடர்பான ஒரு சம்பவத்தை எடுத்துரைத்தவாறு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

'பணிவும், அடக்கமும் ஒரு சிறந்த விஷயமாகும். எந்த நபர் தேவையுடையவராக இருந்து கொண்டும் ஆணவம் கொள்கின்றாரோ அவர் ஒருபோதும் நோக்கத்தை அடைய முடியாது. எனவே, அவர் பணிவை மேற்கொள்ள வேண்டும். கூறுகின்றார்கள்: ஜாலினூஸ் (காலன்) என்ற ஒரு தத்துவஞானி ஓர் அரசனிடம் பணியாளராக இருந்தார். ஒரு கதையின்படி, அந்த ராஜாவிற்கு மிகவும் மோசமான மற்றும் கெட்டுப்போன உணவுகளைச் சாப்பிடும் பழக்கம் இருந்தது. ஜாலினூஸ், 'ராஜாவுக்கு குஷ்டரோகம் (தொழுநோய்) வந்துவிடும்' என்று உறுதியாக நம்பினார். 'அவர் தவறான உணவுகளைச் சாப்பிடுகிறார்.

இன்றும் கூட ஜங்க் ஃபுட்

(junk food) சாப்பிடக் கூடாது என்று ஒரு பெரிய சர்ச்சை நிலவுகிறது. ஆக, அந்த காலத்திலும் இது போன்ற உணவுகள் இருந்தன. எப்படியிருப்பினும், இந்த உணவுகள் ராஜாவை நோய்வாய்ப்படுத்திவிடும் என்றும், அவருக்குத் தொழுநோய் கூட வந்துவிடும் என்றும் ஜாலினூஸ் உறுதியாக நம்பினார்.'

எனவே அவர் எப்போதுமே அரசரைத் தடுத்து வந்தார். ஆனால் அரசர் அதைக் கேட்கவில்லை. இதனால் விரக்தியடைந்த ஜாலினூஸ் அங்கிருந்து தப்பி, தன் நாட்டுக்குச் சென்றுவிட்டார். அவர் அரசரின் அந்த அரசவையை விட்டுவிட்டு தன் சொந்த நாட்டுக்கே திரும்பிவிட்டார். சில காலத்திற்குப் பிறகு அரசரின் உடலில் தொழுநோய்க்கான அறிகுறிகள் தோன்றின. இறுதியில், ஜாலினூஸ் கூறியது உண்மையாகிவிட்டது. அரசருக்குத் தொழுநோய் ஏற்பட்டுவிட்டது.

அப்போது அரசர் தன் தவறை உணர்ந்து, பணிவை மேற்கொண்டார். தன் மகனை அரியணையில் அமரச் செய்துவிட்டு, ஏழைத் துறவியின் ஆடையை அணிந்து கொண்டு அங்கிருந்து புறப்பட்டு ஜாலினூஸை வந்தடைந்தார். ஜாலினூஸ் அவரை அடையாளம் கண்டு கொண்டார். மேலும் அரசரின் பணிவு அவருக்கு மிகவும் பிடித்திருந்தது. அதாவது, இந்த பணிவு அவருக்குப் பிடித்திருந்தது. மேலும் (அரசர்) அதனை (realise செய்து) உணர்ந்து கொண்டார்; மேலும் என்னிடம் வந்து விட்டார். அரசரின் இந்தப் பணிவு அவருக்கு பிடித்து விட்டது. மேலும், அவர் முழு மூச்சுடன் மீண்டும் அவருக்குச் சிகிச்சை அளித்தார்.

அன்னார் (அலை) கூறினார்கள்:

'மேலும் முழு ஆற்றலுடன் அவருக்குச் சிகிச்சை அளிப்பதில் அவர் ஈடுபட்டார். அல்லாஹ் அவருக்குக் குணமளித்தான்.
(மல்ஃபூஸாத், தொகுதி 9, பக்கம் 177-178, பதிப்பு 2022)

தமது ஒரு சபையில் தனது இல்ஹாமைப் பற்றிக் குறிப்பிட்டவாறு, அன்னார் (அலை) அறிவுரை செய்தார்கள். அதன் குறிப்பு அறிவிப்புகளில் இவ்வாறு இடம்பெற்றுள்ளது:

ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்கள் ஃபஜ்ர் தொழுகைக்கான நேரத்தில் சற்று முன்பே சென்று தொழுகைக்குச் சிறிதுநேரம் சபையைக் கூட்டுவார்கள். அதாவது ஃபஜ்ர் தொழுகைக்கும் முன்னரே வந்து விட்டார்கள். மேலும் சபையை நடத்தினார்கள்.

إِنِّي أُحَافِظُ كُلَّ مَنْ فِي الدَّارِ إِلَّا الَّذِينَ
عَلَوْا وَاسْتَكْبَرُوا

'மேலும் நிச்சயமாக நான் இந்த இல்லத்திற்குள் வசிப்பவர்களில் எவர்கள் ஆணவமும், அகந்தையும் கொள்வார்களோ அவர்களைத் தவிர (மற்றவர்களைப்) பாதுகாப்பேன்.

இது குறித்து அன்னார் (அலை) கூறினார்கள்: 'இதில் ஆணவம் மற்றும் அகந்தை என்பதன் பொருள், ஒருவன் தனது செல்வம் மற்றும் அந்தஸ்தில் தற்பெருமை கொள்வது என்பதன்று. மாறாக, பணிவோடும், தாழ்மையோடும் இறைவனின் முன்னிலையில் தன்னைச் சமர்ப்பிக்காமல், அவனது கட்டளைகளை மதிக்காமல் இருப்பது என்பதாகும். அத்தகைய நபர் ஏழையாக இருந்தாலும் சரியே! (மல்ஃபூஸாத், தொகுதி 3, பக்கம் 443-444, பதிப்பு 2022)

பணிவுடன் நடக்கக் கூடியவரே வீட்டினுள் நுழைபவராக இருப்பார்.

அடுத்து, அன்னார் (அலை) மற்றொரு சந்தர்ப்பத்தில் கூறினார்கள்:

மனிதனுக்கு வெற்றி கிடைத்து விடும்போதும், பலவீனமும், துன்பமும் இல்லாத நிலை இருக்கும்போதும், எவர் அந்த நேரத்தில் பணிவைக் கடைப்பிடித்து, இறைவனை நினைவுகூர்கிறாரோ, அவரே முழுமையானவர் ஆவார்.' (மல்ஃபூஸாத், தொகுதி 1, பக்கம் 417, பதிப்பு 2022)

மேலும், இந்த விஷயங்களை அன்னார் (அலை) ஜமாஅத்திற்கு அறிவுரையாக மட்டும் வழங்கவில்லை, மாறாகத் தமது சொந்தச் செயல்களின் மூலமாகவும் எடுத்துரைத்துள்ளார்கள்; நிரூபணம் செய்துள்ளார்கள். துவக்கத்தில் நான் அதற்கான சில உதாரணத்தையும் வழங்கினேன். அதாவது அல்லாஹ்விற்கும் அன்னாரது செயல் பிடித்தமானதாக ஆகிவிட்டது. எப்படியிருந்தாலும், சில அறிவிப்புகள் அன்னாரது சொந்த செயல்களைப் பற்றி வருகின்றன.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

எனக்கு மிர்ஸா சுல்தான் அஹ்மத் ஸாஹிப் அவர்கள் கூறினார்கள். 'எனது தந்தைவழிப் பாட்டனார் ஸாஹிப் (மிர்ஸா குலாம் முர்தஸா ஸாஹிப்) அவர்கள் எங்கள் பெரியப்பா மிர்ஸா குலாம் காதிர் ஸாஹிப் அவர்களுக்கு அமர நாற்காலி கொடுத்து வந்தார்கள். சபையில் அமர்ந்திருப்பார்கள்.

ஆக, ஹஸ்ரத் மிர்ஸா சுல்தான் அஹ்மத் அவர்களின் பாட்டனார் அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் மூத்த சகோதரருக்கு நாற்காலி கிடைத்து வந்தது. அதாவது அன்னார் பாட்டனார் ஸாஹிப் அவர்களிடம் செல்லும்போது அவர்கள் நாற்காலியில் அமர வைத்து விடுவார்கள். ஆனால் தந்தையார் (மஸீஹ் மவ்வூத்) அவர்கள் செல்லும்போது, அங்கு சென்று கீழே தரைவரிசையில் அமர்ந்து வந்தார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் அந்தச் சபைக்குச் செல்லும்போதெல்லாம், பொதுமக்கள் எங்கே கீழே அமர்ந்திருப்பார்களோ, அங்கே செல்வார்கள். சில நேரங்களில் பாட்டனார் ஸாஹிப் அவர்கள் அன்னாரை மேலே (நாற்காலியில்) அமரச் சொன்னால், 'நான் இங்கே நன்றாகவே அமர்ந்திருக்கிறேன் என்று தந்தையார் அவர்கள் கூறுவார்கள்." ( அஸ் ஸீரத்துல் மஹ்தி, தொகுதி 1, வரலாறு எண் 192, பக்கம் 199-200)

தான் உயர்ந்த இடத்தில் அமர வேண்டும் என்ற ஆசை அன்னாருக்கு ஒருபோதும் ஏற்பட்டதில்லை. இன்னும் கூறப்போனால், பொது மக்களுடன் அமர்ந்து வந்தார்கள்.

'விருந்தளிப்பவர் சுயமே அமர வைத்து விடுவார் என்று அன்னார் முன்னர் அறிவுரை வழங்கியிருந்ததைப் போன்று, அன்னார் (அலை) சுயமே அதன்படி தம் வாழ்க்கையில் செய்தார்கள்.

இதேபோன்று, ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் மற்றோர் அறிவிப்பை செய்கின்றார்கள்:

என்னிடம் காஸி அமீர் ஹுஸைன் ஸாஹிப் அவர்கள் கூறினார்கள்,

அனைத்து நபிகளும் ஆடு மேய்த்துள்ளார்கள் என்று ஹதீஸ்களில் வருகிறதே; தாங்களும் எப்போதாவது ஆடு மேய்த்துள்ளீர்களா? என்று நான் ஒருமுறை ஹஸ்ரத் ஸாஹிப் அவர்களிடம் கேட்டேன். அதற்கு அன்னார் (அலை) கூறினார்கள்:

'ஆம்! நான் ஒருமுறை வயல்வெளிக்குச் சென்றிருந்தேன்; அங்கே ஒரு நபர் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தார்; அவர் என்னிடம், நான் ஒரு வேலைக்காகச் சென்று வருகிறேன்; அது வரை என் ஆடுகளைக் கவனித்துக் கொள்ளுங்கள் என்றார்; ஆனால் நடந்தது என்னவென்றால், அவர் மாலை வரை திரும்பி வரவில்லை; அவர் வரும் வரை நான் அவரது ஆடுகளை மேய்க்க வேண்டியதாயிற்று. (ஸீரத்துல் மஹ்தி, தொகுதி 1, வரலாறு எண் 108, பக்கம் 88)

அன்னார் (அலை) அந்தப் பகுதியின் தலைவரின் மகனாக இருந்தபோதிலும், நாள் முழுதும் அவரது ஆடுகளை மேய்த்தார்கள். ஆயினும் அன்னார் (அலை) அதை ஒரு அவமானமாகக் கருதவில்லை. மாலை வரை அந்த நபரின் வேலையாளாக வேலை செய்து, அவரது ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தார்கள்.

இதேபோல், அன்னாரது பணிவைக் குறிப்பிட்டவாறு, அல்ஃபஸ்ல் பத்திரிகை அலுவலர் ஹஸ்ரத் காஜா அப்துர் ரஹ்மான் ஸாஹிப் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் வாசலில் காவலாளியாக இருந்துள்ளேன். பாதுகாப்பிற்காகவும், வருவோர் போவோரின் செய்திகளை உள்ளே கொண்டு செல்வதற்கும் அல்லது ஏதேனும் அவசர வேலை இருந்தால் அதனை செய்வதற்கும் அன்னாரின் வீட்டிற்கு வெளியில் அமர்ந்து வந்தேன்.

எவ்வாறிருப்பினும் அவர்கள் கூறுகின்றார்கள்: நான் வெளியில் அன்னாரின் வாசலிலும், ஹுஸூர் (அவர்கள்) வீட்டின் உள்ளேயும் இருப்பார்கள்.

அவர்கள் கூறினார்கள்: நான் காவலாளியாக இருந்துள்ளேன்; ஹுஸூர் (அலை) அவர்களின் வீட்டின் உள்ளேயும் நீண்ட நேரம் இருந்துள்ளேன். நான் வீட்டிற்கு உள்ளேயும் சென்று வந்துள்ளேன். ஆக, நான் ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்களிடம், ஜீ (மதிப்பிற்குரிய வார்த்தை) என்ற வார்த்தையைத் தவிர வேறு எந்த வார்த்தையையும் ஒருபோதும் கேட்டதில்லை. ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) எப்போது என்னிடம் பேசினாலும் எப்போதும் 'ஜீ' என்றே பேசி வந்தார்கள். எப்போது உரையாடினாலும் ஜீ என்ற வார்த்தையை நிச்சயமாக பயன்படுத்தி வந்தார்கள். அகந்தையையோ, தற்பெருமையையோ அன்னாரிடம் நான் கண்டதில்லை.'

கூறுகின்றார்கள்: தற்பெருமை மற்றும் ஆணவத்தை அன்னாரிடம் நான் ஒருபோதும் கண்டதில்லை. எப்போதும் கனிவோடு பேசுவார்கள். முகத்தில் எப்போதும் புன்னகை இருக்கும். நெற்றியில் இறுக்கத்தையோ அல்லது கோபத்தையோ நான் பார்த்ததே இல்லை. 'நீ' என்ற மரியாதை குறைவான சொற்களை பயன்படுத்தி ஒருவரிடம் ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்கள் பேசியதை நான் ஒருபோதும் கேட்டதே இல்லை." (அறிவிப்பு: அஸ்ஹாப் அஹ்மத், தொகுதி 2, பக்கம் 294-295)

' நீ', ஏய் போன்ற மரியாதை குறைவான சொற்களை அன்னார் (அலை) ஒருபோதும் பயன்படுத்தியதில்லை. எப்போதும் மரியாதையுடன்தான் நடத்தி வந்தார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்:

டாக்டர் மீர் முஹம்மது இஸ்மாயில் ஸாஹிப் (ரலி) அவர்கள் என்னிடம் கூறினார்கள்:

'ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்கு எந்தவொரு வீட்டு வேலையை செய்வதிலும் எந்த தயக்கமும் இருந்ததில்லை. கட்டில்களைத் தாமே விரித்துக் கொள்வார்கள். தரையைச் சுத்தம் செய்வார்கள். அதாவது, துடைப்பம் (mop) போடுவது போன்றவற்றை அவர்களே செய்வார்கள். படுக்கையைச் சரி செய்வார்கள், பெருக்குவார்கள். சில நேரங்களில் திடீரென மழை பெய்யத் தொடங்கினால், சிறிய குழந்தைகள் தூங்கிக் கொண்டிருக்கும் கட்டில்களை ஹுஸூர் அவர்களே ஒரு பக்கமாகவும், மற்றொருவர் மறுபக்கமாகவும் பிடித்துக் கொண்டு தாழ்வாரத்திற்குள் கொண்டு வந்து வைப்பார்கள்.'

இன்று இருப்பது போன்று ஏசி மற்றும் மின்விசிறிகள் போன்றவை அக்காலத்தில் இருக்கவில்லை. எனவே, கோடைக் காலத்தில் மக்கள் முற்றத்தில் தூங்குவார்கள். இரவில் புயலோ அல்லது மழையோ வந்தால், கட்டில்களைத் தூக்கிக் கொண்டு தாழ்வாரம் அல்லது அறைக்குள் செல்ல வேண்டியிருக்கும். அத்தகைய சூழ்நிலைகளில், குழந்தைகளின் கட்டில்களைத்

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2026-2028 Vol. 11 THU 09 - 16 JULY 2026 Issue No. 28&29

**ACT. MANAGER**
_ATHAR AHMAD SHAMIM
Mobile : +91 9815639670
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)


தூக்குவதற்கு அன்னார் (அலை) உதவி செய்து வந்தார்கள். யாராவது ஒரு நபர், அதுபோன்ற சந்தர்ப்பங்களில் அல்லது காலை நேரத்தில் தூங்கிக் கொண்டிருக்கும் குழந்தைகளை எழுப்ப விரும்பினால், ஹுஸூர் (அலை) அவர்கள் அதைத் தடுத்து வந்தார்கள்; மேலும், 'இப்படி திடீரென எழுப்புவதாலும், சத்தமிடுவதாலும் குழந்தை பயந்துவிடும்; எனவே மெல்லிய குரலில் எழுப்புங்கள்' என்று கூறுவார்கள். (ஸீரத்துல் மஹ்தி, பாகம் 1, ரிவாயத் 559, பக்கம் 543)

அடுத்து, ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்களே ஓர் அறிவிப்பை செய்கின்றார்கள்:

மிர்ஸா சுல்தான் அஹ்மது ஸாஹிப் அவர்கள் என்னிடம் இதனை கூறினார்கள். அவரும் இந்த அறிவிப்பை மவ்லவி ரஹீம் பக்ஷ் ஸாஹிப் (ரலி) அவர்களிடம் இருந்து செவியுற்று இருந்தார்கள். அதாவது, அன்னாருடைய தந்தையார் (ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள்) வெளியே உள்ள மேல் மாடி அறையில் வசித்து வந்தார்கள். அவர்களுக்கு அங்கேயே உணவு கொண்டு செல்லப்பட்டது. வெளியில் வீட்டின் பகுதியாக இருந்த இடத்தில் எந்த வகையான (எளிய) உணவாக இருந்தாலும் உண்டு கொள்வார்கள்.'
(ஸீரத்துல் மஹ்தி, பாகம் 1, ரிவாயத் எண் 189, பக்கம் 199)

ஹஸ்ரத் மிர்ஸா சுல்தான் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களைப் பற்றிக் கூறினார்கள்: தந்தையார் அவர்கள் வெளியே உள்ள மேல் மாடியில் தங்கி வந்தார்கள். வெளியில் அன்னாருடைய ஓர் அறை இருந்தது. அதில் இரண்டாவது மாடியில் தங்கி வந்தார்கள். அன்னார் (அலை) அங்கேயே தங்கி வந்தார்கள். அன்னாருக்கு அங்கேயே உணவு கொண்டு செல்லப்பட்டது. அப்போது, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் நோன்பு நோற்றிருந்தார்கள். இவ்வாறும் அன்னார் அறிவிக்கின்றார்கள். அதாவது, அந்த நாட்களிலும் உணவுகள் கொண்டு செல்லப்பட்டு வந்தன; ஆனால் அவை ஏழைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு வந்தது.

எவ்வாறிருப்பினும் கூறுகின்றார்கள்: அங்கு என்ன உணவு கொண்டு செல்லப்பட்டதோ மேலும் எந்த வகையான உணவாக இருந்தாலும், அதை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் உண்டு வந்தார்கள். ஒருபோதும் எதுவும் (குறை) கூற மாட்டார்கள்.

ஜமாஅத் வரலாற்றில் ஒரு பெரும் பிரபலமான நிகழ்வு உள்ளது. இது அன்னாருடைய வாதத்திற்கு முந்தைய விஷயமாகும். மௌலவி முஹம்மது ஹுஸைன் பட்டால்வி ஸாஹிப், புத்தம் புதிய மௌலவியாகவும், ஆலிமாகவும் ஆகி டெல்லியிலிருந்து படாலாவுக்கு திரும்பி வந்தார். அப்போது, அந்தப் பகுதியில் அவர் பிரபல்யமடைந்திருந்தார். அக்காலத்தில் பல்வேறு மார்க்க விவகாரங்களில், ஹனஃபி, மாலிகி போன்ற மார்க்கச் சட்டவியல் இமாம்களைப் பின்பற்றுபவர்களை முகல்லித் என்றும், அஹ்லே ஹதீஸ் போன்ற இமாம்களைப் பின்பற்றாதவர்களை கைர்-முகல்லித் என்றும் அழைப்பார்கள். அவர்களுக்கு இடையே கல்வி சார்ந்த விவாதங்களும் வாதப் பிரதிவாதங்களும் சாதாரணமாக நடந்து வந்தன.

பட்டாலாவாசிகள் இந்த சலசலப்பை பார்த்தபோது, அவர்களின் பார்வை ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்கள் மீது விழுந்தது. அதாவது, அன்னாரை அவருக்கு எதிராக நிறுத்த வேண்டும் என்று எண்ணினர். மேலும், அன்னாரால் மட்டுமே இந்த இளம் மௌலவியின் வாயை அடைக்க முடியும் என்று அவர்கள் உறுதியாக நம்பினர். ஹஸ்ரத் அக்தஸ் அவர்கள் மிகவும் சிரமப்பட்டு இந்த விவாதத்திற்குச் சம்மதிக்க வைக்கப்பட்டார்கள். அன்னார் (அலை) முதலில் தயாராக இல்லை.

எப்படியிருப்பினும் மக்கள் மிகவும் வற்புறுத்தியதால் அன்னார் (அலை) தயாராகி விட்டார்கள். அன்னார் (அலை) மார்க்க விவாதத்திற்காக அழைத்துச் செல்லப்பட்டார்கள். இரு தரப்பிலிருந்தும் ஆதரவாளர்களின் ஒரு பெரிய கூட்டம் கூடியிருந்தது. இரு வேறு பிரிவுகளைச் சேர்ந்தவர்களும் தங்களின் ஆதரவாளர்களுடன் வந்து குவிந்திருந்தனர்.

இங்கு எழுதப்பட்டுள்ளது. அதாவது, இன்று குறிப்பாக முகல்லித் பிரிவினர் தங்களின் மார்க்க அறிஞர் விவாதத்திற்கு அழைக்கப்பட்டுள்ளதால் தங்களுக்குத்தான் நிச்சயம் வெற்றி கிடைக்கும் என்று நம்பினர். அது இயல்பானதே. கைர் முகல்லித் பிரிவினரோ, 'இன்று நாமே வெல்வோம்; ஏனென்றால் இன்று ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் வருகை தந்துள்ளார்கள்; அன்னாருக்கு முன்னால் எதிராளி, வலையில் சிக்கிய சிட்டுக் குருவியைப் போல செயலிழந்து போவான்; அன்னாரின் பிடி அப்படிப்பட்டது என்று நினைத்தனர்.

எவ்வாறிருப்பினும், அன்னார் (அலை) விவாதக் களத்தை அடைந்ததும், 'உங்களுடைய கருத்துக்கள், சிந்தனைகள் மற்றும் நம்பிக்கைகள் என்ன? அவற்றுக்கு மறுப்புரை வழங்குவதற்கு ஏதுவாக அவற்றைச் சொல்லுங்கள் என்று மௌலவி முஹம்மது ஹுஸைன் பட்டால்வி ஸாஹிபிடம் அன்னார் (அலை) கேட்டார்களா. அதற்கு, மௌலவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவி ஸாஹிப், 'என்னைப் பொறுத்தவரை திருக்குர்ஆன் முதன்மையானதாகும்; அதற்குப் பிறகு ஹதீஸ் மற்றும் ரஸூல்(ஸல்) அவர்களின் கூற்றுகள் ஆகும். இதன் அடிப்படையிலேயே தீர்ப்பு வழங்கப்படும்' என்று கூறினார்.

ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்கள் மௌலவி ஸாஹபின் இந்த நம்பிக்கையைக் கேட்டவுடன் கூறினார்கள்:

'என்னைப் பொறுத்தவரை உங்களுடைய இந்த எண்ணத்திலும், கருத்திலும் எவ்வித ஆட்சேபனை செய்வதற்கும், மறுப்பு தெரிவிப்பதற்கும் எந்த விஷயமும் இல்லை. எந்த மக்கள் அன்னாரை அழைத்துச் சென்றிருந்தார்களோ அவர்கள் இவ்வாறு எண்ணியிருந்தனர்; அதாவது, 'இன்று இவர் விவாதக் களத்தில் எதிராளியைத் தோற்கடித்து வெற்றிக் கொடி நாட்டுவார்' என்று கருதியிருந்தனர். அன்னார் (அலை) நேரடியாக மௌலவி ஸாஹிபிடம், 'நீங்கள் கூறியதில் எனக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை' என்று கூறிவிட்டார்கள். எனவே, என்ன ஆனாலும் மௌலவி ஸாஹிபை விவாதக் களத்தில் அவமானத்திற்கும், வெட்கத்திற்கும் உள்ளாக்க வேண்டும் என்று நினைத்தவர்களின் எண்ணம் நிறைவேறவில்லை. ஆனால், ஹஸ்ரத் அக்தஸ் அவர்கள் வெற்றி மற்றும் தோல்வியின் பெருமை மற்றும் அவமானங்கள் போன்றவற்றிலிருந்து முற்றிலும் விலகி, மிகுந்த பணிவையும், அடக்கத்தையும் வெளிப்படுத்தியவாறு அங்கிருந்து திரும்பி வந்துவிட்டார்கள்.

ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்கள் இந்த நிகழ்வைக் குறிப்பிட்டவாறு எழுதுகின்றார்கள்:

'1868 அல்லது 1869-ல் உருது மொழியில் ஒரு விநோதமான இல்ஹாம் எனக்கு இறங்கியது, அதை இதே இடத்தில் எழுதுவது உகந்ததாக இருக்கும். இந்த இல்ஹாம் ஏற்படுவதற்குச் சில நாட்களுக்கு முன்புதான், இந்த எளியவனின் பள்ளிப் பருவத்துத் தோழரான மௌலவி அபூ ஸயீத் முஹம்மது ஹுஸைன் பட்டால்வி ஸாஹிப், புதிய மௌலவியாகப் பட்டம் பெற்று பட்டாலாவுக்கு வந்திருந்தார். அவரின் சிந்தனைகள் பட்டாலா வாசிகளுக்குக் கடினமாக இருந்தன. அப்போது ஒரு நபர் மௌலவி ஸாஹிபுடன் ஒரு விவாதப் பொருளில் விவாதம் செய்யுமாறு இந்த எளியவனை (என்னை) மிகவும் வற்புறுத்தினார்.


எனவே, அந்த நபரின் தூண்டுதலால், இந்த எளியவன் மாலையில் அந்த நபருடன் மௌலவி ஸாஹிபின் இல்லத்திற்குச் சென்றேன். அங்கு மௌலவி ஸாஹிபின் தந்தையாரை பள்ளிவாசலில் சந்தித்தோம்.

சுருக்கமாகக் கூறின், மௌலவி ஸாஹிபின் அந்த நேரத்துப் பேச்சைக் கேட்டபோது, அவரின் உரையில் மார்க்கத்திற்கு முரணான அல்லது ஆட்சேபனைக்குரிய எவ்வித அநியாயமும் இல்லை என்பதை இந்த எளியவன் அறிந்து கொண்டேன். எனவே, அல்லாஹ்விற்காக அந்த விவாதத்தைக் கைவிட்டேன்.

இதன் காரணமாக, பதினோராவது நாளில் அல்லாஹ் தனது இல்ஹாம் மற்றும் உரையாடலின் மூலம் இந்த விவாதத்தைக் கைவிட்டதைக் குறித்து இவ்வாறு சுட்டிக் காட்டினான்: 'உம்முடைய இந்தச் செயலால் உமது இறைவன் திருப்தியடைந்தான்; அவன் உமக்கு அளவற்ற அருள் புரிவான். எந்த அளவு எனில், அரசர்கள் உம்முடைய ஆடைகளில் இருந்து பரக்கத்தைத் தேடுவார்கள்."

ஹஸ்ரத் ஷேக் யஃகூப் அலி ஸாஹிப் இர்ஃபானி (ரலி) அவர்கள் இந்த நிகழ்வை 'ஹயாத்தே-அஹ்மது' என்ற தமது நூலில்

இதன் தொடர்ச்சி 11-ம் பக்கம்...


**National Watch Company**
**Sales & Service**

B. Mohamed Adil
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM 99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT 99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, { opp. Karuna Clinic } Tirunelveli-627005


Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad